
# தமிழரசு


16-1-1980 50 காசு.



7வது
அகில இந்திய
சுற்றுலா
வர்த்தகப்
பொருட்காட்சி
1980



2.1.80 அன்று
சென்னையில்
மாண்புமிகு
செய்தித் துறை
அமைச்சர்
ஆர்.எம். வீரப்பன்
அவர்கள் தலைமையில்
மேதகு ஆளுநர்
துவக்கி வைத்தார்



பூம்புகார்
எழுநிலை மாட வடிவில்
உள்ள
நுழை வாயில்



திருக்கழுக்குன்றத்தில்
கழுகு உணவுண்ணும்
காட்சியைச்
சித்தரிக்கும்
சுற்றுலாத் துறை
அரங்கு

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

— ஔவையார்




தமிழரசு

மலர்: 10 இதழ்: 14

16-1-1980

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

வந்த விருந்தினரைப் போற்றி, இனிவரும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன், வானுலகத்தில் உள்ள தேவர்க்கும் நல்ல விருந்தினனாவான்.



# உழவர் திருநாள்



—பாவேந்தர் பாரதிதாசன்

உழவேதலை என்றுணர்ந்த தமிழர்
விழாவே இப் பொங்கல் விழாவாகும்! காணீர்
முழவு முழங்கிற்றுப் புதுநெல் அறுத்து
வழங்கும் உழவர்தோள் வாழ்த்துகின்றாரே!

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்என்ற சொல்லிற்
பழுதுண்டோ? காணீர் பழந்தமிழர் ''நாங்கள்
உழவரே'' என்றுவிழா ஒப்பி மகிழ்ந்தாரே

உய்யோமோ செங்கதிரே நீடுபனி ஓட்டிவந்த
தையே முதற்றிங்கள் தைம்முதலே ஆண்டுமுதல்
கையே துணையாகும் கைத்தொழிலே ஆக்கமென்று
செய்யே தரும்செந்நெல் சேயிழையார் குற்றினரே

தேரிழுப்பும், செம்பெடுப்பும் அல்லவிழா! அன்னவெல்லாம்
ஓரிழுப்புநோய்!—பொதுவின் உள்ளவிழைவே விழா!
ஏரெழுப்பும் புத்தம் புதுச்செல்வம் இட்டபால்
பாரழைக்கப் பொங்கற் பயன்மணக்க வைத்தனரே!

அழகின் பரிதி உயிர்; அவ் உயிரை
முழுதும் நிறுத்தும் அமிழ்துதான் முத்து
மழை! உலகுதாய்! வளர்ப்புப் பாலே பயன்! நெய்
ஒழுக உண்டார் பொங்கல் எல்லாரும் ஒன்றியே!

ஆடைஎல்லாம் அந்நாள் மடிப்பு விரித்தவைகள்!
ஓடைஎனப் பாலும், உயர்குன்றரிசியும்
வாடைநெய்யும் பொங்கி வழியவே பொங்கலிட்ட
நாடுதான் கொண்ட நனிமகிழ்ச்சி செப்பரிதே!

இகழ்ச்சி அணுகா திலையில் அமிழ்தைப்
புகழ்ச்சிசொல்லிப் புத்துருக்கு நெய்யொழுக உண்ட
மகிழ்ச்சியே இந்நாள்போல் எந்நாளும் மல்க
மிகச்சீ ரியதமிழும் மேன்மையுற்று வாழியவே!





# "உலகத்தின் கேள்வி"

—பேரறிஞர் அண்ணா.

"என்னுடைய பத்தாவது வயதில் நடந்த ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. என்னுடைய உறவினர் வீடு. அவர் வீட்டிலே ஒரு நாள் அந்தக் குடும்பத்திலே ஒரு பெண்மணி புகைப் படம் எடுத்துக் கொள்ளப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டு, அந்தத் தெருவே திரண்டு போயிற்று.

"அந்த வீட்டுக்கரசி தன்னுடைய வீட்டிலே இருந்த எல்லாவிதமான நகைகளையும் போட்டுக் கொண்டு புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். இவ்வளவு நகைகளைப் போட்டுக் கொண்டார்களே தவிர, அவர்களுடைய முகத்திலே உண்மையான மகிழ்ச்சி இல்லை. அதை என்னாலே அப்பொழுது உணர்ந்து கொள்ள முடியவில்லை. இப்பொழுது எண்ணுகிற பொழுது தான் அதனுடைய முழுக் கருத்தும் எனக்குத் தெரிகிறது. அவர்கள் மகிழ்ச்சி இல்லாமல் நிரம்ப அணிகலன்களைப் போட்டுக் கொண்டு புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். நான் அதைப் பார்த்துவிட்டு வீட்டிற்குச் சென்றேன்.

"பிறகு வீட்டிலே உள்ளவர்கள், 'எங்கே சென்றாய்?' என்றார்கள். 'இன்ன இடம் சென்றிருந்தேன். இன்னது நடந்தது' என்று சொன்னேன். 'ஐயோ பாவம்!' என்றார்கள். எனக்கு இன்னமும் ஐயப்பாடாகி விட்டது. அவர்கள் போட்டுக் கொண்டிருந்ததோ அருமையான ஆபரணங்கள். எடுத்துக் கொண்டதோ புகைப் படம். வீட்டிற்கு வந்து கேட்டால் 'ஐயோ பாவம்' என்கிறார்கள். 'என்ன? என்ன?' என்று நச்சரித்தேன். உடனே மெல்லச் சொன்னார்கள்.

"யாருக்கும் சொல்லிவிடாதே. அந்த வீட்டிற்கு நிரம்பக் கடன் வந்துவிட்டது. கடன்காரர்கள் தொல்லை தாங்க மாட்டாமல் நகைகளையெல்லாம் விற்றுவிடப் போகிறார்கள். விற்பதற்கு முன்னாலே ஒரு தடவை ஆசைதீரப் போட்டுக் கொள்ளலாம். எங்களிடத்திலே இன்ன நகைகள் இருந்தன என்பதைப் பதிவு செய்வதற்காகப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்" என்று சொன்னார்கள்.

"இது ஒரு வீட்டுக்கு நேரிட்டபோது எவ்வளவு வேதனையோ, அதைவிட ஆயிரக் கணக்கான வேதனை; நாம் போட்டுக் கொண்டிருந்த அணிகலன்களையெல்லாம் ஒருமுறை புகைப்படமாக ஆக்கி, திருக்குறளாக ஆக்கி இருக்கிறோம். ஆனால், அத்தனை அணிகலன்களும் உலகச் சந்தையிலே ஏலத்திற்குப் போய் விட்டன. புகைப் படத்தைப் பார்த்து—இதோ பாருங்கள் அட்டிகை, அதோ கையில் உள்ளதே அது வைரக்கல் வங்கி என்று அந்த வீட்டுக்கார அம்மையார், வறிய நிலையிலே பிறகு கேட்கிற நேரத்திலே காட்டுகிறபொழுது — 'இதெல்லாம் இருந்ததா? நீங்களா போட்டுக் கொண்டிருந்தீர்கள்?' என்று கேட்பார்களே அதே போலத் தான் உலகம் நம்மைப் பார்த்துக் கேட்கிறது. 'வள்ளுவரா உங்களுடைய நாட்டில் இருந்தார்? திருக்குறளா உங்களுடைய நூல்?" என்று.


*(தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் 9—6—67 அன்று திருவள்ளுவர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)*

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்.*

உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன், வானுலகத்தில் உள்ள தெய்வமுறையில் வைத்து மதிக்கப்படுவான்.

*கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்*
*வேட்ப மொழிவதாஞ் சொல்.*

**சொல்லும் போது கேட்டவரைத் தன்வயப்படுத்தும் பண்புகளுடன் கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப் படுவது சொல்வன்மையாகும்.**



# எளியவர்களுக்கு இசை எட்டவேண்டும்


**மாண்புமிகு செய்தி- அறநிலையத் துறை அமைச்சர்**
**திரு இராம. வீரப்பன்**

தமிழ் இசைச் சங்கத்தின் சார்பில் நடைபெறும் தமிழ் இசை முப்பத்து ஏழாம் விழாவிற்கு வருகை தந்திருக்கும் நம் அனைவரையும் வரவேற்கும் முறையில் ஒரு மிகச் சிறந்த ஆராய்ச்சி மிக்க-ஆற்றலும் உணர்ச்சியும் பொங்குகின்ற ஒரு உரையை நிகழ்த்தி நம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைத்திருக்கின்ற தமிழ் இசைச் சங்கத்தின் தலைவர் மாண்புமிகு நீதிபதி மகராஜன் அவர்களே! இந்த ஆண்டுத் தமிழ் இசைச் சங்கத்தினுடைய இசைப் பேரறிஞர் என்ற விருதினைப் பெறுவதற்காக இங்கே வருகை தந்து இந்த விழாவிற்குத் தலைமையேற்றிருக்கின்ற தமிழகத்தின் புகழ்மிக்க கலைஞர்களில் ஒருவரான திரு முருகபூபதி அவர்களே! தமிழ் இசை என்பதை ஒரு இயக்கமாக இந்த நாட்டில் உருவாக்கி முப்பத்து ஏழு ஆண்டுகளாக அந்த இயக்கத்தை அணையாமல் காப்பாற்றி வருகின்ற செட்டிநாட்டு அரசர் குடும்பத்தைச் சார்ந்த பெரியவர்களே! இங்கு குழுமியிருக்கின்ற இசைவாணர்களே! அறிஞர் பெருமக்களே! பெரியோர்களே! தாய்மார்களே! தமிழ் இசைச் சங்கத்தின் இசை விழாவினைத் தொடக்கிவைக்கின்ற ஒரு பெரும்பணியை—பெருமைதரும் பணியை எனக்கு அளித்ததற்கு இந்தத் தமிழ் இசைச் சங்கத்தினருக்கு நான் என்னுடைய வணக்கத்தினையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே இசையைப் பற்றிய இலக்கணம் தெரிந்த பேரறிஞர் அவர்கள் தலைமையேற்கின்றார்கள். இசைப்பேரறிஞர்கள், இசைப் பெரும்புலவர்கள் பலர் இங்கே வந்திருக்கின்றார்கள். ஆனால், இத்தகைய மாமன்றத்தில் நான் எந்தப் பிரதிநிதி என்ற முறையிலே நிற்கின்றேன் அல்லது எந்தப் பிரதிநிதி என்ற முறையிலே இதிலே கலந்து கொள்ளலாம் என்ற முடிவிற்கு வந்தேன் என்பதனை உங்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். பெருமக்களும் ஆராய்ச்சியிலே வல்லவர்களும் இசைப்பேரறிஞர்களும் தமிழ்ப் புலவர் பெருமக்களும் சான்றோர்களும் ஆன்றோர்களும் இத்தகைய தமிழ் இசை விழா நாட்களிலே தமிழ் இசைச் சங்கத்திலே இதுவரையில் 36 ஆண்டுகளாகக் கலந்துகொண்டு சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தமிழ் இசையைக் காக்க வேண்டிய அவசியத்தை—தமிழ் இசையை வளர்க்கவேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில் நீங்கள் யாருக்காக இந்த இசையைக் காக்க வேண்டும் என்கின்றீர்களோ, யாரிடத்திலே இந்த இசை போய்ச் சேரவேண்டும் என்று கருதுகின்றீர்களோ, அத்தகைய கோடிக்கணக்கான பாமர மக்களிலே இருந்து ஒருவனை இந்த விழாவிற்கு வரவழைத்து இதனைத் துவக்கச் சொன்னால், அந்தச் சாதாரண மக்களுடைய பிரதிநிதி என்ன சொல்லுவான் என்பதனை இப்பெருமக்கள் தெரிந்துகொள்ளுகின்ற வாய்ப்பாகத்தான் இதனைக் கருதி இந்தப் பணியினை நீங்கள் என்னிடத்திலே ஒப்படைத்திருக்கின்றீர்கள் என்று நான் நினைத்துக்கொண்டு இந்த விழாவினைத் தொடங்கி வைப்பதற்காக உங்கள் முன்னாலே நிற்கின்றேன்.

## தமிழ் இசை இயக்கமும் என் இளமை நினைவுகளும்

இன்றைக்கு முப்பத்து ஏழாவது தமிழ் இசை விழாவினை நான் தொடங்கி வைக்கின்ற பொறுப்பிலே நிற்கின்றபோது 1942 ஆம் ஆண்டிலே நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தாலும் பிரியாமல், நம்முடைய உணர்வோடு உணர்வாய்க் கலந்துவிட்ட செட்டி நாட்டு அரசர் அண்ணாமலையார் அவர்கள் தமிழகத்திலே தமிழ் இசையைக் காக்கவேண்டும் என்பதற்காக ஒரு இயக்கம் கண்டபோது நான் சென்னையிலே இல்லை. தமிழகத்தினுடைய பல்வேறு நகரங்களிலே காலஞ்சென்ற முத்தமிழ்க் கலாவித்துவ ரத்தினம் ஔவை டி.கே. சண்முகம் அவர்களுடைய நாடகக் குழுவில் பதின்மூன்று அல்லது பதினான்கு வயதுப் பாலகனாய் அல்லது சிறுவனாய் நடித்துக்கொண்டிருந்தபோது இந்தத் தமிழ்இசை இயக்கத்திற்கு ஒரு தொண்டனாக இருந்தேன் என்ற பெருமை எனக்கு உண்டு என்பதனை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளுவதில் நான் பெருமைப்படுகின்றேன். எங்கோ இருந்தேன்! சென்னையிலே நடைபெறுகின்றது விழா; இசை மாநாடு ஆனால் இதனுடைய எதிரொலி, தமிழ் பேசுகின்ற மக்கள் எங்கெல்லாம் வாழ்ந்தார்களோ, அங்கெல்லாம் ஒலித்தது. தமிழர்கள் என்று தம்மை எண்ணிக்கொண்டிருக்கின்ற தமிழர்களின் இதய நாடியைத் தடவிய அந்த இயக்கம், என் போன்ற சிறுவர்களையும் இளைஞர்களையும் அன்றைக்குத் தொட்டது. ஒரு சம்பவத்தைச் சொன்னால், இங்கே இருக்கின்ற இசைப் பேரறிஞர்கள்—பெரும்புலவர்கள் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும். காலம்சென்ற இசையரசு தண்டபாணி தேசிகர் அவர்கள் 1942 அல்லது 1943ஆம் ஆண்டிலே அனைத்து இந்திய வானொலியிலே பாடுகின்றார்கள் என்றால், அன்றைக்கு நான் நடிகனாய்ப் பணியாற்றிக் கொண்டிருந்த அந்த நாடகமன்றத்தில்—நாங்கள் குடியிருக்கின்ற வீட்டில் அல்லது நாடகத்தை நடத்துகின்ற அரங்கில் ''இன்றைக்கு இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் வானொலியிலே தமிழ் இசை பாடுகின்றார்'' என்று கையினாலே தட்டிகள் எழுதி மாட்டிவைத்து அந்தத் தமிழ் இசையின் உணர்வைப் பரப்ப வேண்டும் என்ற அந்த அற்புதமான உணர்வினுக்கு நானும் என் போன்றவர்களும் எங்களை ஆட்படுத்திக்கொண்டவர்கள். அந்த உணர்விற்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்ற நேரத்தில் தமிழ் இசைச் சங்கத்தின் முப்பத்து ஏழாம் ஆண்டு இசைவிழாவில் நான் துவக்குகின்றவனாக வருவேன். அதுவும் மாநிலத்திலே ஒரு அமைச்சனாக இருந்து இதிலே நான் பங்கு ஏற்பேன் என்று நாங்கள் எல்லாம் எண்ணிப் பார்க்கவில்லை. இத்தகைய வாய்ப்பை-பெருமையை என்னைப் போன்றவர்களுக்கு ஏற்படுத்தித் தந்த தந்தை பெரியார் அவர்களை—பேரறிஞர் அண்ணா அவர்களை—செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் போன்றவர்களை இன்றைக்கு நான் எண்ணி அவர்களுக்கெல்லாம் வணக்கம் செலுத்துகின்றேன்.



## தமிழ் இசைச் சங்கத்தின் தலைவர்

என்னைப் போன்றவர்கள் உணர்ச்சிகரமாகப் பேசுவோம் என்று நாங்கள் எண்ணிக்கொண்டிருந்தோம். தமிழ் இசையைப் பற்றிப் பேச்சு எடுத்தால் உணர்ச்சி பொங்குகின்ற கருத்துக்களை எடுத்துவைப்போம் என்று தெரிந்தோ தெரியாமலோ அல்லது காரணம் இருந்தோ காரணம் இல்லாமலோ எங்களுடைய இயக்கத்தவர்களுக்கு அந்தப் பட்டத்தைச் சூட்டிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு வரவேற்புரை ஆற்றிய மாண்புமிகு நீதிபதி அவர்களை நினைக்கும்போது அவர்களைக் கொண்டுபோய் இத்தனை ஆண்டுக் காலம் நீதிமன்றத்திலே உட்கார வைத்து விட்டார்களே—இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காக ஆற்றல்மிக்க வரலாற்றை எடுத்து வைத்து வாதாட வேண்டியவர்களையெல்லாம், தமிழ்ச் சமுதாயத்திற்குப் பாதுகாவலர்களாக இருக்க வேண்டியவர்களையெல்லாம், ஆற்றல்மிக்க சக்தியாக விளங்குகின்றவர்களை எங்கோ நாளெல்லாம் வக்கீல்கள் நடத்துகின்ற வாதத்தைக் கேட்டு இயந்திரமாக மாறுகின்ற ஒரு சூழ்நிலைக்கு ஆளாக்கிக் கடந்த முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்படாமல் செய்துவிட்டார்களே என்றுதான் நான் எண்ணிக்கொண்டிருந்தேன். இங்கே சிலையாக இருக்கின்ற செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் அவர்கள் இருந்தால், சர் ஆர்.கே. சண்முகம் அவர்கள் இருந்தால், இந்தத் தமிழ் இசைக்காகப் பாடுபட்ட பெருமக்கள் எல்லாம் இருந்தால், தமிழ் இசையின் மூலம் தமிழ்நாடும் தமிழ் மக்களும் தமிழ்மொழியும் காப்பாற்றப்படும் என்ற அந்த நம்பிக்கையோடு பாடுபட்ட அந்தத் தலைவர்கள் எல்லாம் இருந்தால், இங்கே நம்முடைய நீதிபதி அவர்கள் உரையாற்றினார்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை, எடுத்துவைத்தார்களே ஆணித்தரமான கருத்துக்களை—அந்த ஆவேச உணர்வோடு ஆனால் அமைதியாக—அழுத்தமாக-இக் கருத்துக்காகக் கேட்டு அவர்கள் எவ்வளவு மகிழ்ந்திருப்பார்கள். அவர்கள் இல்

*வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்*
*தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.*

**வெற்றியே பெறுவதானாலும் சூதாட்டத்தை விரும்பக் கூடாது. வென்ற வெற்றியும், தூண்டில் இரும்பை இரை என்று மயங்கி மீன் விழுங்கினாற் போன்றது.**

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

பெற்ற தாயின் பசியைக்கண்டு வருந்த நேர்ந்தாலும், சான்றோர் பழிப்பதற்குக் காரணமான இழிவுள்ள செயல்களை ஒருவன் செய்யக்கூடாது.

லையே என்ற ஏக்கம் எனக்கு இப்போது ஏற்படுகின்றது. அண்ணாமலையார் அவர்கள் இந்த இயக்கத்தை ஆரம்பித்தபோது நம்முடைய நீதிபதி அவர்கள் அங்கே நீதிபதியாக அல்லவா இருந்தார்கள்! உள்ளத்திலே பொங்குகின்ற கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியாமல் வாய்க்குத் தடைபோட்டு அல்லவா வைத்திருந்தோம்! அதனால் அல்லவா முப்பத்து ஏழு ஆண்டுகள் கழித்தும் இன்றைக்கும் நாம் தமிழ் இசைக்காக விழா நடத்தி வாதங்களை நடத்திக்கொண்டிருக்கின்றோம்; நடத்திக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். எங்கே—தமிழ் நாட்டில்? நம்முடைய மொழி என்ன? தமிழ்; நமக்குப் பெயர் என்ன? தமிழர்கள்; நாம் எதற்காகக் கூடியிருக்கிறோம்? தமிழ் இசையைக் காப்பதற்கு, மாண்புமிகு நீதிபதி அவர்களே! பெரியோர்களே! உலகத்திலே வேறு எந்த நாட்டிலே இந்த விதிமுறை இருக்கிறது என்பதைத் தயவு செய்து எங்களைப் போன்ற சாதாரண மானவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள், ஜெர்மானிய நாட்டிலே ஒரு விழா உண்டா? ஜெர்மானிய இசையைக் காப்பதற்கு; இங்கிலாந்து நாட்டிலே ஒரு விழா உண்டா? ஆங்கில மொழியின் இசையைக் காப்பதற்கு; விடுதலைக்குப் பெயர்பெற்ற சுதந்தர வீரர்களைப் படைத்த பிரான்ஸ் நாட்டிலே உண்டா? சொல்லுங்கள். இந்திய துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலங்களிலே யாவது உண்டா? வங்காளத்திலே உண்டா? இந்தியிலே உண்டா? ஏன் பக்கத்திலேயே இருக்கின்ற கருநாடகத்திலே உண்டா? ஆந்திரத்திலே உண்டா? தமிழகத்திலே தானே தமிழ் இசை வேண்டும் என்று ஒரு இயக்கத்தை முப்பத்தேழு ஆண்டுகளாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.


இவ்வுரையைக் கேட்டு நம் சிலம்புச் செல்வர் மாண்புமிகு டாக்டர் ம.பொ.சி. அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியடைகின்றார்கள்! புன்னகையுடன் முகம் மலர அல்லவா இங்கே வீற்றிருக்கிறார்கள். கதர்ச்சட்டையைப் போட்டுக்கொண்டு ம.பொ.சி. தமிழைப் பற்றிப் பேசலாமா என்று கேட்டார்கள் தமிழ்நாட்டில்; கதர்ச்சட்டைக்கும் தமிழுக்கும் காததூரம் ஆயிற்றே! பேசலாமா தமிழைப்பற்றி என்று காங்கிரஸ்காரர்கள் கேட்டார்கள். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு நீதிபதி அவர்கள் எங்களுடைய வேலைகளை எல்லாம் எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்று பார்க்கின்றபோது மறைந்த ஆன்றோர்களை —சான்றோர்களை — அண்ணாமலையார் போன்றவர்களையெல்லாம் நாங்கள் எண்ணி எண்ணி நீங்கள் இந்தச் சமுதாயத்திலே எடுத்துக்கொண்ட முயற்சி எத்தகைய வெற்றியைப் பெற்றிருக்கிறது பாருங்கள் என்று சொல்லுகின்றபோது நான் மாண்புமிகு நீதிபதி அவர்களையே சான்றாகக் காட்ட விரும்புகிறேன்.



**எது வாழும்?**

நான் முன்னாலே எடுத்துக் காட்டியதைபோல் இந்த நாட்டிலே கோடிக்கணக்கான—சாதாரண பாமர மக்களுக்காகத்தான் இசை என்றால், அந்த இசைதான் வாழும். ஏதோ சில சதவிகிதம் படித்த வசதி வாய்ப்புக்களைப் பெற்றிருக்கின்ற ஆயிரக்கணக்கானவர்களுக்கு அல்லது இலட்சக் கணக்கானவர்களுக்கு மட்டுமே அல்லாமல் இந்த நாட்டிலே இருக்கின்ற கோடிக்கணக்கான—பெரும்பான்மை மக்கள் எதனை ஏற்றுக்கொள்ளுகிறார்களோ அந்த இசைதான் காலாகாலத்திற்கும் இருக்கும். இல்லையென்றால் நாம் எத்தனை விழாக்கள் நடத்தினாலும் எத்தனை ஆராய்ச்சி உரைகளை நாம் நடத்தியிருந்தாலும் அது போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேராது. தங்க மாளிகையின் உயர்ந்த கோபுரத்திலே உட்கார்ந்துகொண்டு நாம் விவாதித்துக்கொண்டு இருந்தால் கீழே இருக்கின்ற பாமர மக்கள், ''யாரோ நாலுபேர் கொடுத்து வைத்தவர்கள். உயரே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள்'' என்று அவன் அவன் தன் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருப்பான். அவ்வாறு அவன் வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கிற நேரத்திலேதான் பரத நாட்டியம் காஷ்மீரத்திலே இருந்து வந்தது என்ற கருத்தும் இழைக்கப்படுகின்ற காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலையை—நீங்கள் தயவு செய்து மனத்திலே எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள். முப்பத்தேழு ஆண்டுகள் இந்த இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கின்றோம். டாக்டர் ம.பொ.சி. அவர்கள் கடந்த ஆண்டு சாத்திரமும் சரித்திரமும் இணையாமல் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். சாத்திரம் கற்றவர்கள், சரித்திரம் கற்கவில்லை, சரித்திரம் கற்றவர்கள் சாத்திரத்தைத் தெரிந்து கொள்ள முயலவில்லை. இந்த இரண்டும்

இணைந்தால்தான் இந்த நாட்டிற்கு விமோசனம் என்று எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அதைத் தான் எங்களைப் போன்ற சாதாரண மக்கள் எதிர்பார்க்கிறோம். இசையைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்துகின்றீர்கள்! பண் ஆராய்ச்சி நடைபெறுகின்றது. இவற்றையெல்லாம் நாங்கள் வேண்டாம்என்று சொல்லவில்லை. ஆனால் முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்னாலே செட்டிநாட்டு அரசர் அவர்கள் எந்தக் கருத்தோடு இந்த இயக்கத்தைத் துவக்கினார்களோ அதிலே நாம் வெற்றி பெற்றோமா என்றால் இன்றைக்குக்கூட இதனைப்பற்றி வாதிடுகின்ற நிலையிலே தான் வளர்ந்திருக்கின்றோமே தவிர — சிலபேர் இதனை ஏற்றுக்கொள்ளுகின்ற அளவிற்கு வந்திருக்கிறார்களே தவிர வேறு வளர்ச்சியில்லை. தமிழ் நாட்டில் தமிழ் இசை என்பது, உரிமை இதைத் தவிர வேறு எந்தப் பிரச்சினைக்கும் இடமில்லை; எந்த இசையை யார் வேண்டுமானாலும் விரும்பலாம். அதிலே தவறில்லை.



ஆனால் எங்களிடத்திலே இந்த இசையைக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் இந்த விழாவின்மூலம் நான் வைக்கின்ற வேண்டுகோள். இந்த இசை இன்றைக்கு எங்கே இருக்கிறது? அது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? என்று நான் சரியாக-துல்லியமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் எங்களைப் போன்ற சாதாரணமானவர்களுக்கு எட்டாத தூரத்திலே இருக்கின்றது. அதனை எங்களிடத்திலே கொண்டு வாருங்கள்; அல்லது எங்களையாவது அந்த இடத்திற்கு உயர்த்துங்கள். இந்த இரண்டையும் நீங்கள் செய்யவில்லையானால் தமிழ் இசை தமிழ் இசை என்று ஆண்டிற்கு ஒரு முறை கூடிப் பேசுவதுதான் பலன் அளிக்குமே தவிர வேறு நாம் நிச்சயமான பலனை எதிர்பார்க்க முடியாது.

இன்றைக்கு இசையைப் பற்றிப் பேசுகின்றபோது எது சாஸ்திரிய சங்கீதம்? எது கர்நாடக இசை? எது இந்தக் காலத்திலே கலப்படமாகியுள்ள இசை என்ற ஆராய்ச்சிகளில் எல்லாம் இசை அறிஞர்கள் ஈடுபடுகின்றார்கள். எங்களுக்கு இதுபற்றி ஒன்றுமே தெரியாது. எங்களுக்கு இசை என்பதற்கு அடிப்படை இலக்கணம் என்னவோ அதுதான் தெரியும். இசை என்பது, இன்பத்தின் அடிப்படையிலே வந்தது என்று நீதிபதி அவர்கள் சொல்வார்களேயானால் அந்த இன்பத்தை எங்களுக்கு அளியுங்கள். இசை என்பது நம்மை இசைய வைப்பது; அதனால்தான் அதற்கு இசை என்று பெயர் என்று நீங்கள் எடுத்துச் சொல்வீர்களேயானால் எங்களை இசைய வையுங்கள். எங்களை உங்கள் இசை இன்பத்திற்கு இழுத்துச் செல்லுங்கள். ஏனென்றால் நாங்கள் எங்கோ இருக்கின்றோம், நீங்கள் எங்கோ இருக்கின்றீர்கள். தயவு செய்து இந்தச் சிந்தனையை உங்கள் முன்னாலே நான் வைக்க விரும்புகின்றேன். இந்த இயக்கத்திற்காக ஈடுபட்டுக் காலகாலமாகப் பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற ஒரு தொண்டன் என்ற முறையிலே கேட்கின்றேன். நாம் சிந்திக்கவேண்டிய கட்டத்திற்கு இப்போது வந்திருக்கின்றோம். இன்றைக்கு இசையைப் பற்றி விமர்சிக்கின்றபோது, இங்கே பெரும் புலவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்; நேற்றுக்கூட இந்தியக் குடியரசின் துணைத்தலைவர் அவர்கள், இந்த சாஸ்திரிய சங்கீதம் வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றார்கள். நாங்கள் அந்தக் கருத்திலிருந்து மாறவில்லை. ஆனால் எங்களை இசைய வையுங்கள், எங்களுடைய அன்பைப் பெறுங்கள், எங்களுக்கு அரவணைப்புத் தாருங்கள்; கோடானுகோடி மக்கள் இந்த நாட்டிலே வாழ்கின்றார்கள். பாமர மக்களான அவர்களுக்கு இந்த இசையின் ஆற்றலை உணர்த்துங்கள். இல்லையானால் அவர்களை யாரோ இழுத்துக் கொண்டு போகின்றார்கள் என்று நீங்கள் கவலைப்பட்டால் காரியம் நடக்காமல் இருக்காது.


இந்த இசைப் பேச்சு வருகின்றபோதெல்லாம் முன்னாலே வந்து நிற்கின்ற ஒன்று, திரைப்பட இசை. சென்ற ஆண்டு டாக்டர் ம.பொ.சி. அவர்கள், முன்னாலே பேசியவர்கள் ''பாப்மியூசிக்'' கைப் பற்றிப் பேசியமையால் அதனை எடுத்துக் கொண்டு கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். நான் அதற்குக் கூடப் போகவில்லை. திரைப்பட இசை, இன்றைக்கு இசையைக் கெடுத்துவிட்டது என்கின்ற வாதத்தை வைத்து நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். நான் உங்களுக்கு ஒரு சிறிய கணக்கைச் சொல்லுகிறேன். இந்தத் தமிழ் இசை தோன்றிய முப்பத்தேழு ஆண்டுக் காலத்தில் அல்லது நாற்பது ஆண்டுக்காலத்தில் ஏறத்தாழ திரைப்படத் துறையிலே இருபதாயிரம் பாடல்கள் வந்திருக்கின்றன. இது சாதாரண விஷயம் அல்ல. அவற்றிற்கு

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று; நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்பு கொண்டு நட்புச் செய்வதே நட்பு ஆகும்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

தன்னை அடுத்த பொருளைத் தன்னிடம் காட்டும் பளிங்குபோல், ஒருவனுடைய நெஞ்சத்தில் மிகுந்துள்ளதை அவனுடைய முகம் காட்டும்.




இசையும் அமைக்கப்பட்டிருக்கின்றது. 40 ஆண்டுகளுக்கு முன்னாலே நாம் சங்கீதக் கச்சேரியிலே போய் உட்கார்ந்தால் அந்த மிகப் பெரிய வித்துவான் வாதாபி கணபதிம் என்று ஆரம்பித்து அதிலேயிருந்து பாடி ''நீநாமரூப முனகு'' என்று முடிப்பார். இன்றைக்கும் அப்படித்தான். இந்த இலக்கணத்திலேயிருந்து மாறி வந்திருக்கின்றவர்கள் எத்தனை பேர்! எனக்கு டாக்டர் செம்மங்குடி அவர்களின் பாட்டுப் பிடிக்கும். நான் அவர்களுடைய பாட்டினைக் காரைக்குடிக்கு அருகிலே உள்ள நாச்சியாபுரத்திலே ஒரு திருமணவீட்டில் 1940ஆம் ஆண்டில் கேட்டிருக்கின்றேன். நான் 60வது ஆண்டிலே 70வது ஆண்டிலே அவர்களுடைய கச்சேரியைக் கேட்கின்றேன் என்றால் நான் அன்றைக்குக் கேட்ட அதே கீர்த்தனத்தைத்தான் கேட்க முடியும் என்ற நிலைமையை நீங்கள் எங்களைப் போன்ற சாதாரணமானவர்களுக்குத் திணித்தால் நான் மீண்டும் டாக்டர் செம்மங்குடி அவர்கள் பாடுகின்றார்கள் என்றால் இந்தப் பக்கம் வருவேன் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா? நான் இங்கே அவர்களின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன் என்பதனால் அவர்களைக் குறை கூறுகிறேன் என்று எண்ணி விடாதீர்கள். சான்றுக்காக எடுத்துக்கொள்ளுகிறேன். பத்திரிகைக்காரர்களோ மற்றவர்களோ தவறாக எண்ணக்கூடாது, காரணம் நான் உரிமையோடு அவர்களுக்கு என் கருத்தைச் சொல்லுவதற்கு உரிமை பெற்றிருக்கிறேன். அதனால் அவர்கள் பெயரைச் சொல்லுகின்றேன். மற்றவர்களைப் பற்றிச் சொன்னால் கொஞ்சம் கோபம் கூட வந்துவிடும்.

**புதியன படைக்க ஆதரவு தருக!**

நான் முன்னாலே சொன்னதைப் போல நான் ஒரு சாதாரண பாமரன். எங்களைப் போன்றவர்களை உங்கள் பக்கம் இழுப்பதற்கு என்ன செய்கின்றீர்கள்? சினிமாப்பக்கம் போகாதீர்கள், என்றால் வீட்டிலே இருப்பவர்கள் நல்ல இசை உணர்வுகளை ஊட்டினால்—மற்றவர்களை நான் திரும்பிப் பார்க்க மாட்டேன்.

சினிமாப் பாட்டைக் கேட்காதே என்றால் எவனும் வம்புக்காகவா போய்ச் சினிமாப் பாட்டைக் கேட்கின்றான்? 40 ஆண்டுக் காலத்தில் வெளி வந்த 20 ஆயிரம் திரைப் பாடல்களில் ஒரு பாடலைப்போல மற்றொரு பாடல் இல்லை. சாமாராகத்திலே ஒரு பாட்டு என்றால், சுத்த தன்யா சியிலே ஒரு பாட்டு என்றால், சங்கராபரணத்திலே ஒரு பாட்டு என்றால், நீங்கள் பிடித்த கோட்டிற்குள்ளேயே நிற்க வேண்டுமென்றால் அந்த எல்லையை விட்டுப் போகக்கூடாதென்றால் ஒரு சங்கராபரணத்திலே எத்தனை விதமான பாட்டுக்கள் போடமுடியும்? ஒரு கல்யாணியிலே எத்தனை விதமான பாட்டுக்களைத் தருவீர்கள்? கல்யாணியிலேதான் சாஸ்திரிய சங்கீதத்திலேதான் சினிமாப் பாட்டைப் போடவேண்டுமென்றால் எத்தனை பாட்டைப் போட முடியும்? ஆகையால் வரன்முறையே வேண்டாமா? என்று கேட்காதீர்கள். **காலம் எப்படி மாறுகிறது? நாம் எப்படி மற்ற விஷயங்களிலே மாறுகிறோமோ அதைப் போல இசையையும் மாற்றுவதற்குத் தயவு செய்து அனுமதியுங்கள்.** நாம் மாற்றிக் கொண்டிருக்கிறோமா இல்லையா? அன்றைக்குப் போட்ட சட்டையையா இன்றைக்கும் போட்டுக் கொண்டிருக்கிறோம்? வெள்ளுடைதான் நம்முடைய நாட்டிற்குப்பெருமை சேர்ப்பது என்று தொடங்கினார்கள். அதுதான் தூய்மையானது. ஆனால் அந்த நெறியில் நின்றோமா? இளைஞர்கள் மட்டுமல்ல. வயோதிகர்கள் கூடச் சட்டையின் வண்ணங்களை மாற்றிக் கொள்ளவில்லையா? உடையிலே மாற்றம் வேண்டும்; உணவிலே மாற்றம் வேண்டும்; பழக்க வழக்கத்திலே மாற்றம்

வேண்டும். இரயிலிலே போவதானால் நேரம் ஆகின்றது, அதனால் விமானத்திலே போக வேண்டும். விமானத்தைவிட இன்னும் வேகமாகச் செல்வதற்கு வேறு ஏதாவது கிடைக்காதா என்று பறந்துகொண்டிருக்கின்றோம். ஆனால் இசையிலே மாத்திரம் இது 2000 ஆண்டுகளுக்கு முன்னாலே தோன்றியது, இது 200 ஆண்டுகளுக்கு முன்னாலே மும்மூர்த்திகள் உருவாக்கிய இசை, இதிலேயிருந்து மாற மாட்டோம் என்று நீங்கள் சொல்வீர்களேயானால், நாம், பெரியவர்கள் சொல்லுகிறார்கள்; நாம் அவர்கள் பக்கத்திலே போகக்கூடாது. அவர்களுக்கு அவமரியாதை செய்யக்கூடாது. ஆகவே நமக்கு எது சாதகமாகக் காதுக்கு இனிமையாக இருக்கின்றதோ அங்கே போவோம் என்று இந்த நாட்டு மக்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். ஆகவே இதனைத் தடுத்து நிறுத்த முயல்வதில் பயன் இல்லை. எங்கே மாற்றங்கள் வந்துகொண்டிருக்கின்றன என்பதனை உணர்ந்து அதற்கு ஏற்ப இசை அறிஞர்கள் வேண்டிய மாற்றத்தை உருவாக்கித்தர வேண்டும்.



சென்ற ஆண்டிற்கு முன் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சில அறிவிப்புகளைத் தந்தார்கள். அந்த அறிவிப்புக்களிலே பல செயலாக்கப்பட்டு வருகின்றன அதிலே ஒன்று புதிய பண் அமைப்பவர்களுக்கு அரசாங்கம் பரிசளிக்கும் என்பதாகும். அதில் சில கருத்து மாறுபாடுகள் வந்திருக்கின்றன. பெரியவர்கள் எல்லாம் அதுபற்றிய கருத்துக்களைத் தெரிவித்து உள்ளார்கள். நான் தலை வணங்கி ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால் இராகங்கள் ஏற்கெனவே வந்துவிட்டன. ஆயிரக்கணக்கிலே, நூற்றுக்கணக்கிலே இருக்கின்றன. இப்பொழுது கூட தாளங்கள் எத்தனை என்று வாதம் வந்தபோது பழக்கத்தில் இருப்பது இத்தனை என்று வழுவூராரும், டாக்டர் செம்மங்குடி அவர்களும் சொல்லியதை நான் கேட்டேன். ஆகவே, இனிமேல் இராகத்தைப்பற்றி நாம் புதிதாக ஆராய்ச்சி செய்யவே தேவையில்லை என்று நீங்கள் முடிவு கட்டிவிடுவீர்கள் என்றால், நான் எங்கேயாவது காதுக்கு ஒரு இனிமையான பாட்டைக் கேட்கப் போகின்றேன். ஆனால், அதற்கும் என்னை விடமாட்டேன்; அடைத்துப் போடுவேன் என்று சொன்னால் என்ன நியாயம்! ஆனால் நான் சங்கீத வித்துவான் அல்ல! ஒரு சந்தேகம்! இந்த இராகங்களைப் புதிதாகக் கண்டுபிடிக்க முடியுமா? முடியாதா? எனக்குத் தெரியாது. ஆனால், தோடி ராகம் போன்ற சில இராகங்களின் பெயர்களை அறிந்திருப்பவன், இளமையிலே பாடியிருக்கிற காரணத்தாலே, இராசரத்தினம் பிள்ளை அவர்கள் நாதசுரம் வாசிக்கும்போது தோடி ராகம் கேட்டிருக்கின்றேன். அதையே டாக்டர் எம்.எஸ். பாடும்போதும் கேட்டிருக்கின்றேன். டாக்டர் செம்மங்குடி பாடும்போதும் கேட்டிருக்கின்றேன். மதுரை சோமு பாடும்போதும் கேட்டிருக்கின்றேன். தோடி இராகத்திற்கு ஒரே ஆரோகணம் அவரோகணம்தான். ஆனால் இந்த நாலுபேர் பாடுகின்றபோது என்னுடைய உணர்விலே மாற்றத்தை ஏற்படுத்துகின்றார்களே அதற்கு என்ன பெயர்? புதிய இராகத்தைக் கண்டுபிடிக்க முடியாது, இது என்றைக்கோ முடிந்துவிட்ட ஒன்று. அதற்குமேல் யாருமே முயலக்கூடாது என்று பெரியவர்கள் தீர்மானித்துவிடுவீர்களேயானால் ஒரே ஆரோக அவரோகணத்தை வைத்துக் கொண்டு இராசரத்தினம் பிள்ளை அவர்கள் வாசிக்கும் தோடி எப்படி வந்தது! அதனையே எம்.எஸ்., டாக்டர் செம்மங்குடி, மதுரை சோமு ஆகியோர் எப்படிப் பாடுகிறார்கள்? ஆகவே இந்த ஒரு இராகத்திற்குள்ளேயே அவர்களின் உணர்வுகளை மாற்றிக் காட்ட முடியும். ரசனையை மாற்றிக் காட்ட முடியும் என்றால் இதிலேயிருந்து ஒருவன் மேலே சென்று இன்றைக்குத் திரைப்பட இசையை அமைக்கிறான். ஆனால் கொஞ்சம் காரசாரமாக இருக்கும்; அவ்வளவு தான் !

காப்பி குடிப்பவர்களில் பல்வேறு வகையினர் இல்லையா? சிலருக்குப் பால் அதிகம் வேண்டும். வேறு சிலருக்கு டிக்காஷன் அதிகம் வேண்டும். இன்னும் சீனி மிகுதியாக வேண்டும். மற்றும் சிலருக்கு சீனி குறைவாக வேண்டும். வேறு சிலருக்கு சீனியே கூடாது. என்றாலும் அதற்குக் காப்பி என்றுதானே பெயர். நாம் உடையை அணிந்து கொள்வதிலும் எவ்வளவு வேறுபாடுகள் வைத்துள்ளோம் என்றாலும் உடை என்றுதானே சொல்கின்றோம். ஆகவே கால மாற்றத்திற்கு ஏற்றவாறு இசையை மாற்றுவதற்கு அனுமதித்து சாதாரண பாமர மக்களை இந்த இசையின் பக்கம் இழுப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

***உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்***
***எண்ணப் படவேண்டா தார்.***

**கள்ளை உண்ணக் கூடாது; சான்றோரால் நன்கு எண்ணப்படுவதை விரும்பாதவர் கள்ளை உண்ண வேண்டுமானால் உண்ணலாம்.**

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

முயற்சி செய்து தேடாமலே தரும் வளத்தை உடைய நாடுகளைச் சிறந்த நாடுகள் என்று கூறுவர் ; தேடி முயன்றால் வளம் தரும் நாடுகள் சிறந்த நாடுகள் அல்ல.

**திரைப்பட இசை**

திரைப்பட இசையைச் சாதாரணமானதாக எண்ணிவிடாதீர்கள். ஏறத்தாழ 20,000 திரைப்பாடல்களைப் பத்து, பதினைந்து இசையமைப்பாளர்கள்தான் இசை அமைத்திருக்கிறார்கள். கிட்டப்பா அவர்கள் பாடிய 'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்' என்னும் பாட்டை நினைக்கும்போது அது என்றைக்கும் இன்பம் தரும் பாட்டாக— இன்னும் எத்தனை ஆண்டுகாலம் கழித்தாலும் எப்படித் தொல்காப்பியத்தை - குறளை- சிலப்பதிகாரத்தை மாற்ற முடியாதோ அதைப் போல நிரந்தரத் தன்மையுள்ள ஜீவனுள்ள பாட்டாக இருக்கின்றது. ஆனால் ஒரு கிட்டப்பா அத்தகைய ஒரு பாடலைத்தான் பாட முடியும். எல்லோரும் பாடமுடியாது. எனவே எங்களைப் போன்ற சாதாரண மக்கள் இசையின் பக்கத்தில் வருவதற்கு வழி வகுத்துத் தாருங்கள். அவ்வாறு செய்தால்தான் தொல்காப்பியத்திலே சொல்லப்பெற்ற இசை, சிலப்பதிகாரத்திலே விரித்துப் பாடப்பெற்ற இசை என்று பெருமையோடு நாம் சொல்லிக் கொள்ளுகின்ற பழம்பெரும் இசையைக் காப்பாற்ற முடியும்.

**தமிழ் இசை-விளக்கம்**

**இன்றைக்கு தமிழ்இசை வேண்டுமா? வேண்டாமா? என்ற விவாதமே கிடையாது. ஆனால் தமிழ் இசை கூடாது என்ற இயக்கம் மௌனமாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த மௌன இயக்கத்திற்குப் பெரியவர்கள் ஆதரவு தரக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.** தமிழ்நாட்டிலே தமிழிலே பாடுவது தான் தமிழ்இசை என்று சொல்லுகிற கருத்தை நாம் இவ்வளவு நாளாகப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அதிலே ஒரு கருத்தை இந்த மன்றத்தின் முன்னாலே உங்கள் பரிசீலனைக்கு வைக்கிறேன். இது தமிழ்ப் பாடல்களைப் பாடுகின்ற தமிழ் இசைதான் இந்த இயக்கத்தினுடைய நோக்கமா? அல்லது தமிழ் இசை என்பதே தமிழ்நாட்டில் உருவான இசைதான்; அது தான் பழமையானது. அதனைத் தவிரப் பழமையான இசை வேறு இல்லையா? இதுதான் நமது இலட்சியமா? இந்துஸ்தானி இசையைக் கொண்டு வந்து தமிழிலே பாடுவதை விரும்புகின்றோமா? இசையென்றாலே சங்கீதமென்றாலே தமிழ்நாட்டிலே தான் உருவாயிற்று என்று நாம் நிரூபித்து அதனை நம்முடைய வாழ்க்கையிலே கொள்ள விரும்புகின்றோமா? இன்றைக்குப் பாடுவதற்குப் பெயர் கர்நாடக இசை என்று செல்லுகிறார்கள். அது ஒரு பகுதியை-நிலப்பரப்பைச் சுட்டிக்காட்டும் பெயராக அமைந்திருக்கிறது. கர்நாடகம் என்பதற்குப் பெரும்புலவர்கள் ம.பொ.சி. யைப் போன்றவர்கள் எல்லாம் பல்வேறு கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். கரை நாடு அதனாலே கர்நாடகம் என்று சொல்லுகிறார்கள். மராட்டியத்தைத் தாண்டிய பிறகு கருப்பு மண்ணாக இருந்த காரணத்தால் கர்நாடகம் என்று பெயர் வைத்தார்கள் எனச் சிலர் சொல்லுகிறார்கள். நான் அதற்குள்ளே நுழையவில்லை. கர்நாடக இசை என்பது ஒரு பகுதி இசை என்று சொல்லுகிறார்களே அதனைப் போல நாம் இதனைத் தமிழ் இசை என்போமா? தமிழன் இசை என்போமா? தமிழகத்தின் இசை என்போமா? இந்த இசையை மொழியோடு இணைக்கின்ற காரணத்தால் மொழியின் மீதும் துவேஷம் வருகின்றது. அதனாலேதான் இதனைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சங்கீதம் என்றால் மொழியே தேவையில்லை என்றார்கள். அந்த விவாதம் இப்போது இல்லை. சங்கீதம் என்றால் இலக்கணம் தான் வேண்டும். வேறு எதைப் பற்றியும் கவலை இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சங்கீதம் என ஒன்று உருவான போது தமிழ் இசை தான் தமிழகத்தின் இசைதான் உலகத்திலேயே மிகப் பழமையான இசை என்று நாம் சொல்வோமானால் இதனை மொழியோடு இணைத்துச் சொல்ல விரும்புகிறோமா நம்முடைய பரம்பரை இசை என்று சொல்ல விரும்புகிறோமா? சங்கீத மும்மூர்த்திகள் 17வது 18வது நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்கள். அவர்கள் தெலுங்கிலும் வடமொழியிலும் பாடியிருக்கிறார்கள். அவற்றைப் பார்த்தவர்கள் தமிழ் இசை என்பது இந்த மொழியில்தான் இருக்கிறதோ என்று எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். அதில் தவறில்லை. அதைத் தொடர்ந்துதான் நாம் தமிழ் என்று பேச ஆரம்பித்தோம். ஆனால் இதற்கு முன்னாலேயே ஆதிமூர்த்திகளும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் தமிழிலே தான் பாடினார்கள். அவர்களும் தஞ்சை மண்ணிலேதான் பிறந்தார்கள். முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை இவர்களெல்லாம் சங்கீத மும்மூர்த்திகளுக்கு ஒரு நூற்றாண்டிற்கு முந்தியவர்கள். அந்தப் பாட்டை இன்றைக்கும் நாம் பாடிக் கொண்டிருக்கிறோம். எம்.எஸ். அவர்கள் 'யாரோ இவர் யாரோ' என்று பாடுவார்களே இந்தப் பாடல் எல்லாம் நம் சங்கீத மும்மூர்த்திகளுக்கு முன்னாலே வந்தவைகள். அவைகளையெல்லாம் கொண்டு வந்தால்தான் இசை என்றாலே தமிழகம்தான் உருவாக்கியது தமிழ் நிலத்திலே தான் விளைந்தது, தமிழ் மண்ணிலே தோன்றியது என்ற உணர்வை வளர்த்தால் தமிழைத் தவிரப்



பிற மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குக் கொஞ்சம் கோபம் வராமல் இருக்குமோ என்ற ஒரு ஆசை எனக்கு ஏற்படுகின்றது. தமிழ் என்று சொன்னால் தெலுங்கர்களுக்குக் கோபம் வருவதில் நியாயம் இருக்கிறது. ஆனால் நம் மாண்புமிகு நீதிபதி அவர்கள் சொன்னது போல தமிழ் பேசுகிறவர்களுக்கே இப்போது தமிழ் என்றால் கோபம் வருகிறது.

நாம் ஒரு மையக் கட்டத்திலே வந்திருக்கிறோம். இந்தக் காலத்திலேதான் தமிழர்களை இணைத்தாக வேண்டும். நான் ம.பொ.சி. அவர்களிடம் தமிழர்களைச் சேர்க்கின்ற ஆற்றல் பெற்ற சின்னமாக நீங்கள் விளங்கிக் கொண்டு இருக்கிறீர்கள் என்று சொல்வது உண்டு. எனவே, **இக் காலத்தில் தமிழ் இசையை விவாதத்திற்கு உரிய இயக்கமாக வளர்க்கக்கூடாது. இது தமிழகத்தினுடைய இயக்கம். தமிழ் மக்களுடைய இயக்கம் என்று மாற்ற வேண்டும்.** தெலுங்கிலே பாடுபவர்கள் இருந்தால் அங்கே இருந்து பாடிக் கொண்டிருக்கட்டும். ஆனால் தமிழகத்தினுடைய இசைதான் மிகப் பழமையான இசை; தமிழ் மண் தான் உலகிற்கு எல்லாக் கலைகளையும் தந்தது. சீவக சிந்தாமணியில் சீவகன் யாழுக்கு உரிய மரத்தைச் சுண்டிப் பார்த்து அறிந்து கொண்டான் என்று இலக்கியத்தில் கலையைப் பற்றிக் கூறியிருக்கின்ற தமிழ் மண் அல்லவா இது! மத்தளம் எப்படிப் பட்ட கட்டையிலே செய்யவேண்டும், எவ்வாறு வார் போடவேண்டும், என்றெல்லாம் எவ்வளவோ இலக்கணத்தை அறிந்தவர்கள் தமிழர்கள். உலகத்திலே ஒலியிலிருந்து இசையைக் கண்டுபிடித்தவன் தமிழனைத் தவிர வேறு யார்? மூங்கிலைத் துளைத்துக்கொண்டு வண்டு போகிறது, அந்தத் துளையில் காற்று நுழைகிறது. அது வெளியே வரும்போது ஒரு இசையோடு வருகிறது. இதனைக் கேட்டவர் குழலைக் கண்டுபிடித்தார். நாண் ஏற்றிய வில்லிலேயிருந்து எழுகின்ற நாதத்தில் அல்லவா நரம்புக் கருவிகள் கண்டுபிடித்தார்கள்? இவற்றையெல்லாம் நான் ஆராய்ந்து சொல்லவில்லை. நம் நீதிபதி அவர்களும் ம.பொ.சி. அவர்களும் எழுதியதைப் படித்து விட்டுச் சொல்லுகிறேன். இந்த அளவிற்குத் தெரிந்து கொண்டிருக்கிற எங்களை இன்னும் கொஞ்சம் தெரிந்தவர்களாக மாற்றுங்கள். நீங்களும் கொஞ்சம் கீழே இறங்கி வாருங்கள். எங்களையும் கொஞ்சம் மேலே உயர்த்துங்கள். இரண்டு பேரும் ஒரு இடத்திலே வந்து சந்திப்போம். அதற்காக இந்தத் தமிழ் இசைச் சங்கம் முயல வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

செம்மங்குடி அவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். நீங்கள் கலைமாமணி பட்டம் தருகின்றீர்கள். பரிசு தருகின்றீர்கள். ஆனால் 60 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு ஓய்வு ஊதியும் தரவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதன் தொடர்பாகப் பேசும்போதுதான் பாபநாசம் சிவன் அவர்களின் வாழ்க்கையைப்பற்றிச் சொன்னேன். தமிழக அரசு கலைஞர்களுக்கு வேண்டுவன வற்றைச் செய்து வருகிறது. எழுத்தாளர்களுக்கும், நாடக நடிகர்களுக்கும், கலைஞர்களுக்கும் தருகிறதென்றால் இசைக் கலைஞர்களுக்கு ஏன் கொடுக்கக் கூடாது என்று நான் அவருடைய அறிவுரையை—ஆலோசனையை ஆணையாக ஏற்றுக்கொண்டு அதை மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று இந்த அரசு ஏற்றுக்கொள்ளுகின்றது என்று ஒப்புக்கொண்டேன்.

நம் தமிழ் இசைச் சங்கம் தமிழ் இசை தமிழ் இசை என்று வெறி பிடித்து அலையவில்லை. இசைக் கலைஞர்கள் எங்கே இருந்தாலும் அவர்களைக் காப்பாற்றும் கரங்களாக இருக்கும் என்பதை எடுத்துச் சொல்லுகிற உணர்வைக் காட்டுகிற வகையில் இந்தக் கடிதம் எனக்குத் தரப் பெற்றது. ஏறத்தாழ 10 ஆண்டுகள், மாதம் 100 ரூபாய் *வீதம் பாபநாசம் சிவன் அவர்களுக்குத் தமிழ் இசைச் சங்கம் கொடுத்து வந்திருக்கின்றது. அவர்களுடைய கடைசி மூச்சு காற்றோடு கலப்பதற்கு முதல்நாள் தான் அந்த மாதத்திற்கு உரிய தவணை தமிழ் இசைச் சங்கத்தால் கொடுக்கப்பெற்று அது அவர்களுக்குப்போய்ச் சேர்ந்தது; என்றாலும் ஒரு சிறந்த கலைஞரை மாதம் ரூபாய் முப்பத்து ஐந்திற்கும், நூறு ரூபாய்க்கும் ஏங்குமாறு தமிழகம் இந்த 20ஆம் நூற்றாண்டில் வாழ வைத்துவிட்டதே, வெட்கப்பட வேண்டாமா என்பதுதான் நான் கேட்ட கேள்வி! நீங்கள் ஆதரிக்க வேண்டிய கலைஞரை ஆதரிக்காமல் ஒரு வேலியைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தால் இலட்சோப லட்சம் பாமர மக்கள் இவர்களை ஆதரிக்காமல் வேறு யாரையோதான் ஆதரிப்பார்கள். தயவு செய்து இதனை அபாய அறிவிப்பாக எடுத்துக் கொள்ளவேண்டுகிறேன். இதற்கு நீங்கள் வழிகாட்டியாக வேண்டும். எங்களுக்கு வழி தெரியாது. நாங்கள் எல்லாம் சிறியவர்கள். எதிலேயோ நாங்கள் எல்லாம் மயங்கிச் செல்லுகிறோம் என்று நீங்கள் சொல்லுவது உண்மையானால் அவ்வாறு மயங்கிச் செல்வதை நீங்கள் தடுத்துத் திருத்துவதற்கு வழியைக் காட்டுங்கள். இசையானது இன்பத்தை தருகின்றது என்று சொல்வீர்களேயானால் அந்த இன்பத்தைத் தருவதற்கு வேண்டுவன செய்யுங்கள் என்று கோடிக்கணக்கான பாமர மக்களின் பிரதிநிதியாக இருந்து இந்த வேண்டுகோளை உங்களுக்கு விடுத்து முப்பத்து ஏழாம் தமிழ் இசை விழாவினைத் தொடங்கி வைக்கின்றேன்.

வணக்கம்.

*[சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் 21.12.1979 அன்று, தமிழ் இசை முப்பத்து ஏழாம் விழாவைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து]*

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

வெற்றியே பெறுவதானாலும் சூதாட்டத்தை விரும்பக் கூடாது. வென்ற வெற்றியும், தூண்டில் இரும்பை இரை என்று மயங்கி மீன் விழுங்கினாற் போன்றது.

*அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்*
*புறத்த புகழும் இல.*

அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்ப மாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை, புகழும் இல்லாதவை.

**அ**கரமுதலி' என்றால் என்ன?

அதைத் தெரிந்து கொள்வதற்கு முன், அதற்குப் பின்னணியிலே உள்ள ஒரு வரலாற்றை நாம் தெரிந்து கொள்வது நல்லதல்லவா?

பண்டைக்கால நூல்கள் எல்லாம் செய்யுள் வடிவமாகவே காட்சியளிக்கின்றன. அவை எளிதில் பொருள் காண இயலாத செய்யுட்களாகவும் அமைந்துள்ளன. அவற்றின் பொருளைத் தெரிந்து கொள்வதற்குத் துணையாக நிகண்டுகள் இருந்தன. 'நிகண்டு' என்பதற்கு அருஞ்சொற் பொருள் கூறும் நூல் என்று கூறலாம்.

திவாகர முனிவரால் எழுதப் பெற்ற திவாகர நிகண்டு, பிங்கல முனிவரால் ஆக்கப்பெற்ற பிங்கல நிகண்டு, மண்டல முனிவரால் செய்யப் பெற்ற சூடாமணி நிகண்டு ஆகியவை குறிப்பிடத் தக்கன. இம்மூன்று நிகண்டுகள் வழிவந்த நூலே 1594-லிருந்து அகராதி நிகண்டு அல்லது 'அகராதி' எனப்பட்டது.

**'அகராதி' என்றால் என்ன ?**

அகராதி-அ என்ற எழுத்தினை முதலாகக் கொண்டு, சொற்களை நெடுங்கணக்கு முறைப்படுத்தி அமைத்த நூல். அகரம் + ஆதி எனப் பிரிக்கலாம்.

தமிழ்நாட்டில் அகராதிக்கு அடிகோலியவர், மேலைநாட்டிலிருந்து வந்த வீரமாமுனிவரே. அவர் நான்கு வகையாகப் பகுத்துத் தொகுத்து அச்சிற்பதித்ததே 'சதுரகராதி' ஆகும். அதன் பின்னரே தமிழகத்தில் இக்கால அகராதி தொகுக்கும் முறை வழக்கில் வந்தது.

எத்தனையோ அகராதிகள் இன்று வெளிவந்துள்ளன. யாழ்ப்பாண அகராதி, கதிரைவேற்பிள்ளை தமிழ் மொழியகராதி, தமிழ்ச் சங்க அகராதி, சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலம்-தமிழ்ச் சொல்லகராதி, கழகத் தமிழகராதி போன்றவைகளை நாம் பார்க்கிறோம்.

**எத்தனை அகராதிகள்....**

*1786*ல் ஆங்கில மலபார் (தமிழ்) அகராதி ஒன்று வெளிவந்தது. பெப்ரீஷியஸ் என்பவரால் பதிப்பிக்கப்பட்டு, சென்னை வேப்பேரியிலிருந்து வெளிவந்தது இது.

*1844*ல் ஆங்கிலம்-தமிழ் அகராதி ஒன்று வெளிவந்தது. அருள்திரு ஜெ. நைட், அருட்திரு எஸ். ஸ்பால்டிங் ஆகியோர் வெளியிட்டது இது.


*1936*ல் ஆங்கிலம் -தமிழ் அகராதி ஒன்று வெளிவந்தது. அது 'ஏ' முதல் 'Sparre' என்ற சொல்வரையில் மட்டுமே இருந்தது. திரு பி. இராமநாதன் அவர்கள் இதனைத் தயாரித்திருந்தார். இவை எதுவும் நமக்கு இன்று கிடைக்கவில்லை!

*1851*ல் 'இங்கிலீஷ்- தெலுங்கு தமிழ்ச் சொற்கள் தொகுப்பு' வெளிவந்தது. திரு. லூயிஸ் என்பவருடைய மாணவரும், திரு டி. எம். கிருட்டிணசாமிப் பிள்ளையும் சேர்ந்து உருவாக்கிய இத்தொகுப்பு 260 பக்கங்கள் கொண்டதாகும்.

*1880*ல் 'கொத்தனாரது ஆங்கிலத் தமிழ்ச்சொல் அட்டவணை' ஒன்று வெளிவந்தது. திரு டி.எஸ். வீராசாமி முதலியார் அவர்கள் வெளியிட்ட இந்நூல் 70 பக்கங்கள் கொண்டதாகும்.

இவையெல்லாம் அகராதி உருவாக்கத்திற்கு முன்னோடிகளாக அமைந்தன. இம்முயற்சி மென்மேலும் பல்கிப் பெருகிடும் வண்ணம் இன்று பல்வேறு அகராதிகள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. அவற்றுள் தமிழ் அன்னைக்குச் சூட்டும் மணிமகுடமாக வெளிவரவிருக்கின்றது, ''செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி' (Tamil Etymological Dictionary). 'அகராதி' என்பதன் தனித்தமிழ் வடிவமே 'அகரமுதலி'

**மொழிஞாயிறு**
**ஞா.தேவநேயப்பாவாணர்**



# அன்னைத் தமிழுக்கு 'அகரமுதலி'

### அகரமுதலி!

சென்னை எழுமூர், அரும் பொருட்காட்சியக ( Museum ) வளாகத்தில் உள்ளது, ''செந் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்'' (Directorate of Tamil Etymological Dictionary Project)- கல்வித் துறையின்கீழ் செய லாற்றும் இந்த இயக்ககத்தின் இயக்குநர் மொழிஞாயிறு திரு ஞா. தேவநேயப்பாவாணர் அவர் கள். அவரது தலைமையின்கீழ், இப்பணி மிகச் சிறப்பாக நடை பெற்று வருகின்றது.

*1974*ஆம் ஆண்டு மே திங்கள் 8ஆம் நாள் இத்திட்டம் தோற்று விக்கப்பட்டது.

முதலில் இதன் அலுவலகம் சென்னை சேத்துப்பட்டு, ஸ்பர் டாங் சாலையிலுள்ள, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவன அலு வலகத்தில் ஒரு சிறிய அறையில் இருந்தது.

### நோக்கமென்ன?

'அகரமுதலி' தயாரிப்பதன் நோக்கமென்ன?

*1936*ல் வெளிவந்த, சென் னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகர முதலியில் (Madras University Tamil Lexicon) இல்லாத நூற்றுக்கணக்கான சொற்களைச் சேர்த்தும், அதி லுள்ள சில சொற்களில் தவறான வடிவங்களையும், சில சொற் களில் தவறான பொருள்களை யும் திருத்தியும், சொற்பொருள் களை ஏரண முறைப்படி (Logical Order) வரிசைப்படுத்தி யும், பல சொற்களுக்குக் குறிக் கப்பட்டுள்ள தவறான மூலங்க ளைத் (Root) திருத்தியும், திர விட இனச் சொற்களை மட்டு மின்றி (Cognates) ஆரிய இனச் சொற்களையும் குறித்தும், இயன்றவரை எல்லாச் சொற்கட் கும் வேரும் (Root), வரலாறும் வரைந்தும், விரிவான முறையில் ஒரு செந்தமிழ்ச் சொற்பிறப்பி யல் (Etymological) அகர முதலி (Tamil Etymological Dictionary) என்று வெளியிடுவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதுவரை இத்தகைய நூல், தமிழில் வெளிவந்ததில்லை.

### அகரமுதலியின் அமைப்பு

தமிழ், உலகம் முதல் உயர் தனிச் செம்மொழியும், திரா விடத்திற்குத் தாயும், ஆரியத் திற்கு மூலமுமாய் இருத்தலால் இவ்வகர முதலியில் தமிழ்ச் சொற்களும், திரவிடச் சொற் களும் மட்டுமின்றி, பல ஆரிய சொற்களும் விளக்கம் பெறும் ஆதலால், இது உலகச் சொற் பிறப்பியல் அகர முதலியகளுள் முதன்மையானதாகும்.

இது பன்னிரு மடலங்களாக (Volumes) வெளிவரும். முதல் எட்டு மடலமும் தமிழ்ச் சொற்களை மட்டும் கூறும். ஒன்பதாவது மடலம், அவ்வெட்டிலும் விடுபட்ட சொற் களைக் கூறும். பத்தாவது மட லம் சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய அயன்மொழிச் சொற் களைக் கூறும்.

முகவுரை, முன்னுரை, நூல் அமைப்பு, உருப்படி (Article) அமைப்பு, எழுத்துப் பெயர்ப்புப் பட்டி (Transliteration Table) இதனை எழுத்து வேறுபாட்டுக் குறிப்பட்டி என்றும் சொல்ல லாம். வினைச் சொற்களின் புடை பெயர்ச்சி (Conjugation) முறைப்பட்டி, அகர முதலியைப் பயன்படுத்தும் முறை முதலிய வற்றைக்கொண்ட பகுதி ஒரு தனி மடலமாகக் குறிக்கப்பட்டி ருந்தது. ஆனால் அது, முதல் மடலத்தின் முதற்பகுதியாகச் சேர்க்கப்படும்.

பதினோராம் மடலம், தமிழ் அகர முதலி வரலாறு (History of Tamil Lexicography ).

பண்டைக்கால முதல் வெளி வந்த அகர முதலிகளை யார் யார், எவ்வெப்பொழுது எழுதி னார்கள் என்பது பற்றி விரிவாகத் தனியாக வரும்.

பன்னிரண்டாம் மடலம் செந் தமிழ்ச் சொற்பிறப்பியல் நெறி முறைகளைக் கூறும் (Principle of Tamil Etymology ) அதாவது, தமிழில் சொற்கள் எந்தெந்த முறைப்படி தோன்றி வளர்ந்துள்ளன என்பது பற்று யது. சொல்லாராய்ச்சியாளர் களுக்கும், மொழியாராய்ச்சியா ளர்களுக்கும் இது மிகவும் பயன் படும்.

முதலில் சொன்ன வேர், வர லாறு இவற்றிற்கு இது சான்றாக அமையும்.

'அகரமுதலி' ஆங்கிலத்தில் பலர் எழுதியுள்ளார்கள். ஆனால், தமிழில் இதுவரை விரிவாக வெளிவந்ததில்லை.

### பணி விரைவுபெற...

''பல்வேறு அயன்மொழி களில் சொற்பிறப்பியல் அகர முதலிகள் வெளிவந்துள்ளன. அவற்றையெல்லாம் பார்த்த போது, தமிழிலும் அவ்வாறு வெளிவருதல் வேண்டும் என்ற எண்ணம் என்னுள் முளைத்தது. அதன் விளைவாக, இளமைக் காலம் முதலே நான் அவற்றில் கவனம் செலுத்தலானேன். அது சம்பந்தமான நூல்களை, அகர முதலிகளை நிறைய வாங்கிப் படிக்கலானேன். அவற்றிலேயே மூழ்கித் திளைத்தேன். இன்று அரசின் சார்பிலே உலகம் முழு வதும் பரவக்கூடிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாகின்றது. அந்தப் பணி யினைச் செய்வதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியும் மனநிறை வும் அடைகின்றேன் - என்வாழ்க் கையில் ஒரு பெரும் பேறாகவும் கருதுகின்றேன்'' என்று பெரு மிதத்துடன் கூறும் திரு ஞா. தேவ நேயப்பாவாணர் அவர்கள், இவ் வரிய பணியினைத் தக்கவாறு செய்வதற்குப் போதிய உதவியா ளர்கள் இல்லையே என்றும் தம் ஏக்கத்தினைத் தெரிவிக்கின்றார். அதனை உணர்ந்துதான் இன் றைய தமிழக அரசு இப்பொழுது ஏழு பதவிகளுக்கு அனுமதி தந் துள்ளது. அவை: 1) மருத்துவச் சொற்றொகுப்பாளர் ( Compiler of Medical Terms ) 2. கல் வெட்டுச் சொற்றொகுப்பாளர் (Compiler of Epigraphical Terms) 3. மெய்ப்புத் திருத்தாளர் ( Proof Reader ). அகரமுதலிச் சொற்றொகுப்புப் பிரிவுக்கு இந்தப் பதவிகள். மற்றும் கணக்குத் துறைக்கு 4 பேர்.

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

**முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவு நிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழ காகும்.**

*இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.*

இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றைவிட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல், கனிகள் இருக்கும் போது காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது.

இந்த எழுவர் அமர்த்தப்பட்டதும், அகரமுதலிப் பணிகள் விரைவு பெறும்.

**அகரமுதலி எப்போது வெளிவரும்?**

இப்பொழுது, முதன் மடலம் (முதற்பகுதி) அச்சிற்கு அணியமாய் (ஆயத்தமாய்) இருக்கிறது. ஆனால், இந்த அச்சு வேலைகளையும், அவைபற்றிய எழுத்து நடவடிக்கையையும் கவனிக்கப் பதிப்பாண்மை எழுத்துறவாளர் ( Editor and Correspondent ) ஒருவர் தேவை. எப்படிப் பல்கலைக் கழக அகரமுதலிக்கு (Lexicon) ராவ்சாகிப் வையாபுரிப்பிள்ளை அவர்கள் இருந்து அந்த அச்சுப்பணிகளையும், உள்நாட்டு வெளிநாட்டு எழுத்துப் போக்குவரத்தையும் கவனித்தாரோ, அப்படியே இதற்கும் ஒருவர் இருப்பது தேவைமட்டுமல்ல, முக்கியமானதுங்கூட.

''உலகத் தமிழ் மாநாடு இவ்வாண்டு சூன் திங்களில் நடைபெறவிருக்கின்றதல்லவா? அதற்குள்ளாகவே, முதற்பகுதி வெளிவரத்தக்க ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம். எப்படியும் அது வெளி வந்துவிடும். முதற்பகுதி சனவரித் திங்களில் அச்சகத்துக்குப் போய் விடும்'' என்கிறார் பாவாணர் அவர்கள்.

''தமிழ், சமஸ்கிருதம் உட்பட ஆரியத்திற்கு மூலம் என்ற அடிப்படையில் இந்த அகர முதலி அமையும். மூழ்கிப் போன குமரிக் (லெமூரியா) கண்டத்திலேதான் தமிழ் தோன்றியது. அதிலிருந்துதான் பல்வேறு மொழிகளும் தோன்றின. 'முகம்' என்ற சொல் சமஸ்கிருதம் என்கிறார்கள். நாம் தமிழ் என்று சொல்லுகிறோம். சமஸ்கிருதத்துக்கு மூலம் இல்லை. நமக்கு மூலமும் உண்டு, வரலாறும் உண்டு'' என்று கூறும் பாவாணர் அவர்கள், முதல் எட்டு மடலங்களுள் ஒவ்வொன்றும் ஐந்து பகுதிகள் கொண்டது. என்றும், முதற்பகுதி ஜனவரியில் அச்சுக்குச் சென்று வெளிவந்ததும், அடுத்த பகுதிகள் இடையீடு இல்லாமல் தொடர்ந்து அச்சகம் செல்லும் என்றும் கூறுகிறார்.

இந்தப் பணி குறுகிய காலத்துக்குள் முடிந்துவிடக் கூடியதல்ல. என்றாலும் எப்படியும் இப்பணி முழுமை பெற 12 ஆண்டுக்காலமாவது ஆகும்.

**ஆக்ஸ்போர்டு அகரமுதலி**

ஆக்ஸ்போர்டு ஆங்கில அகரமுதலி ஒன்று முடிய 70 ஆண்டுக் காலம் பிடித்ததாம்! இது 13 மடலங்களாக வெளிவந்தது. இதன் பதிப்பாளர்கள் நான்கு தலைமுறைகளாக வந்தனராம். சொற்றொகுப்புத் துணையாசிரி



## சமூகப் பணியில் கல்லூரி மாணவிகள்!

கடந்த நவம்பர் திங்களில் பெய்த மழையின் போது, திருவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பண்டுதன்பட்டி இணைப்புச் சாலையில் உடைப்பு ஏற்பட்டது.

தேசிய சேவைத் திட்டத்தின்கீழ் அந்த உடைப்பை அடைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. சிவகாசி இராசரத்தினம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் அப்பணியில் ஈடுபட்டனர். பத்தே நாட்களில் உடைப்பெடுத்த இந்தச் சாலை சீர்செய்யப்பட்டது. மொத்தம் 159 மாணவிகள் இந்தச் சமூகப் பணியில் ஈடுபட்டனர்.

தேசிய சேவைத் திட்ட முகாம் நிறைவு விழாவின்போது, இந்த மாணவிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

யர்களோ 400 பேர் பணியாற்றி னார்களாம்! மொழிப் பற்று மிகுந்தவர்கள், சுமார் ஆயிரம் பேர்கள், ஐந்து கண்டத்திலிருந்தும் சொற்களை அனுப்பிக் கொண்டேயிருந்தார்களாம், சம்பளம் எதுவுமில்லாமல்!

**சமஸ்கிருத அகரமுதலி**

சமஸ்கிருத-ஆங்கில அகர முதலி ஒன்று பூனா டெக்கான் கல்லூரியில் 1945ல் தொடங்கியது. இப்பொழுதுதான் முதல் மடலம் மூன்று பகுதிகள் வெளிவந்துள்ளன. எத்தனை மடலம் என்று திட்டமிடப்படவில்லை. இப்பணி 1990ல் முடியலாம் என்று கருதப்படுகிறது. இதில் 22 பேர் நிலையாக இருந்து பணியாற்றுகின்றனர். இக்குழுவின் தலைவர், பூனா பல்கலைக் கழகத்தின் இணைவேந்தர். இப்பணிக்கு இந்திய அரசு ரூ.1 கோடி அளித்துள்ளது. மகாராட்டிர அரசும், பூனா பல்கலைக் கழகமும் ஒரு பெருந்தொகையை ஒதுக்கியிருக்கின்றன. பல்கலைக் கழக நல்கைக்குழு (University Grants Commission) ஒரு தொகையை வழங்குகிறது. 'யுனெஸ்கோ'வும் ஆண்டுதோறும் ஒரு கணிசமான தொகையை வழங்கி வருகிறது, நூல் வெளிவரும் வரை! பாரிசு நகரிலுள்ள ஒரு சமஸ்கிருதக் கழகமும் ஒரு பெருந்தொகை வழங்கியுள்ளது.

**மலையாள அகரமுதலி**

மலையாள அகரமுதலியில் நிலையாக 36 பேர் பணிபுரிகின்றார்கள். சூரநாடு குஞ்சன் பிள்ளை அவர்கள் இதன் தலைவர். 1953ல் இதன் பணி துவங்கியது. அரசும், பல்கலைக் கழகமும் இணைந்து இந்த அகர முதலியைத் தொகுக்கின்றன. பல்கலைக் கழக நல்கைக்குழு, ஆண்டு தோறும் இதன் செலவில் 100க்கு 60 விழுக்காட்டைத் தந்து உதவுகின்றது.

இந்த அகரமுதலிக்காக, இக்குழு ஊர்ஊராகச் சென்று சொற்களைத் தொகுத்ததாம். இப்படிச் சென்றுவர, 12 ஆண்டுகள் பிடித்ததாம்! 5 ஆண்டுகளுக்கு ஒரு மடலமாக வெளியிடுகிறார்கள். இதுவரை 3 மடலங்கள் வெளிவந்துள்ளன.

**குடிசைகளுக்கு மின் வசதி**

200 சதுர அடி பரப்பில் அமைந்துள்ள மண்ணால் கட்டப்பட்ட குடியிருப்புக் கூரை வீடுகளுக்கு மாதம் ரூ. 2-50 மட்டும் கட்டணம் வசூல் செய்து ஒரு 40 வாட் பல்புடன் இலவச மின் இணைப்புக் கொடுககத் தமிழ் நாடு மின்சார வாரியம் முன் வந்துள்ளது. இந்தப் பயனைப் பெற விரும்புபவர்கள் ஒருமுறை மின் இணைப்பு தங்கள் செலவில் செய்துகொண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மனுச் செய்துகொள்ளலாம் அல்லது ரூ. 10 செலுத்தினால் முழு மின் இணைப்பையுமே தமிழ்நாடு மின்சார வாரியம் செய்துகொடுக்கிறது.

**கன்னட அகரமுதலி**

கன்னடத்தில் ஒரு அகரமுதலி உருவாகின்றது. அதனைத் தனிப்பட்ட ஒரு இலக்கியக் கழகம் தயாரித்து வருகின்றது. இதற்கு அரசு போதிய நிதி உதவி செய்கின்றது. 18 பேர் இதில் நிலையாகப் பணியாற்றுகிறார்கள். அச்சுக்குப் போயிருக்கும் ஒவ்வொரு பகுதியையும் இருபது முறை திருத்துகிறார்களாம்!

'அகரமுதலி' உருவாக்கம் என்பது ஆழ்ந்த சிந்தனையில் உருவாவது; அயராத பணியில் வடிவம் பெறுவது. அதைத் தயாரிப்பது என்பது எளிதான செயல் அல்ல.

ஒரு குடிசையை, இன்றைக்குள் கட்டி முடித்துவிடலாம்; ஆனால், ஒரு பெரிய மாளிகையை அவ்வாறு கட்டி முடிக்க இயலுமா?

**என்ன நன்மை?**

அகரமுதலி தயாரிக்க ஏராளமான பார்வை நூல்கள் (Reference Books) தேவைப்படும். மேனாட்டினின்றும் அத்தகைய நூல்களை நாம் வரவழைத்தல் வேண்டும். அத்தகு அரிய நூல்களை-அகர முதலிகளை—கலைக்களஞ்சியங்களை வாங்குவதற்கு இவ்வியக்ககத்திற்குத் தமிழக அரசு இப்பொழுது ரூ. 12,884 அளித்துள்ளது.

'அகர முதலி' வெளிவருவதால் என்ன நன்மை?

* தமிழ் வளர்ச்சியடையும்; வடமொழிப் பிணிப்பினின்று மீளும்.

* நூலாசிரியர்களுக்குச் சொற்கள் உதவும்; புதிய அறிவியல் இலக்கியம் பெருகும்.

* சொல்லாராய்ச்சியாளர்களுக்கும், மொழியாராய்ச்சியாளர்களுக்கும் வழிகாட்டும்.

* மூன்று உலகக் கலைகள் வளர்ச்சி அடையும். அவை யாவன:

1. ஒப்பியன்மொழி நூல் (Comparative Philology)
2. உலக வரலாறு (World History)
3. சமுதாயப் பண்பாட்டு மாந்தர்நூல் (Social and Cultural Anthropology)

* உலக ஒற்றுமைப்பாட்டிற்கும் இது பேரளவு துணைசெய்யும்.

* இந்தித் திணிப்பு ஒழியும்

* திருக்கோவில் வழிபாடு தமிழில் நிகழும், தமிழன் அடிமைத்தனம் நீங்கும்.

**அன்னைத் தமிழுக்கு...**

இவ்வாறு தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவுதற்குப் பாவாணர் தலைமையில் உருவாகும் அகரமுதலி, அன்னைத் தமிழுக்கு ஓர் அணியாரமாகும் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

—பி.வி. கிரி

**காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது.**

**உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தைவிட மிகப் பெரிதாகும்.**

அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று.

அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்கின்ற சொல் வன்மை ஆகிய இவை தூது உரைப்பவர்க்கு இன்றிய மையாத மூன்று பண்புகளாகும்.

# குறள் குறித்து அறிஞர்கள்

உலகுக்கென்று ஒரு நூலை அளித்த ஒருவரை ஈன்ற பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. இது குறித்துத் தமிழ் மக்கள் இறும்பூ தெய்தலாம்; இறுமாப்படையலாம். ஆனால் திருவள்ளுவரைத் தமிழ் நாட்டளவில் கட்டுப் படுத்தலாகாது. அது தளையாகும்; சிறை யாகும்.

. . .

திருக்குறளின் உள்ளக் கிடக்கையை பல படக் கூறலாம். அவற்றுள் உயிர்ப்பாய் ஒளிர் வது ஒன்று. அஃது 'உலகம் ஒரு குலம்' என்பது.

திருக்குறள் ஒரு சுரங்கம். அஃது அவ்வக் கால உலகைப் புரக்கும் பொருள்களை அவ்வப் போது வழங்கும் பெற்றியது. அதினின்றும் இதுகாறும் அறிஞரால் எடுக்கப்பட்ட பொருள் சிலவே; மிகச் சிலவே. இவ் வேளையில் திரண்டுவரும் புது உலகமும், இனித் திரளப் போகும் பலவகை உலகங்களும் ஏற்கத்தக்க பொருள்கள் இன்னும் திருக்குறளில் மிடைந்து கிடக்கின்றன. திருக்குறட் சுரங்கம் வற்றாதது.

**— திரு. வி. க.**

உலகத்திலே இருக்கிற அத்தனை இலக்கியங்களையும் ஒன்றாய்த் திரட்டி ஒரு தட்டிலே அவைகளையும், மறுதட்டிலே நம் முடைய திருக்குறளையும் வைத்து எடை போட்டுப் பார்த்தால், திருக்குறள் இருக்கின்ற தட்டு அதிகமாகத் தாழ்ந்து நிற்கிற காட்சியைக் காண்போம். அதிக அளவிற்கு வலிவு மிக்க இலக்கியக் கருவூலத்தைப் பெற்றிருப்பவர்கள் நாம். அத்தகைய இலக்கியத்தை நமக்குப் படைத்துத் தந்துவிட்டுப் போயிருக்கிறவர் வள்ளுவர்.

வள்ளுவருடைய கருத்துக்களையெல்லாம் நாட்டிலே நடமாட விடவேண்டும். திருவள்ளுவ ருடைய கருத்துக்களை இந்த நாட்டிலே பரப்ப வேண்டுமென்று சொன்னால், நாம் அத்தனை பேரும் தமிழறிந்த தமிழர்களாக வாழவேண்டும்.

**—பேரறிஞர் அண்ணா**

உலகத்திற்கே பொதுவான வழிகாட்டி நூலாக திருக்குறள் இருக்கிறது. எல்லாக் காலத் தினருக்கும், எல்லா மொழியினருக்கும், எல்லா வகுப்பினருக்கும், எல்லாச் சமூகத்தினருக்கும், எல்லாத் தரத்தினருக்கும், எல்லா நிலையின ருக்கும், துறையினருக்கும் ஏற்றதாகவும் பயன் படக்கூடியதாகவும். இருக்கிறது.

சில புலவர்கள் சில நாடுகளுக்கு மட்டுமே உரியவர்களாகப் பாடுபட்டிருக்கிறார்கள். ஆனால், உலகத்திலுள்ள எல்லாருக்கும் எப் பொழுதும் பயன்படுகிற அளவுக்கு திருக் குறளைத் தந்திருப்பவர், திருவள்ளுவர் ஒருவர் தான்.

**— நாவலர் இரா. நெடுஞ்செழியன்**

தமிழர் திருநாளை ஓர் வெற்றித் திருநாள் எனலாம். ஏன் இது வெற்றித் திருநாளாகக் கருதப்படுகிறது? புதிய நெல் விளைந்து அரிசி யாகி விட்டது. கரும்பைச் சாறாக்கிச் சர்க்கரை காய்ச்சியாகி விட்டது. இரண்டையும் சேர்த்துப் பொங்கிச் சாப்பிடுகிறோம். உழைப்பின் முழுப் பயனை இன்று பெறுகிறோம். மஞ்சளும், இஞ்சி யும், வானுயர் கரும்பும் எல்லாம் விளையும் காலம். வீடு புதிதாகிறது. ஆளும் புதியவனாக மாறு கிறான். எங்கும் புதிய நெல், புதிய பானை, புதிய உடை, புதிய மலர், புதிய வளை, புதிய இல்லம் காணப்படுகின்றது. இதைப் பார்த்துத் தமிழ் மக்கள் இந்நாளை இயற்கையோடு இயங்கும் திருநாளாகக் கருதி, திருவள்ளுவர் ஆண்டின் தொடக்க நாளாகவும் எண்ணிக் கொண்டாடுகிறார்கள். நாமும் இந்நாளை இன்று சாதி, மத, அரசியல், கட்சி வேறுபாடு களின்றிக் கூடிக் கொண்டாடுகின்றோம். இதில் எவ்வளவு மகிழ்ச்சியிருக்கிறது!

— முத்தமிழ்க் காவலர்
**கி. ஆ. பெ. விசுவநாதம்**
("வள்ளுவர் உள்ளம்" என்ற நூலிலிருந்து)

# பாம்பன் பாலத்திட்டம்



இராமேஸ்வரம் தீவை இந்தியத் தீபகற்பத்துடன் இணைக்கும் இப் பாம்பன் சாலைப் பாலமானது, முற்றுப் பெற்றவுடன் நெடுஞ்சாலைத் துறையின் சாதனையாக மட்டுமின்றி தமிழகத்தின் சாதனையாகவே அமையும்.

இந்தியாவின் மிகப் பெரும் பாலங்களோடு ஒன்றாக இணைகின்ற பேறு இப் பாம்பன்சாலை பாலத்திற்குக் கிட்டுகிறது. பல பாலங்கள் பெரும் ஆறுகளின் எல்லைகளிலும் உப்பங்கழிகளிலுமே கட்டப்பட்டுள்ளன என்றாலும், பாம்பன் சாலைப்பாலம் மட்டுமே பரந்த கடலில் கட்டப்படும் முதல் சாலைப் பாலம் ஆக விளங்குகின்றது.

இப்பாம்பன் பாலமானது வடக்கே வங்கக் கடலையும் தெற்கே மன்னார் விரி குடாவையும் இணைக்கும் பாக் சந்தியில் அமைக்கப் பெற்றுள்ளது. எனவே, இப்பகுதியில் பாலம் கட்டுவதற்கான ஆய்வுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டபோதும், வடிவமைப்புத் திட்டம் தீட்டப்பட்டபோதும் பலவித இயற்கைக் கூறுகளைக் கருத்தில் கொள்ள வேண்டி நேர்நதது. அவற்றுள் கடல் நீர் அரிப்பானது முதலாவது இன்றியமையாத அம்சமாகும். அப்பகுதி முழுதுமே உப்புத் தன்மை வாய்ந்ததாக இருப்பதால் இரயில் பாலத்தின் பராமரிப்பே மிக்க கடினமான ஒன்றாகும். ஆகவே, சாலைப் பாலத்தில் கடலின் அரிப்பைக் குறைக்க வேண்டி மிகப் பெரும் அளவில் முன்னெச்சரிக்கைகள் மேற்கொள்ள வேண்டி இருந்தன.

தற்போதுள்ள மதுரை தனுஷ் கோடிச் சாலை மண்டபத்திற்கு அருகில் பாம்பன் ஆற்றிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் முற்றுப்பெற்று விடுவதால், இராமேசுவரம் தீவு '_ன் இந்திய தீப கற்பம், தற்சமயம் பாம்பன் நீர்வழியில் அமைந்துள்ள இருப்புப் பாதை மூலமாக மட்டுமே இணைக்கப்பட்டுள்ளது. இத்தீவில் உள்ள தேசிய முக்கியத்துவம் பெற்ற அருள்மிகு இராமநாதசுவாமி ஆலயம் பெருமளவில் சமயச் செல்வர்களையும், தன் நுண்ணிய கட்டட அமைப்பினால் சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கும் பெருமையுடைத்தாய் அமைந்துள்ளது.

ஆண்டிற்குக் கிட்டத்தட்ட 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை புரிகின்றனர். இத்தீவில் வாழ்பவர்களின் முக்கியத் தொழில் மீன் பிடித்தல் ஆகும். மேலும், இத்தீவில் சுண்ணாம்பு கற்களும், பவளப் படிவங்களும் மலிந்து கிடக்கின்றன. எனவே, இத்தீவில் கிடைக்கும் மீன்வகைகளையும் மற்ற பொருட்களையும் வெளிச் சந்தைகளுக்கு எடுத்துச் செல்ல இப்போது புகை வண்டிப் பாலத்தையே நம்பி இருக்க வேண்டி உள்ளது. இந்த முறையானது போதிய வசதியின்றி இருப்பதுடன் பருவ கால நிலைகளினால் ஏற்படும் இடர்ப்பாடுகளினால் பாதிக்கப்படும் தன்மை படைத்ததாயும் உள்ளது. எனவே, கட்டப்பட்டுவரும் இச்சாலைப் பாலமானது தீவுறை மக்களின் பொருளாதார நிலையையும், மீன்பிடிக்கும் தொழிலையும் மேம்படுத்தும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மேலும், தீவுமுனையில் உள்ள தனுஷ் கோடி வரை தங்குதடையற்ற சாலைப் போக்குவரத்திற்கும் இச்சாலைப் பாலம் உதவுகிறது.

இச்சாலைப் பாலத்திற்கான நேர்பாடானது ரெயில்வே பாலத்

**வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்.**

வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.


***தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்***
***தன்னையே கொல்லும் சினம்.***

**ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதானால், சினம் வராமல் காத்துக் கொள்ளவேண்டும்; காக்கா விட்டால் சினம் தன்னையே அழித்துவிடும்.**

திலிருந்து 52 மீட்டர் தென்மேற்காக அதற்கு இணையாக அமைந்துள்ளது. இந்தப் பாலத்தின் வடிவமைப்பின் முக்கிய அம்சம், அவ்வழியே செல்கின்ற கப்பலின் தங்குதடையற்ற போக்குவரத்துக்கு உதவுவதே ஆகும். கப்பல் போக்குவரத்து வழியின் குறுக்கே தற்போதுள்ள இரயில் பாலத்தில் 61 மீட்டர் நீளமுள்ள 'ஒரு செர்சர்' ஏற்றுக்கண் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் சாலைப் பாலத்திலும் அதே 61 மீ. அகலத்தில் கப்பல் போக்குவரத்து கண் அமைக்க முதலில் முடிவு செய்யப்பட்டது. ஆனால் கப்பல் போக்குவரத்துப் பகுதியின் நீரோட்டம் சற்றுச் சாய்வாக இருப்பதாலும் இரயில்வே பாலத்தின் தூண்களுக்கு நேரேயே சாலைப் பாலத்தின் தூண்களை அமைக்க முடிவு செய்யப்பட்டதாலும், 115.21 மீ. அகலத்திற்குக் கப்பல் போக்குவரத்துக் கண் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

பாலத்தின் கீழ் கப்பல்கள் தங்குதடையின்றிச் செல்ல, கடல் ஏற்ற நிலையிலிருந்து கப்பல் போக்குவரத்துக்கண்ணின் மேற்பகுதி அடிமட்டம் 16.76 மீ. உயரம் இருக்குமாறு பாலம் அமைக்கப்பட வேண்டும். இந்தக் குறைந்த அளவு உயரத்தை அமைக்க ஏற்றுக் கண்ணோ அல்லது சுழலும் கண்ணோ அமைக்கலாம்; அல்லது அந்த உயரத்துக்கு ஏற்றபடி மற்ற அணுகு கண்களில் தக்க சாய்வுகளை ஏற்படுத்தியும் அமைக்கலாம். ஆனால், அம்மாதிரி அமைக்கப்படும் நிலையில் இவ்வளவு வலுவான கான்கிரீட் சாலைப் பாலத்தை உப்புத்தன்மை வாய்ந்த கடல் நீர் சூழ்நிலைகளின் இடையே பராமரிக்கும் பணி மிகக் கடினமான ஒன்றாகும். மேலும், இரயில் பாலத்தைப் போலன்றி, சாலைப் பாலத்தில் போக்குவரத்தானது கால அடிப்படையில் கட்டுப்படுத்த முடியாத ஒன்றாக அமையும். இரவு, பகல் எந்நேரமும் இப்பாலமானது தங்கு தடையற்ற போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டி இருக்கும்.

இந்த அடிப்படை நிலையை வைத்துத்தான், மண்டபம் பக்கத்தில் ஒரு விழுக்காடு சாய்நிலையும் (Gradient), பாம்பன் பக்கத்தில் இரண்டு விழுக்காடுகள் சாய்நிலையும் அணுகு சாலையின் பக்கங்களில் அமையுமாறும் தங்கு தடையற்ற கப்பல் போக்குவரத்துக்கான குறைந்த அளவு உயரமாகச் சராசரி கடல் மட்டத்திலிருந்து 17.68 மீட்டர் இருக்கும்படியும் இப்பாலம் அமையப் பெற்றுள்ளது.



முற்றுப்பெற்ற பாலத்தூணின் அடித்தளம்

இந்தப் பாலத்தின் மொத்த நீளம் 2345 மீட்டர். (ஏறத்தாழ 1½ மைல்) பாலத்தின் மத்தியில் கப்பல் போக்குவரத்தின் வசதிக்காக 115.21 மீட்டர் அகலமுள்ள பாலக் கண்ணும், அதன் இருபுறமும் ஒவ்வொன்றும் 68.58 மீட்டர் அகலமுள்ள இரு நங்கூரக் கண்களும் அமைந்திருக்கும். மண்டபம் பக்கக் கரையானது 27.13 மீட்டர் அகலமுள்ள 53 கண்களையும், 40.69 மீட்டர் அகலமுள்ள ஒரு கண்ணையும் கொண்டு இணைக்கப்பட்டிருக்கும். அதேபோல் பாம்பன் பக்கக் கரையானது 27.58 மீ. அகலமுள்ள 9 கண்களையும் 27.13மீ. அகலமுள்ள 12 கண்களையும், 40.69 மீ. அகலமுள்ள ஒரு கண்ணையும் கொண்டு இணைக்கப்பட்டிருக்கும். ஆக, இப்பாலம் மொத்தம் 79 பாலக் கண்கள் கொண்டதாயிருக்கும். இச்சாலை பாலத்தின் மேல் 7.50 மீட்டர் அகலமுள்ள சாலை வழியும், அதன் இருபுறமும் 1.50 மீட்டர் அகலமுள்ள நடைபாதையும், அமைக்கப்படும். மிக அதிக அளவில், நடந்து செல்வோர் போக்குவரத்தையும் கருத்தில் கொண்டு இந்த நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது.

அணுகு கண்கள், மணற்கல் அடுக்கிற்குக் கீழ் 0.45 மீ. ஆழத்திற்கு அகழ்ந்தெடுத்து அமைக்கப்படும் அடித்தளத்தையும், முன்கூட்டியே வலுவேற்றப்பட்ட கான்கிரீட் மேல் தளத்தைக் கொண்டனவாகவும் அமையும். கப்பல் போக்குவரத்துக் கண்ணும், நங்கூரக் கண்களும் 15.24 மீட்டர் ஆழத்திற்குக் கிணறுகளை இறக்கி அமைக்கப்பட்ட அடித்தளத்தைக் கொண்டும் அமையும். இப்பாலத்தின் இருபுறமும் அமைக்கப்படும் அணுகு சாலைகளின் நீளம், மண்டபம் பக்கம் 6.6 கி.மீ. பாம்பன் பக்கம் 2.2 கி.மீ. இருக்கும்.

இப்பாலத்திற்காக, அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூ. 532.87 இலட்சங்கள் ஆகும். பணி முடிவடையும்போது ரூ. 815.83 இலட்சங்கள் செலவு ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பாலம் தேசிய நெடுஞ்சாலைப் பாலமாக அமைவதால் அனைத்து செலவுகளையும் மத்திய அரசே மேற்கொள்கிறது. பணியை மாநில அரசு மேற்கொண்டு நடத்துகிறது.



# தமிழகத்தின் அமுதசுரபி!

**கே. எம். ராமாநுஜம்,**

**துணை வேளாண்மை இயக்குநர்,**

**வேலூர்.**

சிங்காரச் சென்னையை விட்டு விரைவுப் பேருந்து புறப்பட்டு விட்டது!

இளஞ்சூரியன் தன் செங் கதிர்களால் வானத்தில் தங்க முலாம் பூசிக் கொண்டிருந்தான்.

பேருந்து சுங்குவார்சத்திரத் தில் நின்று இளைப்பாறி விட்டு மீண்டும் புறப்பட்டுவிட்டது. வளரும் வடார்க்காட்டில் மலரும் வேளாண்மையைக் காணத்தான் அன்று நான் பயணம் செய்தேன்.

'வடார்க்காடு உங்களை வர வேற்கிறது' என்கிற வரவேற்புப் பலகை.

காவேரிப்பாக்கம் அருகில் நுழைவாயில்...

எங்கோயிருந் குற்றாலக் குளிர்ச்சியுடன் வீசிய தென்ற லில் மிதந்த உணர்ச்சி-ஏதோ ஒரு மணம்-இரு புறமும் பார்க்கிறேன். பச்சைப் பேசலென்ற நெல் வயல் களில் கதிர்கள் சதிராடிக்கொண் டிருந்தன.

வடார்க்காடு என்றாலே ஆர்க் காடு கிச்சடி அரிசி நினைவுக்கு வரத்தவறாது. அது இம்மாவட் டத்தின் தனிச்சிறப்பு. சன்னமாக வும் தரமிகுந்தும் இருக்கும் இந்த அரிசியை அறியாதார் யார்?

வடார்க்காடு நெல் விளைச்ச லுக்குப் பெயர் பெற்றதாகும். ஆண்டுதோறும் முப்போகம், சம்பா, நவரை, சொர்ணவாரி மூன்று பட்டங்கள். பருவ மழை யில் தன் பருவத்தின் பெரும் பகுதியைக் கழிக்கும். சம்பாவோ 4.5 இலட்சம் ஏக்கர், ஏரிக்கரை களில் எக்காளமிடும் நவரையோ 2 இலட்சம் ஏக்கர், கிணறுகளைச் சுற்றி பச்சைப்பட்டாடை விரிக் கும் சொர்ணவாரியோ அரை இலட்சம் ஏக்கர். ஏழு இலட்சம் ஏக்கரிலே 7 இலட்சம் டன் அரிசியை அள்ளிக் கொடுக்கும் வடார்க்காடு தமிழகத்தின் அமுத சுரபி. தஞ்சையை மிஞ்சும் விளைச்சல் தரத்திலே என்று மில்லை. புத்தம் புது நெல் லுக்குப் புகுந்தவீடு—வடார்க் காடு!

உயர் விளைச்சல் ரகங்கள் சுமார் தொன்னூறு சத பரப்பள வில் சாகுபடி—

ஏக்கருக்கு இரண்டு டன் மகசூல் வியர்வைத் துளிகளையெல்லாம் வித்துக்களாகவும், நெல் முத்துக் களாகவும் மாற்றும் உழவர்களின் உழைப்பினைப் பாராட்டிக் கொண்டு இருந்தது என் நெஞ்சம்.

பேருந்து திருவத்தை நெருங்கி வந்தது. நாசியை ஈர்க்கும் மணம் வருகிறதே...ஆம். வெல் லத்தின் மணம்தான் அது! செந் நெல்லைத் தாண்டி செங்கரும் பைக் காணுகின்றோம்.

ஓங்கி வளர்ந்த கரும்புத் தோட்டங்கள் காற்றினிலே அசைந்தாடி வரவேற்கிறது. கோ. 6304 கரும்பு அதிகமாகக் காணப்படுகின்றன. 80,000 ஏக்க ரிலே கரும்புக் கழனிகள் மூன்று. தமிழ்நாட்டின் ஆலைகளிலே அதிக சர்க்கரைச் சத்து திருப் பத்தூர் ஆலையில்தான் கிடைக் கிறது.

ஊர்தோறும் வெல்லப்பாத வழிந்தோடும் வயல்கள். பசு மாத்தூர் வெல்லத்தின் பளப் பளப்பு என்றுமே இம்மாவட்டத் தின் தனிச் சிறப்பு.

வரிசையாக வெல்ல மண்டி களைக் கண்டவுடன் தான் வேலூர் வந்துவிட்டோம் என்று உணர்ந்தேன். வழியெல்லாம் புஞ்சையிலே புது ரக நிலக் கடலைகள்.

பாலாற்றங்கரையினிலே மீண் டும் என் பயணத்தைத் தொடரு கிறேன்.

வரிசை வரிசையாக வாழைத் தோட்டங்கள், குட்டையும், நெட்டையுமாக நின்று குலைத் தள்ளிக் கொண்டிருக்கின்றன. எட்டடி ரொபஸ்டா, குட்டை 'கேவண்டிஷ்' இங்குதான் அதிகம்.

அக்கரைச்சீமைக்கு அடிக்கடி செல்லுகிற ரொபஸ்டா வாழை பலரை இங்கு வாழவைத்துக் கொண்டிருக்கிறது.

8,000 ஏக்கரில் சாகுபடிஉண்டு விரிஞ்சிபுரத்தில் வாழைக்கு ஆராய்ச்சிக் கூடமும் உண்டு.

---

*அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை.*

தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல், தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே தலையான பண்பாகும்.

**செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்.**


**ஒருவன் செய்யத் தகாத செயல்களைச் செய்வதனால் கெடுவான்; செய்யத் தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதனாலும் கெடுவான்.**

குடியேற்றத்திலே பேருந்து நின்றவுடன் இரண்டு வாழைப் பழத்தைப் பிட்டு விழுங்கிவிட்டு ஒரு இளநீரையும் குடித்து வைத்தேன்.

'' பிள்ளையைப் பெற்றால் கண்ணீரு, தென்னையை நட்டால் இளநீரு'' என்று நம்பித்தான் இங்கு 15,000 ஏக்கரில் தென்னை வளர்க்கிறார்கள் போலும்!

பாலாற்றங்கரையிலே தோப்பெல்லாம் தென்னை நெட்டைக்குப் பின்னாலே குட்டையும், அவை இரண்டுக்கும் பிறந்த ஒட்டு ரகமும் இங்கு உண்டு. தமிழகத்திற்கு ஒட்டு ரகத்தை வழங்கும் தென்னை நாற்றங்கால் நவ்லாக் பண்ணையில் உள்ளது. நெட்டையிலே இரண்டு ஒரு இலட்சம் ஒட்டு ரகத்திலே கால் இலட்சம் என்று இந்த கற்பகத் தருவை ஆண்டுதோறும் நட்டு வளர்க்கிறார்கள்.

வானம்பாடி வானத்திலே பறக்கிறது. பேருந்து வாணியம் பாடியை நோக்கி விரைகிறது!



என்ன ரம்மியமான காட்சி—மேக மேலாடையினால் தன் பருவ எழிலை மறைப்பதுபோல் காட்டி நம் மனத்தை மயக்கும் ஏலகிரியின் எழில் தோற்றம் நம் கண்முன்னே—

அந்த ஏரியின்மேல் பேருந்து செல்லும்போது பார்க்கும் இடமெல்லாம் இயற்கையின் எழிலோவியம்தான் தெரிகிறது.

வண்ண வண்ண ரோஜாக்கள் தின்ன தின்ன ருசிக்கும் கனிகள் பார்த்தாலே பசி தீரும். பச்சைக் காய்கறிகள், தேன் சிந்தும் பலாச் சுளையும் காபூல் மாதுளையின் கற்கண்டு முத்துக்களும் ஏலகிரியில் ஏராளம்! ஏராளம்!





இதமான குளிர் காற்று. புத்துணர்ச்சியூட்டும் பொலிவு. ஆரவாரமற்ற அமைதி சூழ் ஏலகிரி, ஏழையின் ஊட்டி. மனத்தை மயக்கும் அந்த மந்தகாச மலையை விட்டு பேருந்து திருப்பத்தூர் வந்து சேர்ந்த உடன், மாம்பழ வாசனை வரவேற்றது.

இங்கு விளையும் கலப்பாடு மாம்பழத்துக்குத்தான் எவ்வளவு சுவை. மாவட்டத்தில் 15,000 ஏக்கரிலே விளையும் மாம்பழத்துக்கு என்றுமே கிராக்கி உண்டு.

திருப்பத்தூரிலே விளையும் துவரைக்குத் தனி ருசி உண்டு என்பார்கள். அது உண்மைதான் என்பதை அங்குக் கிடைத்த அறுசுவை உணவிலே கண்டு கொண்டேன்.

70,000 ஏக்கரிலே துவரையும் 20,000 ஏக்கரிலே உளுந்தும், பச்சைப் பயறும் விளையும் மாவட்டமல்லவா?

பருப்பு உற்பத்தியில் ஒரு திருப்பத்தைக் காட்டும் திருப்பத்தூரைத் தாண்டி நகர்ந்தது பேருந்து.

பேருந்து ஓடத் தொடங்கியதும் பருத்தி வயல்கள் பார்வையில் பட்டன. விவசாயிகள் பொதி பொதியாகப் பருத்தியை வண்டிகளில் ஏற்றி மாடப்பள்ளி விவசாய சேவைச் சங்கத்திற்குக் கொண்டு செல்கிறார்கள். விரைவாக வடார்க்காட்டில் ஒரு 'மினி மான்செஸ்டர்' தோன்றிக்கொண்டிருக்கிறது.

வரலட்சுமி விதைத்த வயல்களிலெல்லாம் தனலட்சுமியின் தாண்டவம்-தெரிகிறது.

சந்தனம் மணக்கும் ஜவ்வாது மலையைத் தாண்டி இப்போது பேருந்து வந்து நின்றது.

மத்திய அரசு பண்ணையைப் இப்போது பார்க்கிறோம்.

11,000 ஏக்கர் பண்ணை அது.

ராட்சச இயந்திரங்களினால் சாகுபடி வேலைகள் நடக்கின்றன.

இங்கு விளையும் மக்காளச் சோளம். சூரியகாந்தி, பிரிமியர் பீன்ஸ், ரோமா தக்காளி வித்துக்கள் நாட்டின் சொத்துக் களாகி வருகின்றன.

பயணம் தொடருகிறது !

பெண்ணையின் வண்ண எழில் இப்போது நம்மை வரவேற்கிறது.

சாத்தனூர் அணையில் சதிராடும் நீரோட்டம் அதில் நெஞ்சை அள்ளும் மீனாட்டம். —சாத்தனூர் பாசனப் பகுதியில் நீர் நிர்வாக நிரூபணங்களைச் செய்து காட்டுகிறார்கள்.

''அளவோடு நீர் பாய்ச்சி அமோக விளைச்சல் காண'' அவை அடித்தளம் அமைக்கின்றன.

அண்ணாமலைத் தெய்வத்தை ஒரு சுற்று சுற்றிவிட்டு போளூரை நோக்கிப் புறப்பட்டது பேருந்து.

அங்குதான் விதைச் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. ஆண்டுக்கு 2,000 டன் சான்றிதழ் பெற்ற விதைகளை இங்குத் தயார் செய்து அனுப்புகிறார்கள்.

மீண்டும் நெல்லும், கன்னலும் வாழையும், தென்னையும், மஞ்சளும், காயும், கனியும் வழியெல்லாம் மண்டிக்கிடக்கின்றன.

மாவட்டத்தில் விளையும் காய்கறிகளுக்குத் தனிச் சுவை உண்டு. இலவம்பாடி கத்தரிக்கு இணையெங்கும் இல்லை. கணியம்பாடி வந்ததும் ஆயிரம் ஏக்கர் நிரூபணப்பண்ணை ஆரஞ்சு நிற விளம்பரப்பலகை நம்மை 'பிரேக்' போட வைக்கிறது. புஞ்சையிலும் பசுமைப் புரட்சியைப் புகுத்திய ஆயிரம் ஏக்கர் பெரு விளக்கப்பண்ணை இங்குதான் அமைந்துள்ளது. தமிழகத்தின் வேளாண்மை வளர்ச்சிக்கு இது ஓர் விடிவெள்ளி. கணியம்பாடி ஒரு கலங்கரை விளக்கமாக இன்று தமிழகம் முழுவதும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

மழைத்துளியெல்லாம் மகசூலாக மாற்றிய காட்சியை இங்குக் காணலாம். மழைக்கு ஏங்கிய மண்ணெல்லாம் இன்று பொன் விளையும் பூமி.



மண்ணைத் தரம் அறிந்து, உர மிட்டதால் உயர்ந்தது விளைச்சல். தமிழகத்திலே அதிகமாக 60,000 மண் மாதிரிகளைச் சோதித்த மாவட்டமல்லவா இது-இது மட்டுமா?

தமிழ்நாட்டிலேயே நிலக் கடலைப் பரப்பிலும் மொத்த விளைச்சலிலும் இம்மாவட்டந்தான் முன்னணியில் உள்ளது.

எங்கெங்கும் காணினும் கேணியடா!

அதில் மின் சக்தி வெளிச்சம் போடுதடா—

என்று சொல்லத தக்க வகையில் மாவட்டத்தில் மூன்று இலட்சம் கிணறுகள் உள்ளன. அதில் 1½ இலட்சம் கிணறுகளில் மின்சாரப் பம்பு செட்டுகள் நீர் இறைக்கின்றன.

வற்றாத வள நதிகள் இல்லையென்றாலும் உழைப்பில் வற்றாத உழவர் கூட்டம் வாழும் தேன்கூடு வடார்க்காடு!

''என்ன வளம் இல்லை இந்த வடார்க்காட்டில்?

ஏரோட்டம் இல்லையென்றால் வயிற்றுக்குச் சோறோட்டம் ஏது?

சோறோட்டம் இல்லையென்றால் ஊரில் தேரோட்டம் ஏது?

என்ற உழைப்பின் சிறப்பினை-உழவுச் செல்வத்தின் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும் ஏர்க்காடு, அதுவே வழிகாட்டும் வடார்க்காடு!

*அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது*
*அஞ்சல் அறிவார் தொழில்.*

அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும்; அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடையவரின் தொழிலாகும்.

*தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினாற் சுட்ட வடு.*

தீயினால் சுட்ட புண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால் நாவினால் தீய சொல் கூறிச் சுடும் வடு என்றும் ஆறாது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ரூபாய் 50 இலட்சம் மூலதனத்துடன், இராமநாதபுரம் மாவட்டத்தில் 5566 ஏக்கரா பரப்பளவு கொண்ட மாரியூர் வாலி நோக்கம் உப்பு கூட்டுத் திட்டங்களை உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இக்கூட்டுத் திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 145 இலட்சம். அதனுடைய விவரம் கீழே தரப்பட்டுள்ளது :

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| உப்பளங்கள் ... | 46.84 |
| நிலம் மற்றும் கட்டடங்கள் | 36.71 |
| இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் | 41.05 |
| முன்னோடித் திட்ட வேலைச் செலவுகள் | 10.60 |
| இதர செலவினங்கள் | 3.80 |
| நடைமுறைமூலதனம் | 6.00 |
| மொத்தம் | 145.00 |

இக்கூட்டுத் திட்டங்களை உருவாக்குவது படிப்படியாக எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதனால், உப்பு உற்பத்தி செய்யும்பொழுது திட்ட விரிவுபடுத்தும் வேலையும் நடைபெறுவதால், சுமார் ரூபாய் 40 இலட்சம் இத்திட்டத்தின் மூலமாகவே பெருக்குவதற்கு வழி செய்யப்பட்டுள்ளதானது, இத்திட்டத்தின் ஒரு சிறந்த அம்சமாகும்.




அரசு இத்திட்டத்திற்கு ரூபாய் 50 இலட்சம் மூலதனமாகவும் இதர நிதி நிறுவனங்கள் மூலமாக ரூபாய் 40 இலட்சமும் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் மூலம் ரூபாய் 15 இலட்சம் இத்திட்டத்திற்கு மூலதன உதவியாக வழங்கப்பட்டது. அரசு இக்கூட்டுத் திட்டத்திற்கு இதுவரை ரூபாய் 45 இலட்சம் பங்குகளாகச் செலுத்தியுள்ளது. மீதியுள்ள ரூபாய் 5 இலட்சமும் நடப்பு ஆண்டில் செலுத்தப்படும். 1979 மார்ச் மாதம் முடிய இத்திட்டத்திற்கு ரூபாய் 70 இலட்சம் செலவாகியுள்ளது.

இத்திட்டப் பகுதியைச் சுற்றி சுமார் 24 மீட்டர் நீளமுள்ள சுற்று அணைக்கரை போடப்பட்டு, வெள்ளம் உட்புகாவண்ணம் தடுக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 100 உப்பளங்கள் தயார் செய்யப்பட்டு, அவைகளில் உப்பு தயாரிக்கப்பட்டு வருகின்றது. சுமார் 370 ஏக்கர் பரப்பளவில் கடல் நீரைக்கெட்டிபடுத்துவதற்கும் மற்றும் சுமார் 846 ஏக்கராப் பரப்பளவில் கடல் நீரைத்தேக்கி வைப்பதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது. இத்தேக்கங்களுக்கு நிமிடத்திற்கு 30,000 காலன் கடல் நீர் பம்பு செய்வதற்குத் திட்டமிடப்பட்டு, இதுவரை, நிமிடத்திற்கு 20,000 காலன் கடல் நீரைப் பம்பு செய்யும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இக்கூட்டுத் திட்டத்தில் இதுவரை 1650 ஏக்கராக்கள் தயார் செய்யப்பட்டு, 1978-ஆம் சுமார் 6500 டன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மேலும், 500 ஏக்கராக்கள் தயார் செய்யப்பட்டு கூடுதலாக 100 உப்பளங்கள் உப்பு உற்பத்திக்குத் தயார் செய்யப்படும். இதன் மூலம் சுமார் ரூபாய் 15 இலட்சம் பெறுமானமுள்ள 30,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 1500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டுவரை இத்திட்டத்தில் சுமார் ரூபாய் 19 இலட்சம் நட்டமாகக் கணக்குகளில் காட்டப்பட்டாலும், 1981 முதல் இத்திட்டம் இலாபத்தில் இயங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.


சமீப காலத்தில் டிட்கோ நிறுவனம் மேலும் இரண்டு திட்டங்களுக்கான முன்னோடி அறிக்கைகளைத் தயாரித்துள்ளது. அவைகளில் ஒன்று தஞ்சை மாவட்டம் மரவக்காடு—வடகாடு பகுதியில் சுமார் 5,400 ஏக்கராப் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்யும் திட்டமாகும்.

இத்திட்டப்பகுதி வேதாரண்யம் சதுப்பு நிலப்பகுதியிலுள்ள சுமார் 60,000 ஏக்கரா பரப்பளவின் ஒரு பகுதியாகும். இத்திட்டப்பகுதியில் சுமார் 10 இலட்சம் டன் உப்பு உற்பத்தியும், கடல் இரசாயனத் திட்டங்களையும் உருவாக்குவதற்கான நடைமுறைத் திட்ட அறிக்கையை ''டிட்கோ'' நிறுவனம் தயாரித்துள்ளது. இச்சதுப்பு நிலப்பகுதி அபூர்வமான சதுப்பு நிலப்படர் தாவர வகையை உடையதாகவும் இடம் பெயரும் பறவை இனங்களைக் கவர்வதாகவும் உள்ளதனால் இப்பகுதியில் உப்பு உற்பத்தி செய்யும் திட்டம் நிறுவுவது, இப்பகுதியில் வாழும் உயிரின வாழ்க்கைச் சூழ்நிலையைப் பாதிக்குமென்று அரசு வனத்துறை தெரிவித்துள்ளது. ஆனால், இச்சூழ்நிலையைப் பாதிக்காத வண்ணம் சதுப்பு நிலப் பகுதியின் மேற்குப்புறத்தில் 5,400 ஏக்கராப் பரப்பளவில் மரவக்காடு திட்டம் உருவாக்குவதற்கான ஆணையை 1978-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரசு பிறப்பித்துள்ளது. இத்திட்ட மதிப்பீடு சுமார் ரூபாய் 2 கோடியாகும். இத்திட்டத்தின் மூலம் 1000 நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

இந்நிறுவனம் எடுத்துள்ள மற்றொரு திட்ட வேலை, அடையாற்றிலிருந்து சூனாம்பேட்டை வரையுள்ள பக்கிங்காம் கால்வாய்ப் பகுதியில் உப்பு உற்பத்தி செய்வதற்கான திட்டமொன்றை வகுத்தலாகும்.

# டாடா அக்ரிகோ

அசலின் சின்னம்



## நீங்கள் வாங்கக்கூடிய நம்பகமிகுந்த விவசாயக் கருவிகளுக்கு உத்தரவாதம்

# அக்ரிகோ

டாடா ஸ்டீலின் ஓர் பிரிவு.
உயர்தர தயாரிப்பாளர்: பௌராஸ், ஷோவல்ஸ்,
க்ரோ பார்ஸ், பிகாக்ஸஸ், ஸ்லெட்ஜ் ஹாமர்ஸ்.

எல்லா விவரங்களுக்கும் எழுதவேண்டிய முகவரி:
தி டிவிஷனல் மானேஜர்
தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
அக்ரிகோ, ஜாம்ஷெட்பூர் 831 009

TIS 3584

ஜாக்கிரதை. போலியான கருவிகளை வாங்கி ஏமாறுதீர்கள்.

உத்தரவாதம் பெற்ற அக்ரிகோ வியாபாரிகளிடம் மட்டுமே வாங்குங்கள்.

*புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்*
*அறங்கூறும் ஆக்கம் தரும்.*

**புறங்கூறிப் பொய்யாக நடந்து உயிர்வாழ்தலைவிட,**
**அவ்வாறு செய்யாமல் வறுமையுற்று இறந்து விடுதல்,**
**அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைத் தரும்.**



# முட்டை கெடாமலிருக்க...


**ஏ. பி. சாந்தி,**
**உணவு நுண்ணியல் துறை,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்,**
**கோவை.**


கிராமங்களிலும், பட்டணங்களிலும் அநேகர் கோழிப்பண்ணைகளைவைத்துள்ளனர். ஏனெனில் இது ஒரு இலாபகரமான தொழில். கோழிப்பண்ணைகளின் வளர்ச்சி, சென்ற பத்து ஆண்டுகளில் மிகவும் அதிகரித்துள்ளது.

கோழிமுட்டை ஒரு சத்து மிகுந்த உணவுப் பொருள். இதில் புரதச்சத்து, கொழுப்புச் சத்து, இரும்புச்சத்து, உயிர்ச்சத்துக்கள் ஏ.பி. போன்றவை உள்ளன. முட்டையின் புரதச் சத்தின் தரம் மற்ற எல்லா உணவுப் பொருட்களின் புரதங்களைவிட மேலானது. இத்தகைய தன்மைவாய்ந்த முட்டை விரைவில் கெட்டுப் போகிறது. சாதாரணமாக முட்டை, அறை வெப்பநிலையில் (28.34 சி) ஒரு வாரம் மட்டுமே தரமுள்ளதாய் இருக்கிறது.

நம் நாட்டில் ஆண்டொன்றுக்கு சுமார் 12,000 மில்லியன் முட்டைகள் உற்பத்தியாகின்றன. ஆனால், அவற்றைப் பாதுகாத்து அதிக நாட்கள் கெடாமல் சேமித்து வைப்பதற்கு வசதியில்லை.

விற்பனை வசதிகள், சீரான முறையில் இல்லாததால் சில சமயங்களில் பண்ணைகளிலோ, அல்லது வியாபாரிகளிடமோ முட்டைகள் விற்காமல் தேங்கி விடுகின்றன. அச்சமயங்களில் முட்டைகள் கெட்டுப் போனதால் நஷ்டமேற்பட நேரலாம். மேலும், முட்டைகள் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து வெகு தொலைவிற்கப்பாலுள்ள இடங்களுக்குச் சில சமயங்களில் அனுப்பப்படுகின்றன. இதனால் முட்டையிட்டுப் பல நாட்களுக்குப் பின்பே அது விற்பனையாக வேண்டியுள்ளது. நம் நாட்டின் வெப்பநிலை அதிகமானதால், முட்டை சீக்கிரத்தில் கெட்டுப்போக ஏதுவாகிறது.

இவ்வாறு ஏற்படும் சேதங்களைத் தடுத்து, முட்டையைச் சுலபமாக அதிக நாட்கள் பாதுகாக்கத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உணவு நுண்ணியல் துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பயனாக ஒரு சுலபமான வழிமுறை கண்டறியப்பட்டுள்ளது.

கடலை எண்ணெய் 10.0மில்லி லிட்டர், தண்ணீர் 100 மில்லி லிட்டர், ட்ரைஇத்தானால் அமைன் 1 மில்லி லிட்டர், ப்யூடிலேடட் ஹைடிராக்ஸிடாண்ணயின் 100 மில்லி கிராம், அக்ரிமைசின் 20 மில்லி கிராம் ஆகியவற்றை ஒன்றாக ஒரு 'மிக்ஸியில்' அடித்துக் கலந்து கொள்ள வேண்டும். இப்போது நீரும் எண்ணெய்யும்சேர்ந்த 'எமல்ஷன்' கலவை வெண்மை நிறத்தில் காணப்படும். இதை ஒரு தெளிப்பானைக் கொண்டு முட்டைகளின் மேல் அடிக்கவேண்டும். வீடுகளில் கொசு மருந்து அடிக்க உபயோகிக்கும் கருவியை இதற்குப் பயன்படுத்தலாம். ஆயிரக்கணக்கான முட்டைகளுக்கு விவசாயத்தில் உபயோகிக்கும் பெரிய தெளிப்பான்களைப் பயன்படுத்தலாம். ஆனால், ஏற்கெனவே வேறு மருந்துகளையும், கொல்லிகளையும் தெளிக்கப் பயன்படுத்தப் பட்ட தெளிப்பான்களைஇதற்கு உபயோகிக்கக் கூடாது. தெளிப்பான்கள் இல்லாத நேரங்களில், ஒரு பஞ்சை இந்தக் கலவையில் நனைத்து முட்டைகளின் மேல் துடைக்கலாம்.

ஒரு லிட்டர் 'எமல்ஷன்' கலவையைக் கொண்டு சுமார்6,000 முட்டைகளைத் துடைக்கலாம். அல்லது 3,500 முட்டைகளின் மேல் தெளிக்கலாம். ஆயிரம் முட்டைகளைக் கலவையால் துடைக்க 85 காசும், கலவையால் தெளிக்க ரூ. 1.50 ஆகும். கலவையைத் தெளிக்கும்போது, அது முட்டை இல்லாத இடங்களிலும் படுவதால் அதிகச் செலவாகிறது. ஆனால், பெரிய கோழிப் பண்ணைகளில் தெளிக்கும் முறையே சிறந்ததாகும். பெரிய தெளிப்பானை உபயோகிக்கும்போது, ஒரு மணி நேரத்தில், இரண்டுவேலையாட்கள் வைத்து 8,000 முட்டைகளின்மீது தெளிக்கலாம்.

முட்டைகளைத்துடைப்பதால் குறைந்த செலவானாலும், இப்படிச் செய்ய அதிக நேரமாகும். மேலும், ஒவ்வொரு முட்டையாகத் துடைக்கும் போது,அவை விழுந்து உடைய வாய்ப்புண்டு. இதனால் தெளிக்கும் முறையே சிறந்தது.

இவ்வாறு கலவை தெளிக்கப் பட்ட முட்டைகளை நல்ல காற்றோட்டமுள்ள அறைகளில் வைக்கவேண்டும். இம்முட்டைகளை அறை வெப்பநிலையில் 4 வாரங்களுக்கு, முட்டையின் தரம் அதிகமாகக் குறையாமலும், கெடாமலும் வைத்திருக்கலாம்.



# புதுக்கோட்டை


—வி. டி. வீரப்பன்

உதவி இயக்குநர்

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,


புதுக்கோட்டை மாவட்டம் தமிழகத்தில் 15-வது மாவட்டமாக 1974ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 14ந் தேதி முதல் இயங்கி வருகிறது.

இன்றையப் புதுக்கோட்டைப் பகுதி தமிழகத்தின் தொன்மையான பகுதிகளில் ஒன்றாகும்.

புதுக்கோட்டைப் பகுதியில் சமண, புத்த மதங்கள் ஒரு காலத்தில் சிறப்புற்றிருந்தன. அவர்களின் பள்ளிகள், குகைச் சிற்பங்கள் ஆகியவற்றிற்கான சின்னங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம் சுற்றுலாத் தலங்களின் மிகுதியால் சிறப்புடையும் மாவட்டம் ஆகும். விராலிமலை முருகன் கோயிலைப் பற்றியும், சித்தன்னவாசலில் உள்ள அழகிய ஓவியங்களைப் பற்றியும், அழகிய சிற்பங்களைக் கொண்ட ஆவுடையார்கோயிலைப் பற்றியும் கேள்விப்படாதவர்கள் இருக்க முடியாது. சில சுற்றுலாத் தலங்களைப் பற்றி இப்போது காண்போம்.

புதுக்கோட்டை நகரத்தில் ஒரு பகுதியாகிய திருக்கோகர்ணத்தில் அமைந்துள்ள அருள்மிகு பிரகாதாம்பாள் உடனுறை கோகனேஸ்வரர் ஆலயம் காணத்தக்க ஒன்று. இத்தலம் சேர, சோழ, பாண்டியர்களால் திருப்பணி செய்யப்பட்டது. பிற்கால சோழர் காலத்திலும், நாயக்கர் காலத்திலும் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள குடவரைக்கோவில் கி.பி.7ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதாகும். இது மகேந்திர வர்மன் பாணியை ஒத்திருக்கும், குடவரை அமைப்பைக் கொண்டது. இதன் முகமண்டபத்தில் வடக்குப் பகுதியில் இருக்கும் கங்காதரர் குடைச்சிற்பம் தமிழ் நாட்டில் மிகச்சிறந்த சிற்பங்களில் ஒன்றாக விளங்கும் பெருமையுடையது. இங்குள்ள குடவரைக் கோயிலும், சிற்பங்களும் புதுக் கோட்டை மாமன்னர் அவர்களின் வாகனங்கள் அமைப்பும் மிகச் சிறப்பானது ஆகும்.

புதுக்கோட்டையில் 1910ஆம் ஆண்டு மன்னர் மார்த்தாண்ட பைரவ தொண்டமான் என்பவரால் துவக்கப்பட்ட அருங்காட்சியகம் உள்ளது. புதுக்கோட்டையின் தொன்மைச் சிறப்பையும், கலைச் செல்வங்களையும், இயற்கை வளங்களையும் நினைவுக்கூட சிறந்த இடமாக இவ்வருங்காட்சியகம் திகழ்கின்றது.

நார்த்தாமலை புதுக்கோட்டையிலிருந்து 16 கி.மீ.தொலைவில் திருச்சி சாலையில் உள்ளது. இது சமண முனிவர்களின் உறைவிடமாக இருந்துள்ளது. மேலமலையில் காணப்படும் விஜயாலய சோழேச்சரம் முத்தரையர்களால் கட்டப்பட்டது. இக்கோவில் பிற்கால பல்லவர் கலை அமைப்பையும், முற்கால சோழர்களின் கட்டடக்கலை அமைப்பையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இங்குள்ள கடம்பர் கோவில் சிறப்பு மிக்க ஒன்றாகும். இங்குள்ள முத்துமாரியம்மன் ஆலயம் புகழ்மிக்கது. மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெறும் மாரியம்மன் தேர்த் திருவிழாவிற்கு மக்கள் பல்லாயிரக்கணக்கல் கூடுவர்.

குமரமலை புதுக்கோட்டையிலிருந்து 10. கி.மீ. தொலைவில்

*உடைய ரெனப்படுவது ஊக்கம்அஃ தில்லார்*
*உடையது உடையரோ மற்று.*

ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும்; ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவரோ ?

*இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயம் செய்து விடல்.*

**இன்னா செய்தவரைத் தண்டித்தல், அவரே நாணும்படியாக அவர்க்கு நல்லுதவி செய்து, அவருடைய தீமையை மறந்து விடுதலாகும்.**

காரையூர் சாலையில் உள்ளது. இங்கு சுமார் 40 அடி உயரமுள்ள குன்றின் மீது மிக அழகான முருகன் கோவில் அமைந்துள்ளது. பழனிக் குமரனை தரிசித்த புண்ணியம் குமரமலைக் குமரனைத் தரிசிப்பவர்களுக்கும் கிடைக்கும் என்பது ஐதீகம். இம்மலையில் உள்ள சுனைநீர் புனிதத்தன்மை உடையதாகக் கருதப்படுகிறது.

விராலிமலை புதுக்கோட்டையிலிருந்து மேற்கே சுமார் 40 கி.மீ தொலைவில் திருச்சியிலிருந்து மதுரை செல்லும் வழியில் உள்ளது. இங்கு குன்றின் மேல் உள்ள முருகன் ஆலயம் மிக்க புகழ் வாய்ந்தது. ஆலயம் 120 அடி உயரம் உள்ள குன்றின் மேல் உள்ளது. அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய இடம் விராலிமலை. இங்கு மயில்கள் தோகையை விரித்து ஆடுவது காணவேண்டிய ஒரு காட்சி ஆகும். இங்கு மயில்கள் மரங்கள் அடர்ந்த பகுதியில் உறைந்து வாழ்கின்றன. இங்கே மயில்கள் சரணாலயம் அமைக்கப்பட வாய்ப்புள்ளது.

அறநிலையத்தினரால் பயணியர்கள் வசதிக்காகக்குடில் கட்டப்பட்டுள்ளது.

குடுமியாமலை புதுக்கோட்டையிலிருந்து சுமார் 20. கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள சைவ ஆலயத்தில் உள்ள இறைவனின் பெயர் சிகநாதர் அல்லது குடுமியுடையான். இக்கோவிலில் கணபதி, சுப்பிரமணியர், அனுமான், மன்மதன், ரதி போன்ற சிற்பங்கள் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. இங்குப் பல்லவர் காலச் சிலைகளும், பாண்டியர் காலச்சிலைகளும், நாயக்கர்காலச் சிலைகளும் காணப்படுகின்றன. தமிழர்களின் சிற்பக் கலைக்குச் சிகரமாக அமைந்துள்ளது இக்கோவில். சங்கீதக் கலைக்கு வழிகாட்டியாக விளங்குகிற மகேந்திரவர்மன் சங்கீதக் கல்வெட்டு இங்கு காணப்படுகிறது.

இக்கல்வெட்டு கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் செழித்திருந்த இசைக்கலையின் நுணுக்கங்களை நமக்கு உணர்த்துபவை எனலாம். இதில் இசையின் ராகங்களைப் பற்றியும், தாள வகைகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன. இங்குள்ள குடவரைக் கோவிலில் செதுக்கியிருக்கும் பல்லவர் காலத்து துவாரபாலகர்கள் நல்ல வேலைத் திறம்மிக்கவை.

இங்குள்ள கோவிலின் பாறையில் 63 நாயன்மார்கள் சிலைகளைச் செதுக்கியுள்ளனர். மலையின் உச்சியில் முருகன் கோயில் உள்ளது.

குடுமியாமலை என்றாலே அண்ணா பண்ணை நினைவிற்கு வரும். 1017 ஏக்கர் நிலத்தில் இப்பண்ணை அமைந்திருக்கின்றது. இங்குள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

சித்தன்னவாசல் புதுக்கோட்டையிலிருந்து விராலிமலை செல்லும் வழியில் சுமார் 16 கி.மீ. தொலைவில் இருக்கிறது. தமிழ் நாட்டின் பண்டைய ஓவியக் கலைக்குச் சான்று கூறும் மிகக் குறைந்த, விரல் விட்டு எண்ணக் கூடிய இடங்களில் ஒன்றாகச் சித்தன்னவாசல் விளங்குகிறது. தமிழகத்தில் கிடைக்கும் பழங்கால ஓவியங்களில் காலத்தால் மிகப் பழமையானதாக இங்குள்ள ஓவியங்கள் விளங்குகின்றன. அஜந்தா பாணிக்கும், தஞ்சைப் பெருவுடையார் சோழர் பாணிக்கும் இடையே விளங்கும் இணைப்பாக இங்குள்ள ஓவியங்கள் விளங்குவதாக வரலாற்று அறிஞர் திரு. நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடுகிறார்.

இங்கு குன்றின்மேல் ஒரு குகை உள்ளது. இதை ஏழடிப்பட்டம் என்பார்கள். குகையின் வாயிலில் ஏழு படிக்கட்டுகளைக் கடந்து குகையினுள் செல்லவேண்டும். எனவே ஏழடிப் பட்டம் என்று சொல்லப்படுகிறது. இங்கு 17 கல்படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. இரண்டு படுக்கைகளுக்குப் 'பிரமி' எழுத்திலான கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

இக்குகையைச் சமண முனிவர் கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை தங்கள் இருப்பிடமாகக் கொண்டிருந்தார்கள்.

இங்கு கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மகேந்திர பல்லவனால் கட்டப்பட்ட குகைக்கோயில் உள்ளது. முக மண்டபத்தில் சமண தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

குகைக் கோயிலில் தரை தவிர மற்ற எல்லாப்பகுதிகளிலும் சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. அழிந்தது போக மிச்சமுள்ள சித்திரங்கள் கொஞ்சமே உள்ளன.

மேல் கரையில் தாமரையும், அல்லியும் பூத்துக் குலுங்கும் ஒரு தடாகம் சித்திரிக்கப்பட்டுள்ளது. மீன்களும், அன்னங்கள் தங்கள் பெட்டையுடன் இருப்பதும், யானைகளும், மாடுகளும் தடாகத்தில் இருப்பது போல தீட்டப்பட்டுள்ளன. இவைபோன்று இன்னும் எத்தனையோ அழகிய சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை அஜந்தா ஓவியங்கள் விஞ்சும் வண்ணம் உள்ளன.

இங்கு வரும் பயணிகளுக்குக் குடிதண்ணீர் வசதி போன்ற வசதிகள் செய்து கொடுக்கும் திட்டம் பரிசிலனையிலுள்ளது.



கொடும்பாளூர் புதுக்கோட்டையிலிருந்து மேற்கே சுமார் 34 கிலோ மீட்டர் தொலைவில் மணப்பாறைச் சாலையில் உள்ளது. சங்க காலத்திலும் சோழர் காலத்திலும் சிறந்து விளங்கியது.

இரண்டாம் பராந்தகசோழன் காலத்தவனாகிய பூதிவிக்கிரக கேசரி எனும் இருக்குவேளால் கட்டப்பட்டது மூவர்கோவில்.

தென்னிந்திய சிற்பக்கலையின் வரலாற்றில் ஓர் உன்னத இடத்தை வகிக்கிறது மூவர் கோயில். தற்போது இரண்டே கோயில்கள்தான் உள்ளன.

மூவர் கோவிலுக்கு ஒருபர்லாங் தூரத்தில் முசுகுத் தேசுவரர் கோயில் உள்ளது. முதலாம் பராந்தகன் காலத்தில் மகிமாலயன் இருக்குவேள் என்பவர் இக்கோயில் கட்டப்பட்டதாகக் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம்.

சிலப்பதிகாரத்தில் கொடும்பாளூர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூரிலும் பயணிகளுக்கு இன்றியமையாத வசதிகள் செய்து கொடுக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திருமயம் புதுக்கோட்டையிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவில் காரைக்குடி செல்லும் சாலையில் உள்ளது.

இங்குள்ள கோட்டை வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். கட்டடக்கலை இலக்கணத்தோடு அமைந்தது இக்கோட்டை. இக்கோட்டை வட்டவடிவமாக அமைந்துள்ளது.

தென்பாண்டிச் சீமையில் பாளையக்காரர்களை அடக்க வந்த வெள்ளையர்ப்படை இக்கோட்டையில்தான் தனது படைக்குத் தேவையான கருவிகளையும், வெடி மருந்துகளையும் சேமித்து வைத்திருந்தது. வெடிமருந்து வைத்திருந்த அறையை இன்றும் நாம் கோட்டையின் குன்றில் காணலாம். தமிழகத்தின் தெற்கு மாவட்டங்களில் சற்று நல்ல நிலையிலேயே விளங்கும் ஒரே கோட்டையாக இது விளங்குகிறது.

இக்கோட்டைக்கு ஊமையன் கோட்டை என்று பெயர் வழங்கி வருகிறது. ஆனால், இக்கோட்டைக்கும் ஊமையனுக்கும் எந்த விதத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இக்கோட்டை சேதுபதி விஜயரகுநாதர் என்பவரால் கட்டப்பட்டதாகும்.

கோட்டை அமைந்துள்ள குன்றின் தென்பகுதியில் வைணவக் கோயில்களும், அதன் அருகே சிவன் கோயிலும் அமைந்துள்ளன. வைணவக்கோயில் திருமால் பள்ளிகொண்ட நிலையில் காட்சியளிக்கிறார். இக்கோயில் ஆதிரங்கம் என்று கூறப்படுகிறது. இத்தலம் திருமங்கையாழ்வார் என்பவரால் பாடப்பட்டதாகும். இக்கோயில் பல்லவர் காலத்தைச் சேர்ந்தது.

சிவன் கோயிலும் மிகப் பழமையானதாகும். இக்கோயிலில் உள்ள கற்சிலைகள் காணத் தக்கவை.

கவிச்சக்கரவர்த்தி கம்பனால் பாண்டியநாட்டின்எல்லையெனக் கூறப்பட்டுள்ள வெள்ளாற்றின் தென்கரையிலே மாணிக்கவாசகரால் எழுப்பப்பெற்ற கோயில் திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோயில்.

இது 2000 ஆண்டுகளுக்கு முந்திய கோயில் ஆகும்.

புதிதாகக் கோயில்கள் கட்டுகின்ற ஸ்தபதியார் ஆவுடையார் கோயில் சிற்ப அடங்களுக்குப் புறம்பாக என்று தங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டு எழுதுவார்கள்.

ஆவுடையார் கோயில் தெற்கு முகமாக உள்ளது.

மூலஸ்தானத்தில் எந்தவிதச் சிலையும் இல்லை.

மலை, குன்று இல்லாத பகுதியில் வெறும் கற்களினாலே கட்டப்பட்ட கோயிலாகும். இக்கோயிலின் தாழ்வாரத்திலுள்ள கொடுங்கைகள் மிக வேலைப்பாட்டுடன் அமைந்ததாகும்.

தேக்கு மரச்சட்டம்போல் இழைத்து, கம்பிகளும், ஆணிகளும்போல் கல்லில் செய்து, மெல்லிய ஓடு வேய்ந்திருப்பது போல செய்யப்பட்டிருப்பது மிகச் சிறப்பானது. இங்கு 10,15 வலையங்கள் கொண்ட கற்சங்கிலிகள் ஒரே கல்லினால் செதுக்கப்பட்டு தொங்கவிடப்பட்டுள்ளன.

கொடிமரம், பலிபீட்டம், நந்தி ஆகியவை இக்கோயிலில் இல்லை.

இக்கோயிலில் செப்பேடு வேயப்பட்ட விமானம் உள்ளது. இவ் விமானத்தில் உள்ள மரங்கள் எல்லாம் தேவதாரு மரத்தால் ஆனதாகும். தேக்கைவிட உயர்ந்தது தேவதாரு மரம்.

இங்குள்ள சிற்பங்கள் மிகச் சிறந்த வேலைப்பாட்டுடன் கூடியவை. ஒவ்வொரு தூணிலும் இவை விளங்குகின்றன.

இக்கோயிலில் காணப்படும் கல்விளக்குகளும்,பாவை விளக்கு, கற்சிற்பங்களும், கன்னியாகுமரியையடுத்த சுசீந்திரம் கோயிலில் உள்ள சிற்ப பாணியை நினைவூட்டத் தக்கவையாக உள்ளன. இக்கோயிலில் ஒவ்வொரு பகுதியில் உள்ள சிற்பங்களும் ஒவ்வொரு பாணியைத் தெரிவிக்கின்றன.

காலில் உள்ள நரம்பும், தலையில் உள்ள முடியும் நன்குதெரியுமாறு சிலைகள் அமைக்கப்பெற்றிருப்பது மிகவும் சிறப்பானதாகும். இங்குள்ள சிற்பங்களில் சிறந்தவேலைப்பாட்டுடன் கூடிய நகைகள் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இங்குக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள பஞ்ச கல்யாணிக்குதிரை மிகச் சிறந்த வேலைப்பாட்டுடன் கூடியது. மலைக்குறத்தி சிலை ஒன்றும் உள்ளது. குறி சொல்லுகின்ற குறத்திபோல் இச்சிலை உள்ளது.

திருவாசகம், திருக்கோவையார் ஓலைச் சுவடிகள் இங்கு மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.


இங்குப் பயணிகளுக்குத் தங்குமிடம், கழிவறை மற்றும் குடிதண்ணீர் வசதி செய்யும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களைக் காணாத கண்ணென்ன கண்ணோ அவற்றின் பெருமையைக்கேளாத செவியென்ன செவியோ....


[நன்றி: வானொலி]

*ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு.*


**ஒப்புரவினால் உலகம் வாழுமாறு விரும்பும் பேரறிவாளியின் செல்வம், ஊரார் நீருண்ணும் குளம், நீரால் நிறைந்தாற் போன்றது.**




# வோட்டாவின் சொந்தக்காரர்
# நதிகளின் சொந்தக்காரர்!




வோட்டா எலக்ட்ரிக் பம்ப்செட்



வோட்டா மோனோ ப்ளாக்



வோட்டா கபாசிட்டர்




வோட்டா ஸ்டார்ட்டர்


வோட்டா – நீங்கள் முழுதும் நம்பக்கூடிய பெயர். ஏனெனில் உயர்ந்த தரத்தின் மறுபெயரே வோட்டா. வோட்டா சாதனங்களை உங்களிடம் கொணர்ந்தளிப்போர் வோல்டாஸ் — விற்பனைக்குப்பிந்திய சேவைகளுக்குப் புகழ் பெற்றோர்.

**நீங்களும் வோட்டா வாங்கிடுவீர்.**
**வேண்டியபோது நீர்ப்பாசனம் பெற்றிடுவீர்!**

**வோல்டாஸ் லிமிடெட்**
ஆக்ரோ இண்டஸ்டிரியல்
புரோடக்ட்ஸ் டிவிஷன்
52, அரண்மனைக்காரத் தெரு
சென்னை 600 001.

25 வெள்ளி விழா

VT-5212



# சென்னை மாநகராட்சியின் சிறப்புப் பணிகள்

'மக்களைச் சந்திப்போம்' திட்டத்தின் கீழ், வடசென்னையைப் பொறுத்த வரையில் வந்த 259 முறையீடுகள் மீது ரூ. 40.10 இலட்சம் செலவிலும், தென் சென்னையைப் பொறுத்த வரை ரூ. 89 இலட்சம் செலவிலும், சாலை அமைப்பு, நடைபாதை, சீரமைப்பு, பொதுக் குழாய்கள் அமைப்பு போன்றவைகள் ஏற்படுத்தப்பட்டன.

வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ், சீர்குலைந்த சாலைகளைச் செப்பனிட பாதி கடன், மீதி உதவி என்ற அடிப்படையில் ரூ. 179.61 இலட்சம் அரசு மாநகராட்சிக்கு அளித்துள்ளது.

கட்டணக் கழிவிடங்களை நவீனப் படுத்தி ஏலம் விட்டதன் விளைவாக 52,675 ரூபாய் கூடுதல் வருவாய் கிடைத்தது.

வர்த்தக நிறுவனங்கள், அங்காடிகள் நிறைந்த பகுதிகளில் இரவு நேர துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உலக வங்கி உதவியுடன் 1977-78ல் ரூ. 24.97 இலட்சம் செலவிலும், 1978 79ல் ரூ. 82.85 இலட்சம் செலவிலும்நடைபாதைகள், சாலைகள் முதலியன மேம்படுத்தப்பட்டன. மத்திய அரசின் உதவியோடு பாலங்கள் முதலியன கட்டும் பணிகளுக்காக 1977-78 இல் ரூ. 7.80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ. 101.71 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

30,000 குடிசை வாழ் குடும்பங்களின் மேம்பட்ட வாழ்விற்கு தேவையான வசதிகளை, அளிக்கும் பணியை உலக வங்கி உதவியுடன் ரூ. 50 இலட்சம் செலவில் மாநகராட்சி மேற்கொள்ளவிருக்கிறது.







*தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்*
*நீங்கா நிலனாள் பவர்க்கு.*

காலம் தாழ்த்தாத தன்மை, கல்வியுடைமை, துணிவுடைமை ஆகிய இந்த மூன்று பண்புகளும் நிலத்தை ஆளும் அரசனுக்கு நீங்காமல் இருக்க வேண்டியவை.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.


எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றினாலும் [அத்தோற்றத்தை மட்டும் கண்டு மயங்காமல்] அப்பொருளின் உண்மையான இயல்பை அறிவதே மெய்யுணர்வாகும்.

கடந்த இரண்டாண்டுகளில் 37 வகுப்பறைகள் மாநகராட்சிப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ளன.

ரூ. 10 இலட்சம் செலவில் மின் சுடுகாடு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நகர் முன்னேற்றத் திட்டத்தின் கீழ், இரண்டு மழை நீர் வடிகால் திட்ட வேலைகளுக்காக அரசு அளித்த ரூ. 75 இலட்சத்திற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன.

பல் மருத்துவ மனைக்கு எதிரிலுள்ள வடிகாலையும், சைதாப்பேட்டை ரெட்டி




குப்பம் சாலை வடிகாலையும் புதுப்பிக்க அரசு ரூ. 50.716 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. மேலும் மாநகராட்சியின் பல்வேறு பகுதியில் வடிகால் கட்டுவதற்காக ரூ. 20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஈராண்டில் மட்டும் ரூ. 18.5 இலட்சம் செலவில் புதிதாக வீதி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ. 1,40,400 செலவில் அதிக ஒளிதரக்கூடிய குழல் விளக்குகள் பொருத்தப்பட்டன.

வடசென்னை புறநகர்ப் பகுதி (வியாசர்பாடி) எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, இராசா அண்ணாமலை புரம் ஆகிய இடங்களில் கிளை மின் நிலையங்கள் ரூ.6.00 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு செயல்படுகின்றன.

ஆதி ஆந்திர துப்புரவுப் பணியாளர்களுக்குக் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த மாநகராட்சி குடியிருப்புகளை குறைந்த விலையில் அவர்களே சொந்தமாக்கிக் கொள்ளும் திட்டத்தை முதலமைச்சர் 24.10.78 அன்று தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ், ஆஞ்சநேய நகர், சிமிட்ரி சாலை, சிகிறந்த பாளையம், 27 வது கோட்டம், ஓய்வுதியர் குடியிருப்பு, குறவன் குளம் குடியிருப்பு, நரசிம்ம நகர், அங்காளம்மன் கோயில் குடியிருப்பு, பழைய ஆட்டுத் தொட்டி சாலை குடியிருப்புகள், காட்டூர் நல்லமுத்து தெரு,



செம்பிய குடியிருப்பு, துவாரா நகர் குடியிருப்பு, ராம்நகர், காந்திபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள மாநகராட்சி இல்லங்கள், துப்புரவு பணியாளர்களுக்கு அளிக்கப்படும். இதனால் பயன் பெறும் பணியாளர்களின் எண்ணிக்கை 466.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் 9 மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

கொசுக்கள் தொல்லையை ஒழிக்க ரூ. 76,000 செலவில் பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கும் கருவிகள் 25 வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. மேலும் ரூ. 24,800 செலவில் மின்சார மருந்து கருவி வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.



# புகையானைப் புரிந்து கொள்ளுங்கள்


எஸ். வசந்த குமார்,
துணை வேளாண்மை அலுவலர்,
(பயிர்ப்பாதுகாப்பு)


**ம**னித இனம் தோன்றுவதற்கு பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே உருவெடுத்த இந்தப் பூச்சி இனம் மனிதனுக்குப் பிரச்சினையாக விளங்குவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

புகையான் (பழுப்பு தத்துப் பூச்சி) பூச்சியானது உலகமெங்கும் நெல் சாகுப்டி செய்யும் நாடுகளான இந்தோனேசியா, கொரியா, மலேசியா, சைனா, பீஜி தீவுகள், நியூகினியா, பிலிப்பைன்ஸ், தாய்வான், தாய்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளிலும் நமது நாட்டிலும் நெற்பயிரினைத் தாக்கி பெரும் சேதத்தினை உண்டாக்குகிறது.

இப்பூச்சிகளானது சாதகமான சூழ்நிலையில் அதிகமாக இனவிருத்தி செய்து பெருகி மெயின் லாண்டு, சைனா, பிலிப்பைன்ஸ் நாடுகளிலிருந்து மற்ற தென் கிழக்கு ஆசியா நாடுகளுக்குக் காற்றில் மிதந்து சென்று நெற்பயிருக்குச்சேதம் விளைவிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. பிற நாடுகளிலிருந்து, விமானங்களின் ஊடுருவலைக் கண்காணிக்க ரேடார் சாதனங்கள் உள்ளது போல் புகையானின் நடமாட்டத்தினைக் கண்காணிக்க விளக்குப் பொறிகள் அமைத்து எண்ணிக்கையினைக் கணித்தல், வயல்களைப் பார்வையிடுதல் போன்ற பணிகள் ஆங்காங்கே மிகவும் வியக்கும் வண்ணம் நடைபெற்று வருகின்றது. பலத்த கண்காணிப்புகளுக்கு இடையிலும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கும் அங்கிருந்து பல்வேறு இடங்களுக்கும் காற்றில் மிதந்து சென்று எங்கெங்கு நெல்பயிர் சாகுபடி செய்யப்படுகின்றதோ அங்கெல்லாம் சேதத்தினை விளைவித்திடும் இச்சிறிய பூச்சியின் திறமையினை நோக்கும்பொழுது மிகவும் விந்தையாக உள்ளதல்லவா?

இதற்கான காரணங்களை ஆராயும்பொழுது, நம் வீட்டில் வளர்க்கும் கோழிகளில் பல ரகங்கள் இருப்பது போல் இந்தப் புகையான் பூச்சிகளில் அவ்வப்பொழுது பல ரகங்கள் உருவாகின்றன. இவைகள் வெளித்தோற்றத்தில் ஒன்றுபட்டிருப்பினும், புகையானின் தாக்குதலை எதிர்த்து வளரக்கூடிய ஒரு நெல் ரகத்தினை தாக்கி சேதம் விளைவிக்கும் தன்மையில் மாறுபடுகின்றது. இதில் சில ரகங்கள் பூச்சி மருந்துகளின் நச்சுத் தன்மையையும் எதிர்த்து தன் இனத்தை விருத்தி செய்துகொள்ளும் திறமை படைத்தவையாக உள்ளன.

புகையானின் தாக்குதலை எதிர்த்து நிற்கக்கூடிய ஒரு நெல் ரகத்தினைத்தொடர்ந்து நான்கு பருவங்களில் ஒரு பகுதியில் சாகுபடி செய்யும் போது அந்த நெல் ரகத்தினைத் தாக்கிச் சேதம் விளைவிக்கும் ஒரு புகையான் ரகம் உருவாகின்றது. எனவே, இப்பூச்சிகள் மனிதனின் சாதனைகளை முறியடித்து எப்படியாவது தன் இனம் அழிந்து விடாமல் பல்கிப் பெருகி வருகின்றன என்று கூறினால் மிகையாகாது.

**இப்பூச்சிகளின் வாழ்க்கை முறை:**

வளர்ச்சி பெற்ற பூச்சிகளில் இரண்டு வகை உள்ளது. ஒன்று மேக்ராப்டீரஸ். (Mecroptirous) இறக்கைகள் உள்ளது. மற்றொன்று (Brachyptirous) இறக்கைகள் இல்லாதது. இப்பூச்சிகளின் ஆண், பெண் பூச்சிகள் இனச்சேர்க்கை செய்து பெண் பூச்சிகள் நெற்பயிரில் இலைத் தோகைகளில் கீழ்ப்பகுதிகளில் நடு நரம்பிற்கு இருபக்கங்களிலும் முட்டைகளை வரிசையாக உள்ளே திணிக்கிறது. இம்முட்டைகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு ஒரு சங்கிலி போல் முத்து வெள்ளை நிறத்தில் இலைகளின் உட்புறத்தில் இடப்பட்டிருப்பதை உருப்பெருக்கியின் மூலம் இலைகளைப் பிரித்துப் பார்த்தால் காணலாம். ஒரு பெண் பூச்சியானது 300-500 முட்டைகளை இடுகின்றன. இம்முட்டைகளிலிருந்து 4-5 நாட்களில் வெளிவரும் குஞ்சுகள், பழுப்பு நிறத்தில் கூட்டம் கூட்டமாக நெற்பயிரின் அடித்தண்டுப் பகுதியில் இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சி உண்டு வளர்கிறது. இக்குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவந்தவுடன் 0.6 மி.மீ. நீளமுடையதாக இருக்கும். இவைகள் 13-15 நாட்களில் ஐந்து முறை சட்டை உறித்து வளர்ச்சியுற்ற பூச்சிகளாக மாறுகின்றது. வளர்ந்த பூச்சிகள் கடுகைவிட சற்றுப் பருமனாக உடலமைப்பு கொண்டதாகப் பழுப்பு அல்லது கரிய பழுப்பு நிறத்துடன் காணப்படும். இப்பூச்சிகளும் குஞ்சுகளும் பயிரின்

*தீயவை தீய பயத்தலால் தீயவை*
*தீயினும் அஞ்சப் படும்.*

தீய செயல்கள் தீமையை விளைவிக்கும் தன்மை உடையனவாக இருத்தலால், அத் தீய செயல்கள் தீயை விடக் கொடியனவாகக் கருதி அஞ்சப்படும்.

*சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல்.*

**சொற்களில் பயன் உடைய சொற்களை மட்டும் சொல்ல வேண்டும் ; பயன் இல்லாதவைகளாகிய சொற்களைச் சொல்லவே கூடாது.**

அடிப்பாகத்தில் இருந்துகொண்டு சாற்றை உறிஞ்சும்பொழுது விஷத்தன்மையுள்ள தனது உமிழ் நீரையும் உள்செலுத்துவதால் பயிர்கருகி புகைந்தது போல் காணப்படுகின்றது.

பயிரில் அதிக எண்ணிக்கையுடைய பூச்சிகள் இருந்துகொண்டு தனது ஊசி போன்ற வாய்ப் பாகத்தினைத் தண்டினுள் செலுத்திச் சாற்றை உறிஞ்சும் பொழுது தண்டுகள் வலுவிழந்து உணவுப்பொருள்கள், தண்ணீர் ஆகியவை தண்டின் மேல்பகுதிக்குச் செல்லாது தடைப்பட்டு மணிகளில் பால் அடைப்பது பாதிக்கப்படுவதுடன், பயிர்கள் சாய்ந்து விடுகின்றன. அவ்வாறு வலுவிழந்த பயிர்த்தோகைகள் அழுக ஆரம்பித்துவிடுகின்றன.

தாக்கப்பட்ட இடங்களில் பயிர்கள் வட்ட வட்டமாகப் புகைந்து காய்ந்தது போல் காட்சியளிக்கின்றன. அப்பயிர்களில் முழுமையாக மணிப்பிடிக்காமல் பாதி பதராகி விடுகின்றன.

இவ்வாறு காய்ந்த பகுதிகளில் உணவு கிடைக்காத நிலையில் இறக்கையுள்ள இப்பூச்சிகள் இறக்கையினை விரித்து காற்றில் மிதந்து நல்ல பசுமையான பயிரினை நாடிச் சென்று முட்டையிட்டு தனது இனத்தை விருத்தி செய்கின்றன. இறக்கையில்லாத பூச்சிகளும் குஞ்சுகளும் பாசன நீரில் மிதந்து சென்று பக்கத்து வயல்களுக்குப் பரவி தனது இனத்தினை முழுமூச்சுடன் விருத்தி செய்கின்றன. முழுவளர்ச்சியடைந்த பூச்சிகள் 45 நாட்கள் வரை உயிர் வாழ்ந்து தனது இன விருத்தி வேலையினைச் செவ்வனே செய்கின்றன.

தமிழ்நாட்டில் இப்பூச்சிகள் ஆவணி மாதம் முதல், மார்கழி, தை மாதம் வரை அதிகமாக காணப்படுகின்றது. சில பகுதிகளில் மாசி, பங்குனி மாதங்களிலும் அதிகமாகத் தோன்றி பயிருக்குச் சேதம் விளைவிக்கின்றது.

இப்பூச்சிகளானது பகல் நேர அதிகபட்ச வெப்பநிலைக்கும், இரவு நேர குறைந்த பட்ச வெப்பநிலைக்கும் 6 முதல் 8 சென்டிகிரேட் வித்தியாசம் தொடர்ந்தாற்போல் 10-15 நாட்களுக்கு இருக்கும் பட்சத்தில் அதிகமாகப் பல்கிப் பெருகுகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் :**

இப்பூச்சியின் தாக்குதலை எதிர்க்கவல்ல ரகமான கோ.41 நெல் ரகத்தினைச் சாகுபடி செய்தல். தழைச்சத்து அளிக்கும் உரத்தினை, பயிரின் தேவையினை அறிந்து இடுதல். தழைச்சத்து உரம் தேவைக்கு அதிகமாக இடப்பட்டு பயிர் அதிகமாக தூர்கட்டி அடர்ந்து இருக்கும் பகுதியில் இப்பூச்சிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது.

இப்பூச்சிகளின் தாக்குதல் தென்பட்டவுடன் வயலில் உள்ள தண்ணீரை வடித்துவிட வேண்டும்.


தமிழரசு
சந்தா
ஓராண்டு ரூ. 12.
அரையாண்டு ரூ. 6.


நெற்பயிர் இல்லாதபொழுது புல், பூண்டுகளில் இப்பூச்சிகள் இனவிருத்தி செய்வதால், வயலில் புல், பூண்டுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளுதல் நடவு செய்யும் பொழுது குத்துக்கு 2 நாற்றுக்கள் வைத்து சதுர. மீட்டருக்கு 50 குத்துக்கள் மட்டும் நடவு செய்தல்.

**விளக்குப் பொறிகள் அமைத்தல்:**

சாதாரணமாக குழல் விளக்குடன் அமைக்கப்பட்ட 15 விளக்குப் பொறிகளில் 4½ மணி நேரத்தில் (இரவு 7 முதல் 11.30வரை) 92.16 மில்லியன் இறக்கைகளுடன் கூடிய புகையான் பூச்சிகள் வந்து விழுவதாகக்கணக்கிடப்பட்டுள்ளது.

சாதாரணமாக ஒரு ஏக்கர் பரப்பிற்கு ஒரு விளக்குப்பொறி அமைத்தால் பெரும்பாலும் இறக்கையுள்ள புகையான் பூச்சிகள் ஈர்க்கப்பட்டு அழிக்கப்படும்.

குறிப்பாக எந்த நேரத்தில் புகையான் பூச்சிகள் விளக்குப் பொறிகளால் கவரப்படுகின்றன என்பதனை 60 வாட்ஸ் டங்ஸ்டன் பல்புகொண்ட விளக்குப் பொறி கொண்டு சோதனை செய்தபொழுது இரவு 6.30 மணி முதல் 8.30 மணி வரை அதிகமான அளவு புகையான் பூச்சிகள் விளக்குப் பொறியால் கவரப்படுகின்றது என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே, விளக்குப் பொறிகளில் மாலை 6.30 மணி முதல் 8.30 மணிவரை விளக்குகள் எரிந்தால் போதுமானது.

விளக்குப் பொறியினைச் சுற்றியுள்ள 5-6 மீட்டர் சுற்றளவுள்ள பயிரினை நன்கு பூச்சி மருந்து தூவி பராமரிக்க வேண்டும்.

வயலில் உள்ள நீரினை நன்றாக வடித்துவிட்டு, பயிரினை நான்கிலிருந்து ஆறடிக்கு ஒரு முறை பத்தி பத்தியாக நீக்கி தண்டின் அடிப்பகுதியில் படியுமாறு ஏக்கருக்கு 20 கிலோ பி. எச்.சி. 10% அல்லது 10 கிலோ செவின் 10% மினி டஸ்டர் கொண்டு தூவ வேண்டும்.

திரவ மருந்துகளாக இருந்தால் ஏக்கருக்கு 200 மில்லி லெபாசிட் அல்லது 200 மில்லி டைமெக்ரான் அல்லது 100 மில்லி டைமக்ரானுடன் 100மில்லி நூவான் சேர்த்துத் தெளிக்க வேண்டும்.

வயலில் தண்ணீரை வடிக்க முடியாத இடங்களில் ஏக்கருக்கு 1½ லிட்டர் மண்ணெண்ணையினை வயலில் பரவலாக ஊற்றி பின்பு மருந்துகளைத் தூவவோ, தெளிக்கவோ வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு வேளாண் பெருமக்களுக்கு உதவும் வண்ணம் தமிழக அரசு புகையான் பூச்சிகளில் தாக்குதல் தென்படும் பகுதியில் மருந்துகளை விவசாயிகளுக்கு 50% மானிய விலையில் விநியோகிக்கும் திட்டமும் உள்ளது.



# தித்திக்கும் திருக்குறளில் தீந்தமிழ் ஆட்சிமொழி

கோ. முத்துப்பிள்ளை



ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு செய்தியை இங்கே குறிக்க விரும்புகிறேன். உணவுப் பங்கீட்டு முறை (rationing) அமலில் இருந்த சமயம் அது. அரசு அலுவலர் தேர்வு ஆணையம் (Public Service Commission) நடத்திய நேர்காணல் தேர்வு (interview) ஒன்றிற்கு என் நண்பர் ஒருவர் சென்றார். தேர்வு செய்ய வீற்றிருந்த ஆணைய உறுப்பினர்களில் தமிழார்வமிக்க உறுப்பினர் ஒருவர் ஒரு வினாவை எழுப்பினார். Rationing முறையைப் பற்றி, திருவள்ளுவர் ஏதேனும் சொல்லியிருக்கின்றாரா என்பதுதான் அந்த வினா. நண்பர் திகைத்துப் போய்விட்டார்! அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை! ''திருவள்ளுவர் காலத்தில் உணவுப் பொருள்கள் நிறையக் கிடைத்திருக்குமே. தட்டுப்பாடு எதுவுமே இருந்திருக்காதே. அவ்வாறாயின் திருவள்ளுவர் ஏன் rationing பற்றிப் பாடப் போகிறார்?'' என்றெல்லாம் நண்பரின் சிந்தனை சுழலத் தொடங்கியது. ஆணையத்தின் உறுப்பினர் அவர்களோ குறுநகை புரிந்து ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' என்னும் திருக்குறள் தங்களுக்குத் தெரியுமா? என்று வினவினார். ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'' rationing தானே என்று மேலும் வினவினார். இதைக் கேட்ட நண்பர் வியப்பிலே மூழ்கி நின்றார்!

நன்னடத்தை அலுவலர் (Probation Officer) ஒருவர் (டாக்டர் இலக்குவனாரின் மகன்) என் இல்லத்திற்கு வந்திருந்தார். நன்னடத்தை அலுவலர் என்னும் பதவிப் பெயர் அந்தப் பதவியின் பணியை நன்கு விளக்குவதாகத் தெரியவில்லை. இந்தப் பெயரை மாற்றியமைத்துவிட்டால் கூட நல்லதென்று தெரிகின்றது.

குற்றம் புரிந்தவர்களில் சிலர் நீதிமன்றத்தால் மன்னிக்கப்பட்டு, குறிப்பிட்ட காலம்வரையில் கண்காணிக்கப்படுகின்றார்கள். இந்த முறையில் கண்காணிப்புச்செய்யும் அலுவலர்களையே நன்னடத்தை அலுவலர்கள் என்று கூறுகின்றோம். அப்படிக் கூறும்போது, இந்த அலுவலர்களுக்கே நன்னடத்தை கற்பிக்கப் படுவதுபோலத் தோன்றுகின்றது. இந்தச் சமயத்தில் புறநானூற்று வரி ஒன்று நினைவிற்கு ஒப்புவருகின்றது.

**ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்**
**பேதையின் பேதையார் இல்.**

நூல்களை ஓதியும், அவற்றின் பொருளை உணர்ந்தும் பிறர்க்கு எடுத்துச் சொல்லியும் தான் அவற்றின் நெறியில் அடங்கி ஒழுகாத பேதைபோல் வேறு பேதையர் இல்லை.

*உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு.*

மிக்க பசியும், ஓயாத நோயும் (வெளியே இருந்து வந்து தாக்கி) அழிவு செய்யும் பகையும் தன்னிடம் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடாகும்.



''நன்னடை நல்கல் வேந்தற்குக்
கடனே''

என்பதுதான் அந்த வரி. இனி மேல் நன்னடத்தை அலுவலர்களை ''நன்னடை நல்கும் அலுவலர்கள்'' என்று அழைக்கலாமே என்று எண்ணத் தோன்றுகின்றது.

நிற்க, நன்னடத்தை அலுவலர் என்னிடம் சொல்லிய செய்தியை இப்போது பார்ப்போம். ''எங்கள் பணியைப் பற்றிக்கூட வள்ளுவர் அருமையாக விளக்கியுள்ளார்'' என்று அவர் பெரும் பூரிப்புடன் குறிப்பிட்டார்.

''திருக்குறளில் சொல்லப்படாத செய்தி எதுவுமே இல்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகச் சொல்லப்போகின்றீர்கள் போலும்'' என்று நான் சொல்லிவிட்டு ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

''ஒறுத்தாற்றும் பண்பினார் கண்
ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை'

என்னும் தலையாய குறட்பாவை எடுத்துக்கூறிப் புன்னகை பூத்தார். கருத்துக்கள் மெல்லமெல்லத் தெள்ளத் தெளிவாயின. ''ஒறுத்தாற்றும் பண்பினார்'' தாம் குற்றவாளிகள்! எத்துணை நுட்பமான கருத்து இதிலே ஒளிந்து கொண்டுள்ளது! அவர்மீது கூடக் கண்ணோட வேண்டும்! ஆம். அவரை மன்னித்தல் வேண்டும். பொறுத்தாற்றும் பண்பு என்பது என்ன? அதுதான் நீதிமன்றத்தின் தலைசிறந்த பண்பு. பொறுத்தாற்றும் பண்புடைய நீதிமன்றத்துக்கு ஒறுத்தாற்றும் பண்பினரைக் கண்காணிக்கத் துணையாக நிற்பவர்கள்தாம் நன்னடத்தை அலுவலர்கள்.

குடும்ப நலத் திட்ட அலுவலர் ஒருவர் ஒரு நாள் உரையாடிக் கொண்டிருந்தார். ''குடும்ப நலத்தைப் பற்றித் திருவள்ளுவர் கூறியிருக்கின்றாரே தெரியுமா'' என்றார். ''ஆம். திருக்குறள் நூல் முழுவதுமே குடும்பநல விளக்கந்தானே?'' என்று நான் விடை பகர்ந்தேன். ''இல்லை. ஐயா, குடும்பத்தை அளவுபடுத்துவதைப் பற்றிக்கூட திருவள்ளுவர் தெரிவித்துள்ளார்'' என்று தொடர்ந்து கூறினார். வியப்பாக இருந்தது. ''திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில், மக்கள் நெருக்கம் இந்த அளவிற்கு இருந்திருக்காதே. எல்லா வசதிகளும் எல்லார்க்கும் எளிதாகக் கிடைத்திருக்குமே'' என்றெல்லாம் எண்ணத் தொடங்கினேன். நண்பர் நயமாக ஒரு குறட்பாவை எடுத்துக் கூறினார்.

''அளவறிந்து வாழாதான்
வாழ்க்கை உளபோல்
இல்லாகித் தோன்றாக்
கெடும்''

**அளந்து அளந்தல்லவா சொற்களை அமைத்துள்ளார் வள்ளுவர்.**

**''அளவோடு பெற்று**
**வளமோடு வாழ்க''**

என்னும் அழகுமொழி வந்த வரலாறு இப்போது புரிகின்றதல்லவா?

இன்று பெரிதாகப் பேசப்படும் எந்தக் கருத்திற்கும் வேர்க் கருத்துக்கள் திருக்குறளில் பொதிந்து கிடக்கின்றனவென்பதற்கு மேலே சொல்லப்பட்ட செய்திகள் ஒரு சில எடுத்துக்காட்டுகளேயாகும்.

இது மட்டுமன்று. எத்தனையோ ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான மொழிபெயர்ப்புகள் கிடைக்கவில்லையே என்று ஏங்கிப் புலம்புகின்றோம். ஆனால் ஆட்சிமொழிக் கண்கொண்டு திருக்குறளைத் திரும்பவும் படிக்க நாம் முனைவதில்லை. அவ்வாறு முனைந்தால் முழுமணிகள் நிறையக் கிடைக்கும்.

ஆட்சிமொழி வகுப்புகளை நடத்திவந்தபோது ஏற்பட்ட நிகழ்ச்சி ஒன்றை இப்போது குறிப்பிட விரும்புகிறேன். Industry என்னும் சொல்லுக்கு ஈடாக ''தொழில்'' என்று சொல்லுகின்றோம். ஒரு நண்பர் எழுந்து நின்றார். ''ஐயா, Industry என்றால் ''தொழில்'' என்று மொழி பெயர்க்கின்றோம். அவ்வாறாயின், Profession என்பதற்கு உரிய மொழிபெயர்ப்பு என்ன?'' என்று கேட்டுவிட்டு, மிடுக்காக அமர்ந்து கொண்டார். வகுப்பிலிருந்த மற்றவர்களும் ''ஆசிரியர் அகப்பட்டுக் கொண்டார்'' என்னும் முறையில் முறைப்பாக உட்கார்ந்தனர்! எங்கிருந்தோ ஓர் எண்ணம் என் மனத்தில் பளிச்சிட்டது. ''செய்தொழில்'' என்று சொல்லிவிட்டு, பெருமூச்சுவிட்டுக்கொண்டேன். வினாவைத் தொடுத்த நண்பரும் மற்றவர்களும் புன்னகை பூத்தனர்! ''ஆசிரியர் எப்படியோ சமாளிக்கிறார்'' என்பதுதான் அந்தப் புன்னகையின் பொருள்! தீஞ்சுவைத் திருக்குறள் நினைவிற்கு வரவே எனக்குப் புதுத் தெம்பு ஏற்பட்டது.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்
கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'

என்று நிறுத்தி நிறுத்தித் தெளிவாகச் சொல்லிவிட்டு அமர்ந்தேன். எதிர்ப்புகள் தவிடுபொடியாயின. எல்லாருமே வியந்து பாராட்டத் தொடங்கினர். அண்மைக் காலத்தில் வாழ்ந்த தண்டபாணி அடிகளார் அருளிய அடிகள் நமக்கெல்லாம் தெரியுமே!


''செய்யும் தொழிலனைத்தும்
சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யும் தொழிற்கு நிக
ரில்லை''

இங்கு அடிகள் குறிப்பிடும், செய்யும் தொழிலைத்தான் நாம் ''செய்தொழில்'' என்று அமைத்துக்கொண்டுள்ளோம்.

மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு சமயம் too high என்னும் தொடரும், too low என்னும் தொடரும் எங்களுக்கு இடர் செய்தன. மிக அதிகம், மிகக் குறைவு என்று சொல்லிப் பார்த்தோம். இவை very high, very low என்னும் தொடர்களுக்கே பொருந்தும் என்று தெரிந்தது. ஆனால் too என்னும் சொல் ''அளவுக்கு மேல்'' என்னும் பொருளைத் தருகின்றதல்லவா? ''அளவுக்கு மேல் அதிகமானது'', ''அளவுக்கு மேல் குறைந்தது'' என்று சொல்ல வேண்டும். வழக்கறிஞர் முகமது யாசின் அவர்களுக்கு ஒரு நல்ல கருத்து தோன்றியது. ''சால மிகுதி'',''சாலக்குறைவு'' என்று சொல்லலாமே என்று அவர் தெரிவித்தார். ''சால'' என்றாலும் ''அதிகம்'' என்னும் பொருள் தானே ஏற்படும் என்பதை அவரிடம் எடுத்துச் சொன்னோம்! அவரோ விடுவதாக இல்லை! கருத்து நிறைந்த குறட்பா ஒன்றினைக் கணீரென்ற குரலில் கவினுற மொழிந்தார்.

''பீலிபெய் சாகாடும் அச்
சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்''

என்பதுதான் அந்தக் குறட்பா. இந்தக் குறளில், ''சால'' என்னும் சொல் ''அளவுக்கு மேல்'' என்னும் பொருளில் வந்திருப்பதைக் கண்டு இன்புற்றோம்.





அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள் செய்யும் தவறுகளைப் பொதுவாக acts of Commission and omission என்று குறிப்பிடுவார்கள். செய்யக்கூடாத ஒன்றைச் செய்துவிட்டால், அது குற்றமாகும் என்பதை யாவரும் அறிவர். இது தான் Commission. இதைப் போலவே செய்ய வேண்டிய ஒன்றைச் செய்யாது விட்டுவிட்டாலும் குற்றம். இதைத்தான் Omission என்று சொல்வார்கள். இந்த இரண்டு வகைக் குற்றங்களையும் திருவள்ளுவர் தீந்தமிழ்ச் சொற்களால் விளக்குகின்றார்.

''செய்தக்க அல்ல செயக்கெடும்
செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்''

என்பது அவருடைய அமுத வாக்கு. செய்யத் தகாதன செய்தல்=Commission. செய்யத் தக்கன செய்யாமை=Omission.

Efficiency என்னும் சொல் நீண்ட நாட்களாகத் தொல்லை கொடுத்துக் கொண்டுள்ள ஒரு சொல்லாகும். ஆம். நான் அதன் மொழிபெயர்ப்பைத் தான் குறிப்பிடுகின்றேன்! இதற்கொரு மொழிபெயர்ப்பைத் தருவதற்கே efficiency தேவைப்படும் போலிருக்கிறது! Merit என்பதற்குத் ''தகுதி'' என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றோம். Efficiency என்னும் சொல்லிற்குத் ''திறமை''. என்னும் சொல்லைப் பயன்படுத்கிறோம். ''அவர் திறமை வாய்ந்தவர்'' என்னும் ஒரு வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். இதை ஆங்கிலத்தில் He is an able person என்றுதான் சொல்லுவோம். எனவே ability என்னும் ஆங்கிலச் சொல்லுக்குத் தான் ''திறமை'' என்னும்சொல் நன்றாகப் பொருந்துகின்றது. அவ்வாறாயின் efficiency என்பதற்கு ஏற்ற மொழிபெயர்ப்பு கிடைக்கவில்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்தேன். ஒருநாள் திருக்குறளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தபோது, பின் வரும் குறள் என் கருத்தைக் கவர்ந்தது:

''முறைப்படச் சூழ்ந்தும் முடி
விலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்''.

முன்கூட்டியே முறைப்படி ஆராய்ந்திருந்தும்கூட, அந்தச் செயலைச் செய்யும்போது, சீரிய முறையில் செய்து முடிக்கமாட்டார்கள். அதற்குக் காரணம் அவர்கள் ''திறப்பாடு'' இல்லாதவர்கள். திறப்பாடு இல்லாதவர்களை inefficient persons என்று சொல்லலாமல்லவா? புதையல் கிடைத்துவிட்டது. Efficiency என்பதற்குத் ''திறப்பாடு'' என்பதே ஏற்ற மொழி பெயர்ப்பும் இனியமொழி பெயர்ப்பும் ஆகும்.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்னும் முறையிலேதான் இந்தக் கட்டுரையை வரைந்துள்ளேன். ஆர்வமுள்ள அனைவரும் அரும்பெறல் நூலாகிய தீந்தமிழ்த் திருக்குறளைத் திரும்பத் திரும்பப் படிக்கவேண்டும். ஏற்ற சொல் '' இல்லை'' என்பார்க்கெல்லாம் ''உண்டு'' எனபதை உணர்த்திடவேண்டும்.

*பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்*
*பொருத்தலும் வல்லது அமைச்சு.*

**பகைவர்க்குத் துணையானவரைப் பிரித்தலும், தம்மிடம் உள்ளவரைக் காத்தலும், பிரிந்தவரை மீண்டும் சேர்த்துக் கொள்ளலும் வல்லவன் அமைச்சன்.**

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

பொருளின் அளவு அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை (பல வளமும்) இருப்பதுபோல் தோன்றி இல்லாமல் மறைந்து கெட்டுவிடும்.

# தமிழகத்தில் சர்க்கரை ஆலைகள்

அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை 1977-ஆம் ஆண்டில் மாதிரி அரைவையைத் தொடங்கியது. 40,490 டன் கரும்பு அரைவை செய்து 8.80 சதவித சர்க்கரைச் சத்துடன், 35,159 குவிண்டால் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. 24,893 குவிண்டால் சர்க்கரை குவிண்டால் ஒன்றுக்குச் சராசரி ரூ. 208.29 விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 7809 ஏக்கரில் கரும்பு பயிர் செய்யப்பட்டு, ஆலையின் 1977-78 அரைவைக்குப் பதிவு செய்யப்பட்டது.

1-12-1977 முதல் 25-6-78 முடிய நடந்தேறிய முதலாம் முக்கிய அரைவைப் பருவத்தில் 2,18,673 டன் கரும்பு அரைவை செய்யப்பட்டது. 8.88 சதவித சர்க்கரை சத்துடன் 1,95,433 குவிண்டால் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. 6825 ஏக்கரில் கரும்பு பயிர் செய்யப்பட்டு 1978-79 ஆம் ஆண்டின் அரைவைக்குப் பதிவு செய்யப்பட்டது.

1978-79 ஆம் ஆண்டு பருவத்தில் இவ்வாலையின் உற்பத்தி விவரம் வருமாறு :

(1) கரும்பு அரைத்தது, 183349 டன், (2) சர்க்கரை உற்பத்தி செய்தது 176016 குவிண்டால். 3. சர்க்கரை விற்பனை 31-5-79 முடிய, 94,424 குவிண்டால். 4. சர்க்கரைச் சத்து 9.16 (5) சராசரி விலை (குவிண்டாலுக்கு) ரூ. 196.88.

ஜவகர்லால் நேரு சர்க்கரை ஆலை

18 மாதக் கால இடைவெளியில் கட்டி முடிக்கப்பட்ட இச்சர்க்கரை ஆலை 1978 - ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2-ஆம் நாள் தனது மாதிரி அரைவையைத் தொடங்கியது. இவ்வரைவைப் பருவத்தின் சாதனை பின்வருமாறு :

(1) கரும்பு அரைவைசெய்தது 1,41,383 டன். (2) சர்க்கரை உற்பத்தி செய்தது, 1,28,305 குவிண்டால். 3. சராசரி சர்க்கரைச் சத்து 9.2 சதவீதம். 6,000 ஏக்கரில், கரும்புப் பயிர் செய்யப்பட்டு, 1978-79 பருவ அரைவைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1978-79-ஆம் ஆண்டுப் பருவத்தில் சர்க்கரை ஆலையின் உற்பத்தி விவரம் வருமாறு :

1. கரும்பு அரைத்தது (டன்) 187497, (2) சர்க்கரை உற்பத்தி (குவிண்டால்) 168780 டன், (3) சர்க்கரைச் சத்து 9.03 சதம், (4) சர்க்கரை விற்பனை (31-5-79) 58079 குவிண்டால், (5) சராசரி விலை ரூபாய் 191.56.

31-5-79 முடிய 6463 ஏக்கரில் கரும்புப் பயிர் செய்யப்பட்டு 1979-80 ஆம் ஆண்டின் பருவ அரைவைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.



தமிழகத்தில் தற்பொழுது 20 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 9 ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், 9 ஆலைகள் தனியார் துறையிலும் மிகுதியுள்ள இரு ஆலைகள் பொதுத் துறையிலும் உள்ளன.

இந்த ஆலைகளில் தினசரி கரும்பு அரைவைத்திறன் 40100 டன்களாகும். இந்த 20 ஆலைகளில் கூட்டுறவுத் துறையில் இரண்டும் பொதுத் துறையில் இரண்டும் ஆக 4 புதிய ஆலைகளாகும். இவற்றில் 1976-77 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் மூன்று ஆலைகளும் 1977-78-ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் ஒரு ஆலையும் தனது முதல் அரவைப் பணியைத்தொடங்கின. இவை தவிர ஐந்து கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் தனியார் துறையில் ஐந்து ஆலைகளும் தங்களது அரவைத் திறனை விரிவாக்கம் செய்து விரிவாக்கப்பட்ட திறனுடன் இயங்கி வருகின்றன.

1976-77 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் 1.54 இலட்சம் எக்டேர்களில் கரும்புச் சாகுபடி செய்யப்பட்டது. அது 1977-78 ஆம் ஆண்டில் 1.64 இலட்சம் எக்டேர்களாக உயர்ந்தது. கரும்பு உற்பத்தி முறையே 142 இலட்சம் டன்னிலிருந்து 172 இலட்சம் டன்களாக உயர்ந்தது. இதில் 30-லிருந்து 35 சதவீதம் கரும்பு சர்க்கரை உற்பத்திக்கென ஆலைகளினால் அரைக்கப்படுகிறது. 1976-77-ல் 37.91 இலட்சம் டன்கள் கரும்பு. அரைவை செய்யப்பட்டது. 1977-78-ல் இது 54.66 இலட்சம் டன்களாக உயர்ந்தது.

1978-79 நடப்பு ஆண்டிலும் சுமார் 56 இலட்சம் டன்கள் கரும்பினை சர்க்கரை ஆலைகள்

அரைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இதுவே இதுவரை தமிழ்நாட்டில் அரவை செய்யப் பட்ட கரும்பின் அதிக அளவு ஆகும். சர்க்கரை உற்பத்தி 1976-77-ல் 3.22 இலட்சம் டன் களாக இருந்து 1977-78-ல் 4.68 இலட்சம் டன்களாக உயர்ந்தது. 1978-79லும் இந்த அளவினை எட்டிட முழு முயற்சி எடுக்கப் பட்டு வருகிறது. ஆகவே கடந்த இரண்டு ஆண்டுகளில் கரும்பு உற் பத்தியிலும் கரும்பு அரவையிலும் சர்க்கரை உற்பத்தியிலும் கணிச மான அளவு முன்னேற்றம் ஏற் பட்டுள்ளது.

### புதிய ஆலைகள்

நமது மாநிலத்தில் மக்களி டையே கூட்டுறவு இயக்கம் மிகுந்த அளவில் பரப்பப்பட வேண்டுமென்றநல்லெண்ணத்தை மேற்கொண்டுள்ள தமிழக அரசு 1977-ஆம் ஆண்டில் இனித் துவக் கப்படவிருக்கும் புதிய சர்க்கரை ஆலைகள் அனைத்தும் கூட்டு றவுத் துறையிலேயே அமைக்கப் படவேண்டுமெனமுடிவுஎடுத்தது. அதன்படி நாளொன்றுக்கு 1250 டன்கள் கரும்பு அரவைத்திறன் கொண்ட புதிய சர்க்கரை ஆலை ஒன்றை தென் ஆர்க்காடு மாவட் டத்திலுள்ள பெரிய செவலை என்ற கிராமத்தில் நிறுவனம் செய்ய ஆக்க வேலைகள் துரித மாக நடந்து கொண்டு வருகின் றன. இந்த ஆலையினை அமைத்த உத்தேச செலவு ரூபாய் 650 இலட்சமாகும். இதனைத் தமிழக அரசு, கரும்பு விவ சாயிகள் இவர்களிடமிருந்து பங்கு மூலதனமாக ரூ. 227.50 இலட்சமும் மத்திய நிதி வழங் கும் நிறுவனங்களிடமிருந்து கட னாக ரூ. 422.50 இலட்சமும் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. தனது பங்கு மூலதனமாக அரசு ரூ.145 இலட்சம் வழங்கியுள்ளது. கரும்பு விவசாயிகளிடமிருந்து ரூ. 20 இலட்சம் பங்கு மூலதனமாகப் பெறப்பட்டுள்ளது. மத்திய நிதி நிறுவனங்களிடம் நிதி உதவி கேட்டு விண்ணப்பிக்கப்பட்டுள் ளது. இது கிடைப்பதற்குச் சிறிது காலம் ஆகும் என்று உணர்ந்த தமிழக அரசு, ஆலை நிர்மாணத் தேவைகளைத் தொடருவது என்று தீர்மானித்து வழிவகைகள் முன்பணமாக ரூ. 150 இலட்சம் வழங்கியுள்ளது. ஆலைத்தேவையின் அவசியத்தை எதிர் நோக்கி வரும் ஆண்டிலும் ரூ. 175 இலட்சத்தை உதவவும் முன் வந்துள்ளது. இந்தப் புதிய ஆலை 31-10-1980-க்குள் தனது அரவையைத் தொடங்கிவிடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆலை அமைப்பதால் இந்தப் பகுதியில் ஆயிரக் கணக் கான கரும்பு விவசாயிகள் பயன டைவதோடு இந்தப்பகுதியினைச் சேர்ந்த பலருக்கு வேலைவாய்ப் பும் ஏற்படும்.

### வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி

தமிழக சர்க்கரை ஆலைகளில் 1977-78ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டசர்க்கரையிலிருந்து 1,66 இலட்சம் டன்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டது. இதே மாதிரி 1978-79-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரையிலிருந்தும் கணிசமான அளவு வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. நமது நாட்டில் வேறு எந்த மாநிலத்திலிருந்தும் இந்த அளவு சர்க்கரை வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யப்பட வில்லை.ஏற்றுமதிக்கு லாயக்கான சர்க்கரையைத் தேர்ந்தெடுக்கும் குழு நமது ஆலைகளில் குறிப் பாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரையின் தரம்மிகவும் சிறப்பானதாக உள்ளது என்று கருதியதால் நாம் இந்த அள வுக்கு ஏற்றுமதி செய்ய முடிந் திருக்கிறது என்பது மகிழ்ச்சிக் குரியது.

சர்க்கரை விற்பனைக் கட்டுப் பாடு நீங்கியவுடன் வெளிச்சந்தை யில் சர்க்கரை விலை வீழ்ச்சி ஏற்பட்டதோடல்லாமல் மத்திய அரசினால் கிடைக்கும் என்று எதிர்பார்த்த சலுகைகளும் கிடைக்கப் பெறாத சூழ்நிலை ஏற்பட்டபோது, தமிழக சர்க் கரை ஆலைகளில் பெரும் பொரு ளாதார நெருக்கடி ஏற்பட்டது. அண்டை மாநிலங்களான கர் நாடகம் மற்றும் மராட்டிய மாநிலத்திலுள்ள சர்க்கரைஆலை களில் கடும் போட்டியிலிருந்து தமிழக சர்க்கரை ஆலைகளுக்கு சர்க்கரை விற்பனையில் மிகக் குறைவான விலையே கிடைத்தது. இதன் காரணமாக ஆலைகளுக்கு கரும்பு கொடுத்த விவசாயிகளுக் குக் கரும்புக் கிரயம் முழுமை யாகக் கொடுக்க இயலாத சூழ் நிலை இருந்தது.

கரும்பு விவசாயிகள் ஆலை களுக்குக் கொடுத்த கரும்பினை கிரயத்தை அவர்களுக்கு அளிப்ப தில் காலத் தாமதம் ஏதும் ஏற் பட்டு அதனால் அவர்கள் சிரமங் களுக்கு உள்ளாகக் கூடாது என் கிற நோக்கத்தில் தமிழக அரசு இந்த ஆலைகளுக்கு வழி வகைக் கடனாக ரூ. 209.33 இலட்சம் அளித்துள்ளது. இதனால் கூட்டு றவு மற்றும் பொதுத்துறை சர்க் கரை ஆலைகள் கரும்பின் முழு கிரயத்தை உடனடியாகக் கொடுக்க முடிந்தது. இதன் மூலம் பயனடைந்தோர் பல் லாயிரக்கணக்கான கரும்பு விவ சாயிகள் ஆவர்.

சர்க்கரை ஆலைகள் கிராமப் பகுதிகளில் அமைக்கப்படுகின் றன. அறுவடை செய்யப்பட்ட கரும்பு உடனடியாகச் சர்க்கரை ஆலைக்குக் கொண்டு செல்லப் பட்டு அரைக்கப்பட வேண்டும். இல்லையெனில் சர்க்கரைச் சத்து பாதிக்கப்பட்டு சர்க்கரை கட்டு மானம் குறையும். ஆகவே, கரும்பு பயிராகும் பகுதிகளில் போதிய சாலைகளமைத்தலின் அவசியத்தை உணர்ந்த நமது அரசு இம்மாதிரி சாலைகள் அமைப்பதற்காக 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 75 இலட்சம் செலவு செய்ததை 1977-78ஆம் ஆண்டிற்கு ரூ. 105.04 இலட்சம் ஆகவும்,1978-79ஆம் ஆண்டிற்கு ரூ. 109.92 இலட்சம் ஆகவும் உயர்த்தியுள்ளது. 1979-80 ஆம் ஆண்டிற்கு ரூ. 150 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பலகிராமங்களுக்குச் சாலை வசதிகள் கிடைப்பதுடன் கிராமப் பொருளாதார முன் னேற்றமும் உண்டாகும்.

### பயிற்சி நிலையம்

சர்க்கரை ஆலைகளில் பணி புரியும் இரசாயன மற்றும் பொறியாளர்களுக்கும் வல்லு நர்களுக்கும் தகுந்த பயிற்சி கொடுக்கவும் மற்றபடி சர்க்க ரைத் தொழில் சம்பந்தமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் இதுவரை இந்தியாவில் கான் பூரில் உள்ள தேசிய சர்க்கரைப் பயிற்சி நிலையம் ஒன்றுதான் உள்ளது. ஆலைகள் நல்ல முறை யில் இயங்க பயிற்சி பெற்ற ஊழி

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்.**

**(மக்களுடைய குணங்களாலாகிய) பெருமைக்கும், (குற்றங்களாலாகிய) சிறுமைக்கும் தேர்ந்தறியும் உரைகல் லாக இருப்பவை அவரவருடைய செயல்களே ஆகும்.**

*தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்*
*தீரா இடும்பை தரும்.*

ஒருவனை ஆராயாமல் தெளிவடைதலும், ஆராய்ந்து தெளிந்த ஒருவனிடம் ஐயப்படுதலும் ஆகிய இவை நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

யர்கள் அவசியம். இந்த அவசியத்தை உணர்ந்து பயிற்சி அளிக்கவும் இதர ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் நமது மாநிலத்திலேயே ஒரு நிறுவனத்தை ஏற்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் ஆலைகள் பெரும் பயனடையும்.

கழிவுப் பாகு 'மொலாசஸ்' எனப்படுவது சர்க்கரைத் தயாரிப்பில் கிடைக்கும் துணைப் பொருள்களில் ஒன்றாகும். இதுவே எரி சாராய உற்பத்திக்கு மூலப்பொருளாகும். இதற்காகத் தமிழகத்தில் 8 வடிப்பகங்கள் இயங்கிவருகின்றன. கழிவுப்பாகு, நல்லெண்ணெய், கோழி - கால் நடைத் தீவனத் தயாரிப்பு ஆகிய வற்றுக்கும் ஒதுக்கப்பட்ட பின் மிகுதி அதிகப்படியான அளவு உள்ளது. இதனை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய தமிழகஅரசு முடிவு செய்துள்ளது. இந்த நடவடிக்கையினால் சர்க்கரை ஆலைகள் பெரும்பலன் அடையும்.

உத்திரப்பிரதேச மாநிலத்தில் சர்க்கரைத் தொழிலாளர்களுக்கான ஊதிய ஒப்பந்தம் 1.10.1978 முதல் சர்க்கரைத் தொழிலாளி ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 20.40 ஊதிய உயர்வு அளித்தது. நமது அரசு அதற்கு மேலாக ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 30.40 கிடைக்க வழி செய்வதோடு இந்தக் கோரிக்கைகள் சம்பந்தமாக ஏற்படவிருந்த வேலை நிறுத்தத்தையும், அதனால் விளையவிருந்த உற்பத்திக் குறைவையும் தவிர்த்துள்ளது.

சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் கழிவுப்பாகு தவிர மற்ற பொருள்களான கரும்பு சக்கை, அழுக்கு மண் போன்றவற்றைப் பயன்படுத்தி வந்த தொழிலும் நமது மாநிலத்தின் கணிசமான அளவு முன்னேற்றம் அடையவில்லை. கரும்புச் சக்கையைப் பயன்படுத்த காகிதம் உற்பத்தி செய்ய தொழிற்சாலைகளும், அழுக்கு மண்ணைப் பயன்படுத்தி மெழுகு உற்பத்தி செய்யத் தொழிற்சாலைகளும் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் நமது மாநிலத்தில்தொழில் வளரும், வேலை வாய்ப்புகளும் பெருகும்.

# தஞ்சை மாவட்டத்தில்

## 1 கோடி செலவில் வேலைகள் முடிந்தன


வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் ரூ. 1 கோடி மதிப்புள்ள வேலைகள் நடந்தன. இன்னும் 4 ஆயிரத்து 918 வேலைகள் செய்ய வேண்டியது இருக்கிறது என்ற தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## ''வழிகாட்டி விளக்குகள்''

தஞ்சை மாவட்டத்தின் கடலோரப்பகுதிகளான ஏரிப்புறக் கரை, மல்லிப்பட்டிணம், வானமாதேவி; செந்தலைவயல், கரையூர் தெரு ஆகிய ஐந்து மீனவ கிராமங்களிலுள்ள மீனவர்கள் இரவு நேரங்களில் மீன்பிடித்துத் திரும்பும்போது அவர்களின் வசதிக்காகத் தங்களுடைய கிராமங்களைக் கண்டுகொள்ளவும், கரையேற வேண்டிய இடங்களுக்குப் பத்திரமாகச் சேரவும் மேற்குறிப்பிட்ட 5 இடங்களிலும் புதிதாக "வழிகாட்டி விளக்குகள்" அமைக்கத் தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

## 300 நெல் கொள்முதல் நிலையங்கள்

தமிழக அரசு நடப்பு குறுவைப் பட்டத்தில் நெல் விலையை உயர்த்தி ஆணையிட்டதற்கிணங்கத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் அறிவிக்கப்பட்ட உயர் விலையில் தஞ்சை மாவட்டத்தில் எல்லா வட்டங்களிலும் 300 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதுகாறும் 2408 டன் நெல், கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அனுமதிக்கப்பட்டுள்ள எட்டு அரைவை முகவர்களும் 678 டன் நெல், கொள்முதல் செய்துள்ளார்கள்.



# குறளில் உள்ளவை



குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய எல்லாம் அதில் அடங்கியுள்ளன.

— தந்தை பெரியார்



# வசதியான பயணத்திற்குத் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகம்

முதன் முதலாக நெடுந்தொலைவு விரைவுப் பேருந்து 1959ஆம் ஆண்டில் சென்னைக்கும், பெங்களூருக்கும் இடையே கிருஷ்ணகிரி வழியாகத் துவக்கி வைக்கப்பட்டது. பொது மக்கள் ஆதரவு பெருகவே மேலும் பல நெடுந் தொலைவுப் பேருந்துகள் அடுத்து விடப்பட்டன. தமிழ்நாட்டில் போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கப்பட்ட பிறகு விரைவுப் பேருந்துகள் இயக்ககம் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் 15.9.1975 முதல் இணைக்கப்பட்டு ஒரு தனிப் பிரிவாகச் செயல்படத் தொடங்கியது.

உலகத்துக்கு அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலின் தத்துவத்தைத் தொகுத்தளித்த பொய்யா மொழிப்புலவர் திருவள்ளுவர் தினமான 16.1.1980-ல் பல்லவன் விரைவுப் பிரிவு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகமாகத் தனித்து இயங்குகிறது.

### கழகத்தின் பேருந்துகளும் அதன் இயக்ககமும்

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் 378 பேருந்துகள் இருக்கின்றன. இவைகளில் 322 பேருந்துகள் அன்றாடம் 127 வழித் தடங்களில் இயக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் உள்ள எல்லா மாவட்டத் தலை நகரங்களுக்கும் முக்கிய புண்ணியத் தலங்களுக்

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின்.*

முன் உண்ட உணவு செரித்த தன்மையை ஆராய்ந்து போற்றிப் பிறகு தக்க அளவு உண்டால், உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு.

தமக்கு யாதேனும் இழிவு நேர்ந்தால் உயிர்வாழாத மானம் உடையவரின் புகழை உலகத்தார் தொழுது ஏத்தி நிற்பார்கள்.

கும், அண்டை மாநிலங்களான புதுவை, திருப்பதி, பெங்களூர், மைசூர், திருவனந்தபுரம், கோட்டயம், குயிலான் ஆகிய இடங்களுக்கும் பயணிகள் வசதியையும் சேவையும் மையமாகக் கொண்டு இரவும் பகலுமாக நாளொன்றுக்கு 1.95 இலட்சம் கி.மீ. தூரம் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

அண்டை மாநிலங்களுக்கு 32 வழித்தடங்களில் 74 பேருந்துகள் சென்று வருகின்றன. ஒரு நாளைக்கு சராசரி 35,000 பயணிகள் பயணம் செய்து இன்புறுகின்றனர். பேருந்துகளைப் பராமரிப்பதற்கும், இயக்குவதற்கும், தமிழ்நாடு முழுவதுமாக 12 பணிமனைகள் செவ்வனே செயல்பட்டு வருகின்றன. எல்லா வசதியும் நிறைந்த எட்டுப் பேருந்து நிலையங்கள் சென்னை, வேலூர், திண்டிவனம், கோவை, சேலம், திருச்சி, மதுரை, தஞ்சை ஆகிய இடங்களில் செவ்வனே செயல்பட்டு வருகின்றன. அந்நிலையங்களில் முக்கியமாக பயணிகள் உபயோகத்திற்காக நவீன முறையில் சுத்தமான கழிவறைகளும், குளியலறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. பயணிகள் தங்கள் பொருட்களை பாதுகாப்பாக வைத்துவிட்டு வெளியில் சென்றுவர (Clock room) வசதியும் உள்ளது.

வண்டிகளின் வருகை, புறப்பாடு முதலியவற்றைப் பயணிகளுக்குத் தெரிவிக்க ஒலிபரப்பு அமைப்பும் உள்ளது. பயணத்தை துவக்கும் முன்னரோ, முடிந்த பின்னரோ பேருந்து நிலையத்தில் தங்கி ஓய்வெடுக்க விரும்பும் பயணிகளின் தேவைக்கு குறைந்த கட்டணத்தில் ஓய்வு அறைகளும் உள்ளன. பயணிகள் பசியாற சிற்றுண்டிச் சாலையும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பேருந்து நிலையங்கள் பொது மக்களின் பயணத்தேவைகளைப் பெருமளவில் நிறைவேற்றும் என்று நினைத்து நெடுந்தூர பயணத்திற்கான இத்தகைய வசதிகளை தேசிய நெடுஞ்சாலையின் பல பகுதிகளில் படிப்படியாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## விரைவுப் பேருந்தின் அமைப்பு

கண் கவர் வண்ணத்திலே அழகாக குளிர் கண்ணாடிகள் பொருத்தப்பட்டு கோடை காலத்திற்கும், கார் காலத்திற்கும் உகந்த வண்ணம் பேருந்து அமைக்கப்பட்டுள்ளது. பயணிகள் வசதியுடன் அமர்ந்து, பயணம் செய்ய மிருதுவான இருக்கைகள், நெடுந்தூரப் பயணத்திற்கு ஏற்ப உறக்கம் கொள்ள சாய்வு வசதிகள் கொண்ட இருக்கைகள் பொருத்தப்பட்டுள்ளன. வண்டியில் குடிநீர் வசதி, மின் விசிறி வசதிகளுடன் பயணிகள் தங்கள் பொருட்களை வசதியாக வைக்கப் பேருந்து உள்ளும், வெளியிலும் வைப்பு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. பயணிகள் நெடுந்தூரப் பயண வசதியை முன்னிட்டு சில ''DELUX'' பேருந்துகள் 34 இருக்கைகளுடன் வசதியாக அமைக்கப்பட்டு, பொது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றன.

## குறைந்த கட்டணம் நிறைந்த சேவை

பெரும்பாலான பயணிகளுக்கு நன்மை ஏற்படும் வகையில் விரைவுப்பேருந்துகளின் கட்டணங்கள் 1976 மார்ச் மாதத்தில் கி.மீட்டருக்கு 6 காசு என்றிருந்ததை முதல் தடவையாக 1977 செப்டம்பர் திங்களில் 5½ காசாக குறைக்கப்பட்டு, மேலும் 1978 ஏப்ரல் மாதத்திலிருந்து 5 காசாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## திரைப்பட குளுமைப் பேருந்து


தென் மாநிலங்களிலேயே முதன் முதலாகத் தமிழ்நாட்டில் சென்னை-திருவனந்தபுரத்திற்கிடையே 13.9.78 முதல் குளுமைப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதைத் தொடர்ந்து சென்னையிலிருந்து பெங்களூர், கோவை, ராமேஸ்வரம் ஆகிய இடங்களுக்குத் திரைப்பட குளுமை இன்பப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகள் மன நிறைவுடன், களிப்புடன் நெடுந்தூர பயணத்தை மேற்கொள்ள ஏற்ற வகையில் ''சுகமாய் தூங்க மெத்தை, சுழலும் விசிறி, படிப்போர்க்கு தினசரி பத்திரிகைகளும்-தனி விளக்கும், செவிக்கினிய இசையமுதும், நா சுவைக்க இனிப்பும்'' வழங்கப்படுகின்றன. பேருந்துகளின் வளர்ச்சி வீதத்திற்கு ஈடு கொடுத்து பயணிகளுக்கு நல்கும் வசதிகளின் தரமும் தொழிலாளர் பணிக்கான நலன்களும் விரிவாக்கப்பட்டுள்ளன. இந்த மேம்பாட்டுச் சிறப்புக்கு பேருந்துகளின் தரமான பராமரிப்பு, பேருந்துகள் இயக்க நியதிகளின் சீரமைப்பு, வருவாய் கரைய முடியாத விழியடைப்பு, எல்லா வகைப்பணியாளர்களுக்கும், உற்பத்தித் திறன் அடிப்படையில் ஊக்கப் பணம் ஆகிய முறைகளே காரணங்கள் என்றால் அது மிகையாகாது.

## தொழிற்பட்டறையும் அதன் உற்பத்தியும்

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்துக்கென்றே திருச்சியில் நவீன முறையில் ஒரு தொழிற்பட்டறை அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இங்கு மாதத்திற்கு சராசரி 2 பேருந்துகளுக்குக் கூண்டு கட்டும் பணியும், 40 என்ஜின்கள், 1000 டயர்கள் புதுப்பித்தலும் செய்யப்பட்டு கழகத்தின் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் சுமார் 3700 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.

வசதி நிறைந்த குளு குளு இன்பப் பயணத்திற்கும், நெடுந்தூர சொகுசு பயணத்திற்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் உங்களைப் பெருமிதத்துடன் அழைக்கிறது.



# நீலகிரி மாவட்டத்தில் நிவாரணப்பணிகள்

நீலகிரி மாவட்டத்தில் புயல் வெள்ளத்தால் 1978-ஆம் ஆண்டு நவம்பரில் வரலாறு காணாத அளவில் சேதங்கள் ஏற்பட்டன. அதைத் தொடர்ந்து 1979-ஆம் ஆண்டும் அந்த ஆண்டைப் போலவே அதே நவம்பர் மாதம் ஏற்பட்ட அடை மழையின் காரணமாகச் சில இடங்களில் வெள்ளப் பெருக்கம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நிலச்சரிவுகளும் ஏற்பட்டு மிகப் பெரியச் சேதங்களை உண்டாக்கி விட்டது. தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக இயற்கையின் சீற்றத்துக்கு எழில் கொஞ்சும் நீலகிரி மாவட்டம் ஆளாகியது.

கடந்த ஆண்டு ஏற்பட்ட எதிர்பாராத இயற்கையின் சீற்றத்தின் காரணமாக இந்த ஆண்டும் அப்படி ஏற்பட்டால் அதிலிருந்து மக்களைக் காப்பது எப்படி என்ற முயற்சியில் தமிழக அரசு தொடக்கம் முதலே மிகவும் கவனமாக இருந்தது. அதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில் வெள்ள நிவாரண அலுவலகம் ஒன்றை அதற்கென்று தனியாக அமைத்துத் தனி அலுவலரை நியமித்து புயல் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெச்சரிக்கையாக மேற் கொண்டது. வானிலை அறிக்கைகளை அவ்வப்போது மக்களுக்குத் தெரிவித்து வந்தது. தாழ்வானப் பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்களை மேடான பகுதிகளுக்குப் பாதுகாப்பான இடங்களுக்குப் போக தேவையான முன்னேற்பாடுகளைச் செய்தது. துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள், சினிமா சிலைடுகள் ஆகியவற்றின் மூலமும், ஒலிபெருக்கிகளின் மூலமும் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் புயல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டன.

மாவட்டத்தின் அனைத்துப் பகுதியிலுமுள்ள ஆசிரியப் பெருமக்களுக்கும் புயல் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி பயிற்சி வகுப்புகள் நடத்த அவர்களையும் தயார் நிலையில் வைக்கப் பட்டது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பாதுகாப்பு இல்லங்கள் தயாராக வைக்கப் பட்டிருந்தன.

மருத்துவர் குழு, ஊர்க்காவல் படை, காவல்துறை மற்றும் சமூக சேவை சங்கங்கள் அனைத்தும் தயார் நிலையில் வைக்கப் பட்டிருந்தன. புயல் வெள்ளத் தால் மின்தடை ஏற்படுமானால் மாற்று ஏற்பாடாக ஜெனரேட்

*தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்*
*மெய்வருத்தக் கூலி தரும்.*

**ஊழின் காரணத்தால் ஒரு செயல் முடியாமல் போகுமாயினும், முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது கொடுக்கும்.**

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு.

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும்; அதுபோல், மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. மக்களை உஷார் படுத்துகின்ற வகையில் உதகை, குன்னூர் ஆகிய நகரங்களில் அபாயச் சங்குகள் நிறுவப்பட்டன.

கடந்த ஆண்டு அதிகமாகப் பாதிக்கப்பட்ட ஊட்டி கால்வாய் என அழைக்கப்படும் உதகை நகரின் மையப் பகுதியில் செல்லும் கால்வாயானது தீவிரமாகச் சீரமைக்கப்பட்டது. இத்தகைய முன்னெச்சரிக்கைப் பணிகளை அரசு தீவிரப்படுத்தியிருந்த காரணத்தினால்தான் இந்த ஆண்டு உயிர் மற்றும் உடமைச் சேதங்கள் பெருமளவில் தவிர்க்கப்பட்டது என்பதை யாரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது!

கடந்த 1979ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் நாள் பெருவெள்ளமும், புயலும் நீலகிரி மாவட்டத்தின் குன்னூர் பகுதியில் அதிகமாக ஏற்பட்டது. அதன் காரணமாகக் குன்னூரில் 3 உயிர்கள் வெள்ளத்திற்குப் பலியாயின. அதைத் தொடர்ந்து மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அடைமழை கனமழை பெய்து பல்வேறு பகுதிகளிலும் குறிப்பாக கோத்தகிரி, குன்னூர் பகுதிகளில் நிலச்சரிவு அதிகமான அளவில் ஏற்பட்டது. அதன் விளைவாக இந்த ஆண்டு மொத்தத்தில் 1375 குடிசைகளும், 120 வீடுகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. அதில் 175 குடிசைகளும், 13 வீடுகளும் அடியோடு இழந்து நாசமாயின.





மழை மற்றும் நிலச்சரிவுக்கு மொத்தம் 9 மனித உயிர்கள் பலியாகி உள்ளனர். 3 கால்நடைகள் உயிரிழந்தன.

மிகவும் தாழ்வானப் பகுதிகளில் குடியிருந்த சுமார் 1837 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. 1800 குடும்பங்களைச் சார்ந்த 13,920 நபர்களை 10 பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைத்து உணவு வழங்கப்பட்டது.


காலரா மற்றும் டைபாய்டு போன்ற நோய்கள் பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்டம் முழுவதும் 39,800 நபர்களுக்குத் தடுப்பு ஊசி போடப்பட்டு, அதன் பயனாக இந்த ஆண்டு இந்த மாவட்டத்தில் தொத்து நோயே உண்டாகாமல் தடுக்கப்பட்டது.

இந்த ஆண்டு மழையின் காரணமாக இந்த மாவட்டத்தில்

மொத்தம் 410 இடங்களில் மாவட்டம் முழுவதும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. 60 இடங்களில் பெரிய அளவிலும், 350 இடங்களில் சிறிய அளவிலும் நிலச்சரிவு ஏற்பட்டு போக்குவரத்து தடைப்பட்டது. பெரிய பெரிய தேயிலைத் தோட்டங்கள் பாதிக்கப்பட்டன. உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன. மேலும், மழை நிலச்சரிவு காரணமாக 264 பாலங்களில் உடைப்பு ஏற்பட்டது. தேயிலைத் தோட்டங்களில் மழை காரணமாக வேலைசெய்ய முடியாத நிலை ஏற்பட்டதால் ரூ. 21 இலட்சம் இழப்பு ஏற்பட்டது. மேலும், மழையினால் ரூ. 34 இலட்சம் மதிப்புள்ள தேயிலைப் பயிர்கள் சேதம் அடைந்தன. மொத்தம் ரூ. 55 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டது.



மழை, நிலச்சரிவு காரணமாக நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு பயிர் மிக அதிக அளவில் சேதம் அடைந்தது.



நிவாரணப் பணிகள் நடைபெறுகின்றன

ஆக, இந்த ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் மழை, நிலச்சரிவு காரணமாக ரூ. 5½ கோடி சேதம் அடைந்துள்ளது எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசுக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் சொத்துக்கள் ரூ. 1 கோடியே 65 இலட்சமும், நகராட்சி மற்றும் ஊராட்சிக்குச் சொந்தமானவைகள் பழுதடைந்ததில் 1 கோடியே 50 இலட்சமும், பொதுமக்களது உடைமைகள் 2 கோடியே 9 இலட்சத்து 50 ஆயிரமும் ஆகும்.

வீடு இழந்தவர்களுக்கும், மழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணமாக ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் வழங்கப்பட்டுள்ளது. அரசு தொடர்ந்து நிவாரணப் பணிகளைச் செய்து வருவதுடன் நிலச்சரிவைத் தடுக்க தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. புவியியல் நிபுணர்கள் நீலகிரி மாவட்டத்தில் முகாமிட்டு ஆராய்ச்சி நடத்தி வருகின்றார்கள்.

தமிழ்நாடு அரசு, மத்திய அரசிடம் நிதியுதவி கேட்டுள்ளது. மத்திய அரசும் மத்தியக் குழு ஒன்றை நீலகிரி மாவட்டத்திற்கு அனுப்பி, அந்தக் குழு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளது.

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றோரோடு ஏனை யவர்.**

அறிவு விளங்குவதற்குக் காரணமான நூல்களைக் கற்றவரோடு கல்லாதவர், மக்களோடு விலங்குகளுக்கு உள்ள அவ்வளவு வேற்றுமை உடையவர்.

*தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.*

கற்புநெறியில் தன்னையும் காத்துக்கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றித் தகுதியமைந்த புகழையும் காத்து, உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண்.

# நலிந்த சிறிய தொழிற்சாலைகளுக்கு தமிழக அரசின் உதவி

நலிந்த தொழிற்சாலைகளுக்கு உதவி என்பது, இதுவரை பெரிய தொழிற்சாலைகளுக்கு மட்டுமே கிடைத்து வந்தது. அது சிறிய தொழிற்சாலைகளுக்கு இல்லாமல் இருந்தது. இனிமேல் நலிந்த சிறிய தொழிற்சாலைகளுக்கும் இந்த உதவி வழங்கப்படும்.

சிறிய தொழிற்சாலைகளுக்கு வங்கிகள் கடன் கொடுப்பதற்காக முன்பணம் கட்டவேண்டியதில் பாதியை மாநில அரசே வட்டி இல்லாக் கடனாகக் கொடுக்க முன் வந்துள்ளது. இந்தப் பிரச்சனை குறித்து தமிழக அரசு ஆய்ந்தறிந்து, இதிலுள்ள இன்னலைத் தவிர்க்கும் பொருட்டு, ஈவுத் தொகைத்திட்டம் (Margin Money Scheme) ஒன்றைச் செயல் படுத்த முடிவு எடுத்துள்ளது.

இத்திட்டம் குறித்து அரசு ஆணையிலுள்ள சிறப்பு அம்சங்கள் வருமாறு:—

1. இத்திட்டத்தின் கீழ் மறு வாழ்வுக்கான நிதி தேவைப்படும் நிறுவனங்கள் தமிழ்நாடு சிறு தொழில்நிறுவனத்திற்கு (சிட்கோ) உரிய படிவத்தில் விண்ணப்பிக்கலாம். பதிவுக்கட்டணம் எதுவும் விதிக்கப்படமாட்டாது.

2. இது பற்றித் தமிழ்நாடு சிறு தொழில் முன்னேற்ற நிறுவனம் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மற்றும் சம்பந்தப்பட்ட வங்கிகளுடன் கலந்து ஆலோசித்து நலிவுபெற்ற நிறுவனங்களின் மறுவாழ்வுக் குழு முன்பு அதன் பரிசீலனைக்காக வைக்கப்படும்.

மறுவாழ்வு அளிக்கத் தகுந்த வெளிப்படையாகத் தோன்றும் தொழில் பிரிவுகள் என்று ''எஸ்-ஐ.ஆர்.சி.''யால் கருதப்படும். தொழில் பிரிவுகள் இத்திட்டத்தின்கீழ் ஈவுத்தொகை உதவி பெறத் தகுதியானதாகும்.

3. நலிவுற்ற நிறுவனமும் தொழில் முனைவோரும்கொண்டு வர வேண்டிய கூடுதல் முதலீட்டில் 50 சதவிகிதம் வட்டியில்லாக் கடனாக 'சிட்கோ' அளிக்கும். இது போன்ற கடன்கள் தொழில் முனைவோர் கொண்டு வரவேண்டிய பங்கு மூலதனத்தில் ஒரு பகுதியாகக் கருதப்படும்.

4. இத்திட்டத்தின் விளைவாக ஏற்படும்நிர்வாகச் செலவு வகைக்காக இது போன்ற கடன்கள் மீது ஒரு சதவிகிதம் சேவைக் கட்டணமாக வசூலிக்கப்படும். கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலம் நலிவுற்ற தொழில்கள் மறு வாழ்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.

இருப்பினும் கடன்களை ஒத்தி வைப்பதற்கான காலம் நான்கு ஆண்டு காலத்திற்கு மேல் போகக் கூடாது என்றும் திருப்பிச் செலுத்துவதற்கான காலம் ஒத்தி வைப்பு உள்பட எப்படியிருப்பினும் ஒன்பது ஆண்டுகளுக்கு மேல் போகக்கூடாது.

5. விதி விலக்கு அளிக்கப்படல் சம்பந்தமாக நலிவுற்ற தொழில்கள் மறு வாழ்வுக் குழுவின் பரிந்ரையின் அடிப்படையில் தொழில் முனைவோர் கொண்டு வர வேண்டிய கூடுதல் முதலீட்டில் 75 சதவிகிதம் வரை வட்டியில்லாக் கடனாக சிட்கோ அளிக்கும்.

இது போன்றவற்றில் தொழில் முனைவோர் கொண்டுவர வேண்டிய கூடுதல் முதலீடு விகிதாச்சார அடிப்படையில் 25 சதவிகிதமாகக் குறையும்.

6. ரூ. 20,000க் குறைந்த ஈவுத் தொகை கடனை எஸ்.ஐ.ஆர்.சி.யின் துணைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சிட்கோ வழங்கும். ரூ.20,000க்கு மேல் அதிகமாகத் தேவைப்படும் ஒவ்வொரு தொழில் பிரிவுக்கும் எஸ்.ஐ.ஆர்.சியின் பரிந்துரையின் அடிப்படையில் கடன் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கான செலவை சிட்கோ மூலம் அரசு ஏற்கும். இதற்கென சிட்கோவிற்கு அரசு தேவையான வட்டியில்லாக்கடன் தொகையை அளிக்கும். இக்கடனை நாளாவட்டத்தில் சிட்கோ திரும்பிப் பெறும் கடன்கள் மூலம் திரும்பிச் செலுத்தும்.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் செலவுக்காக அரசு சிட்கோவிற்கு ரூபாய் 25 இலட்சம் வட்டியில்லாக் கடனாக வழங்கும்.

## பெண்களுக்கு இலவச தட்டச்சுப் பயிற்சி

தமிழ்நாடு அரசு சமூக நலத் துறையினரால், சென்னையில் உள்ள 15லிருந்து 30 வயதுகுள் இருக்கும் பெண்களுக்கு இலவச தட்டச்சுப் பயிற்சி 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் அக்டோபர் மாதம் முடிய நடைபெறவிருக்கிறது.

இவர்கள் பள்ளி இறுதி வகுப்பில் மொத்தத்தில் 50 (விழுக்காடு) மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். பெற்றோருக்கு ஆண்டு வருமானம் ரூ. 3000க்குள் இருக்க வேண்டும். இதற்கான வட்டாட்சியரின் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். இவர்களுக்கு இப்பயிற்சிக்காக ரூ. 15 தரப்படும். இடையே பயிற்சியை நிறுத்துபவர்கள் இத்தொகையினைத் திருப்பித் தருதல் வேண்டும்.

# பொங்கல் விழா!



சிறுவை. நச்சினார்க்கினியன்

தமிழ்நாட்டிற்குப் பொங்கல் விழா ஒன்றுதான் பெரும் விழா. இவ் விழாவினைத் தமிழகத்தில் வாழும் எல்லாச் சமயத்தினரும், சாதியினரும் கொண்டாடி மகிழ்கின்றனர். எனவே இதனைத் தமிழர் திருநாள் என்று கூறியதிலும் வியப்பில்லை. இப் பெருவிழா **போகி, பெரும் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல்** (அல்லது கண்ணுப் பொங்கல், கன்னிப் பொங்கல்) என்று கொண்டாடும் வழக்கம் வாழையடி வாழையாக அமைந்து வந்துள்ளது. இவ்விழா, என்று தோன்றியது எனத் திட்டமாகக் கூறமுடியாது.

இப் பொங்கல் விழாவினைத் தமிழன் இயற்கைச் சக்திக்கு-ஆற்றலுக்குக் காட்டும் நன்றி விழா எனக் கூறின் மிகையாகாது. உழவர்கள் - வேளாண்மை செய்வோர் தங்கள் உழைப்பின் வெற்றி விழாவாக—மகிழ்ச்சி விழாவாகக் காண்கின்றனர்.

ஆடி முதல் மார்கழிவரையில் தமிழகத்தில் நெல்பயிரிடும் காலம். மழையின் உதவியால் இரவும் பகலும் கழனியில் உழவர்கள் இடைவிடாது உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழி இறுதியில் தங்கள் வீட்டிற்குக் கொண்டு வருவர். அதனைச் சுற்றம் சூழவும் தம் மனைவி மக்களுடனும் மிக்க மகிழ்ச்சி பொங்க இவ்விழாவை நடத்துவர்.

மார்கழிக் கடைசி நாள் போகி எனவும் அதனைச் சார்ந்த தைத் திங்கள் முதல் மூன்று நாள் பொங்கல் விழா எனவும் கொண்டாடுவர்.

**போகி** மார்கழியின் இறுதி நாள். போகி என்பது இந்திரனுக்கு ஒரு பெயர். போகத்தை நுகர்பவன். புதிய பொருள்களை விரும்புவான். பழம் பொருள்களை நீக்குவான். போகியன்று விடியற்காலையிலேயே பழம் பொருள்களையெல்லாம் மாற்றிப் புதுப் பொருள்களாகிய நெல், பால், துவரை, இஞ்சி, மஞ்சள், கரும்பு முதலியவற்றைத் திரட்டிச் சேர்த்துக்கொள்வர். இந்திரன் மழைக்கு உரியவன். மழைக்கு நன்றி செலுத்தும் முகத்தான் எடுக்கும் விழா எனக் கொள்ளல் தகும்.

அடுத்துத் தைத் திங்கள் முதல்நாள் உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாள். இது பொங்கற் புதுநாள். அன்று யாவும் புதியனவாகவே இருக்கும். புத்தாடைகள் அணிந்து புதிய நெல்லைக் குற்றி எடுத்த அரிசியைப் புதிய பானையில் இட்டுப் பொங்குவர். பானைகளில் புதிய மஞ்சளைப் புதிய கயிற்றில் கட்டி, காப்பாக அணிவர். வாசலில் கோலமிட்டு, செம்மண் தீட்டி, பானைகளை வைத்துப் பொங்கலிடுவார்கள். எத்தனை பானைகள் வைக்கவேண்டும் எனவும் எவ்வளவு அரிசி போடவேண்டும் என்றும் சில குடும்பங்களில் வழக்கம் உண்டு. பொங்கல் பானை பொங்கி வரும்போது, உழவர்கள் மனைவி மக்களுடன் ''பொங்கலோ பொங்கல்'' என ஆரவாரித்து மகிழ்ச்சி கொள்வர்.

ஞாயிற்றின் பேரொளி மழைக்குக் காரணமாய் அமைந்து உழவாகிய அடிப்படைத் தொழில் நிகழ்ந்து நெல், பருப்பு, கரும்பு, மஞ்சள், பூசணி, மலர்கள், கனி வகைகள் அனைத்தும் உண்டாவதால் இவைகளையெல்லாம் ஞாயிற்றுக்குப் படைத்து மகிழும் செய்ந்நன்றி விழாவாக மலர்ச்சியடைகிறது. நக்கீரர் ''பொருள் பத்து நாழிகைக்கு மேல்'' என்று கூறி ஒரு நாளின் இடைப்பகுதியை அதற்கு உரியதாக்குவர். அதனால் உச்சி வேளையில் நன்கு சுடர் விட்டு மிளிரும் ஞாயிற்றுக்குப் பெரும்பொங்கல் இடுவது வழக்கமாயிற்று.

தைத் திங்கள் இரண்டாம் நாள் **மாட்டுப்**

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.*

**கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல், அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.**

வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது. மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது.

**பொங்கல்.** உழவுக்குப் பாடுபட்ட, சேவை செய்த மாடுகளை நன்றாகக் குளிக்கச் செய்து அழகுறப் புனைந்து, கொட்டிலில் கட்டி பொங்கற் சோறு படைத்து வழிபடுவார்கள். சில இடங்களில் எருதுகளை வண்டிகளிற் பூட்டி, ''பொங்கலோ பொங்கல்'' என ஆரவாரித்து ஓட்டிக்கொண்டு ஊர்வலமாக அழைத்துச் சென்று மகிழ்வடைவர். பொங்கலன்று அரிசி கழுவிய நீரை எடுத்துச் சென்று கழனிகளில் வைகறையில் தெளித்துப் பொங்கலோ பொங்கல் என எழுப்பும் ஓசை கழனிகளெங்கும் இனிமையாக ஒலிக்கும். அன்று மாடுகளை எந்த வேலைக்கும் பயன்படுத்த மாட்டார்கள்.



சமய நெறி எவ்வாறு ஆயினும் தொண்டுக்கு, சேவைக்கு உகந்தது எருது. மொகஞ்சதரோவிலும், அரப்பாவிலும் கிடைத்த பழஞ்சான்றுகளில் மாடுகளின் உருவங்கள் காணப்படுகின்றன. என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதுதான் அதன் இலட்சியம். உழவுக்கு—வேளாண்மைத் தொழிலுக்கு அணுக்கத் தொண்டனாய் இருந்து தொண்டு செய்வது எருது. நாலடியார் எனும் நூல், ''மானிடனே! நீ பெற்ற உணவு எருதுகளின் உழைப்பால் கிடைத்தது. அதனைப் பலரோடு கூடியிருந்து உண்பாயாக'' என்ற அழகிய கருத்தினை, ''பகடு நடந்தகூழ் பல்லாரோடு உண்க!'' என்று பேசும்.

அடுத்து தை மூன்றாம் நாள் **காணும் பொங்கல்.** அன்று ஒருவரை ஒருவர் கண்டு மகிழ்வர். தொழிலாளர்கள் உழவர்கள் வீடு தோறும் சென்று வணங்கி அன்பளிப்புப் பரிசுப் பொருள்களைப் பெற்று மகிழ்வர். இதனைச் சிலர் கன்னுப் பொங்கல் என்றும் சிலர் கன்னிப்பொங்கல் என்றும் சொல்வர். சில வட்டாரங்களில் கன்னிப் பெண்கள் பொங்கல் இடுவதால் கன்னிப் பொங்கல் என்பர்.

இச்சமயத்தில் நாம் சில கருத்துக்களை நினைவு கூர்தல் நலம் பயக்கும். தைத்திங்கள் முதல் நாளன்று ஞாயிறு மகர ராசியில் வந்து உத்தராயணம் தொடங்கும். இதனை மகர சங்கராந்திப் பண்டிகை என்பர். உழவர்களே அன்றி ஏனையோர் யாவரும் கொண்டாடி மகிழும் நாளாக இது அமைந்துள்ளது.

சங்க நூல்களில் ஒன்றாகிய கலித்தொகையில் ஆயர் விழாவாக வரும், ஏறு தழுவல் என்பது அக்காலத்தில் பெண்களை மணப்பவரைத் தேர்ந்தெடுத்தலாகக் காணப்பெறும் ஒரு நிகழ்ச்சி. இக் காலத்தில் சில இடங்களில் மஞ்சு விரட்டு விழாவாக மாட்டுப் பொங்கலன்று நடைபெறுவதைக் காணலாம்.

''சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்'' என்பது தமிழ் மறையின் கருத்து. கருமான் கையில் தோன்றிய ஏராயினும் மின் சக்தியால் விளைந்த ஏராயினும் உலகம் உழவின் பின்னால்—ஏரின் பின்னால்—அதனை இயக்கும் வேளாண்மையினர் பின்னால். வேளாண்மை செய்பவர்கள் தமக்காகவும் பிறர்க்காகவும் செய்கின்றனர். வேளாண்மை என்ற சொல்லுக்கு உதவி என்பதுதான் சிறந்த பொருள்.

காலமெல்லாம் உழைத்த உழவன் நிலத்தில் இவ்வாண்டு கிடைத்தது இத்தனை மூட்டைகள் எனின் அடுத்த ஆண்டு மேலும் சில மூட்டைகள் அதிகம் பெற உழைக்க வேண்டும் என்பது அவனது ஆவல். அஃதே போல் சொல்லேர் உழவர்களாகிய இலக்கியச் செல்வர்கள்—தமிழர்கள் யாவரும் இவ்வாண்டு இந்த வகையில் நாம் நமது இலக்கியச் செழுமையைக் கண்டோம், இனி வரும் ஆண்டில் மேலும் பல புத்தம் புதிய இலக்கியங்களைப் படைக்க வேண்டும் என்ற கருத்தில், பேராசிரியர் கா. நமச்சிவாயர் அவர்கள் பொங்கல் திருநாளன்று தமிழ்த் திருநாளாகக் கொண்டாடக் கற்றுத் தந்தார். 1934-ஆம் ஆண்டில் அவர்கள் கொண்டாடத் தொடங்கினார்கள்.

இச் செய்தியைப் பேரறிஞர் அண்ணா அவர்கள், 1952, 53ஆம் ஆண்டுகளில் சென்னைக் கடற்கரை திராவிடர் திருநாள் கூட்டத்தில், ''அதோ தெரிகின்றதே மாநிலக் கல்லூரி, அங்குதான் பேராசிரியர் கா.நமச்சிவாயர் தமிழ்ப் பணி புரிந்து வந்தார். அவர்தான் முதன் முதலில் இந்தப் பொங்கல் திருநாளினைத் தமிழ்த் திருநாளாகக் கொண்டாட நமக்கெல்லாம் கற்றுத் தந்தார். அவர்கள் அன்று எடுத்த தமிழ்த் திருநாள்தான் தமிழர் திருநாளாகி இன்று திராவிடர் திருநாளாக மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்'' என்று உள்ளப் பூரிப்புடன் கூறிய சொற்கள் நம் உள்ளத்தில் பசுமையாக இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



எழில்மிகு
உங்கள்
மொழி வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

பதிவு எண். M. 8676

